
சொர்க்கத்தைக்
கண்டேனடி
ரமணிசந்திரன்

# சொர்க்கத்தைக் கண்டேனடி

ரமணிசந்திரன்

# அத்தியாயம் - 1

“பட்டணத்து சொகுசு சுந்தரிகளுக்கு இது ஏற்ற இடம் அல்ல. பிரித்த மூட்டையைத் திரும்பக் கட்டிக்கொண்டு வந்த வழி பார்த்துத் திரும்பிப் போய்விடுவது நல்லது!”

எவ்வளவு அலட்சியமாகச் சொல்லிவிட்டான்!

இப்படி ஒரு கிராமத்துக்கு அவள் எதற்காக வந்தாள்? என்ன பாடுபட்டுத் தங்கையை இங்கே அழைத்து வந்தாள்? அடுத்தொரு அபிப்பிராயத்துக்குக் கூட ஆளில்லாமல் தன்னந்தனியே திட்டமிட்டுத் தங்கையையும் ஒத்துக் கொள்ள வைத்து, இங்கே வந்து இந்த வீட்டை வாங்கிக் குடியேற அவள் பட்ட சிரமம் என்ன?

மற்றவையாவது வேலைகள். இப்படித்தான் என்று ஒன்றைத் தொடங்கிவிட்டால் செய்துகொண்டே போய் முடித்து விடலாம். ஆனால் திட்டமிடல்?

முழுப் பொறுப்பாகத் தான் எடுத்த முடிவு சரிதானா, சரிதானா என்று இன்று வரை அவளது மனம் பதைப்பது யாருக்குத் தெரியும்?

எதுவுமே தெரியாமல் திரும்பிப் போகச் சொல்வதா?

சிலுசிலுவென்று சுத்தமான காற்று முகத்தில் மோத நடந்த சுகம் அடியோடு மறைந்து போனது. பத்தடி தூரத்தில் வாராவதி ஒன்று தெரிந்தது. மழைக்காலத்தில் தண்ணீர் தேங்காமல் செல்லுமாறு அமைக்கப் பட்டிருக்க வேண்டும். நடப்பது அலுத்துவிட, வாணி மெல்லச் சென்று வாராவதியின் ஒரு பக்கச் சுவர் மேல் அமர்ந்தாள்.

மறக்க விரும்பியது எல்லாம் முட்டி மோதிக்கொண்டு வெளிக் கிளம்பின.

பெரிய இழப்பு தாயின் மறைவு! அதைச் சமாளித்து மீளுமுன் என்னென்ன பாதிப்புகள்!

முக்கியமாகத் தங்கை என்னமாக மாறினாள்! அடுத்த அம்மா என்று அழைப்பவள் விரோதியாகவே எண்ணிவிட்டாளே! என்ன மாதிரி அதைக் காட்டினாள்!

“தட்”டென்று அறைந்து சாத்தப்பட்ட கதவு! அக்காவின் முகத்திலேயே அறைந்து சாத்துவதாகக் கற்பனையோ? இது போலச் சிறுபிள்ளைத்தனமாக ஏதாவது செய்வது சின்னவளுக்குப் பழக்கம்தான்.

அதைத் தாண்டி தட் தட் என்று இன்னும் அழுத்தமான காலடி ஓசை. அதுவும் உள்ளிருப்பவளுக்குக் கேட்க வேண்டும் என்றே பலமான ஒலியெழுப்பும் விதமாக வைக்கப்பட்டவையே.

மற்றபடி பானுவின் நடை ஒயிலாக இருக்கும். தரையில் கால் படுகிறதோ இல்லையோ என்கிற மாதிரி மென்மையான துள்ளலுடன் இருக்கும்.

எத்தனை முறை தாயோடு சேர்ந்து தங்கையின் நடையை வாணி ரசித்திருக்கிறாள்! ஆனால் இப்போது?

ஒன்றும் செய்ய இயலாத நிலைதான் பெரிதும் பரிதவிப்பாக இருந்தது

அக்கா, அக்கா  என்று கொஞ்சுகிற தங்கை என்னவெல்லாம் சொல்லிவிட்டாள்!

சொன்னதோடு நின்றிருந்தால்கூடப் பரவாயில்லை. கொட்டித் தீர்த்துவிட்டு, வீட்டை விட்டு வெளியேறியும் போய்விட்டாளே!

இவளே இன்னும் சின்னப்பிள்ளை என்றால் கன்னத்தில் ஓங்கி ஓர் அறைவிட்டு, “வாயை மூடிக்கொண்டு சும்மா கிடடீ, கழுதை” என்று மிரட்டி அடக்கலாம். பிடித்து இழுத்துவந்து அறைக்குள் தள்ளிக் கதவை அடைத்தும் வைக்கலாம்.

ஆனால் ஓர் இருபது வயதுப் பெண்ணை எப்படிக் கட்டுப்படுத்துவது?

நல்லதென்று நினைத்துக் கண்டிப்பு காட்டி அவள் ஏதாவது செய்யப் போய், இம்மென்றால் எகிறும் தங்கை மாற்ற முடியாத பெரிய சிக்கலில் தானாகப் போய் மாட்டிக் கொள்ளக் கூடாதே!

இப்போதே அப்படித்தானோ என்று அவளது நெஞ்சு அன்று பதறியது யாருக்குத் தெரியும்?

தன்னால் தீர்க்க இயலாத எந்தப் பிரச்சினையிலும் வாணியின் ஒரே புகல்,  சிக்கலை நல்லவிதமாகத் தீர்க்குமாறு தாயிடம் முறையிடுவதுதான். அன்றும் அதே போலத் தாயின் படத்தின் முன் சென்று நின்றாள்.

அக்கா வாணிக்குத் தங்கையிடம் வருத்தம் என்றால், பானுவுக்குத் தமக்கை மேல் பயங்கரக் கோபம்!

அக்கா அக்கா என்று பார்த்தால், கடைசியாக தங்கைக்கே வில்லியாகிவிட்டாளே!

நாலு வயது மூத்தவள்! அம்மா இல்லாததற்கு, நல்ல அக்காவாகப் பொறுப்பாகச் செயல்பட்டுத் தங்கையின் மகிழ்ச்சிக்கு உதவுவாள் என்றால் அவளைப் பொறாமைப் பேயல்லவா பிடித்து ஆட்டுகிறது!

பார்க்க அவளும் மோசமில்லைதான். ஆனால் அவளை யாரும் திரும்பிப் பார்க்கவில்லை என்றால், அதற்காகக் கூடப் பிறந்தவளின் நல்வாழ்வையா அழிப்பது? அவளுடைய அன்பான காதலனைப் பற்றிப் படு கேவலமாக என்னவெல்லாம் சொல்லிவிட்டாள்!

அதுவும் நல்லதுதான். இல்லாவிட்டால் அக்கா இவ்வளவு மோசம் என்று யாரேனும் அவளிடம் சத்தியம் செய்தால் கூடப் பானு நம்பியிருக்க மாட்டாளே!

ஏன், அவளது உயிருக்கு உயிரான ராகுல் சொன்னதைக் கூட அவள் அதுவரை நம்பவே இல்லையே! "என் அக்காவைப் பற்றி உனக்குத் தெரியாது ராகுல். அவள் ரொம்ப நல்லவள். எனக்கு இரண்டாவது தாயாக்கும்!" என்று வாணிக்காக வக்காலத்து வாங்கினாளே!

கடைசியாக ராகுலுக்குத்தான் அக்காவைப் பற்றி நன்றாகப் புரிந்திருக்கிறது!

நல்லவேளை! இப்போதாவது அவளும் தெரிந்து கொண்டாளே! இனி அக்காவின் முகத்திலேயே முழிக்கக் கூடாது!

நேரே ராகுலிடம் செல்ல வேண்டும். நடந்ததை ஒப்புவிக்க வேண்டும். அப்புறம் அவன் சொல்வது போலச் செய்ய வேண்டும்.

அவனும்தான் வேறென்ன சொல்வான்? திருமணம்தான். பதினெட்டுக்கு மேலே இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டதால், அதில் பிரச்சினை வர வழியில்லை. நிலைமையை எடுத்துச் சொன்னால் போலீஸ் ஸ்டேஷனிலேயே பண்ணி வைத்து விடுவார்கள்!

அது பற்றி வாணியிடம் . . ராகுலோடு உயிர்க் காதல், அவனோடு திருமணம் என்று நல்லபடியாக எடுத்துச் சொல்லப் போகத்தான் இன்று இவ்வளவு பிரச்சினை ஆகிவிட்டது!

கெட்டவன், குடிகாரன், பெண் பித்தன் . . . ராகுலனைப் பற்றி என்னென்ன சொல்லிவிட்டாள்! கொலைகாரன், கொள்ளைக்காரன் என்று கூறவில்லை. அவ்வளவுதான்!

இந்த அக்கா இவ்வளவு மட்டமாகிப் போவாள் என்று அவள் கொஞ்சமும் எண்ணியதில்லை! கடைசியாகப் பார்த்தால், வெறும் பொறாமை! ஆனாலும் அது இப்படியா மனிதரை ஆட்டி வைக்கும்?

ஆனால் ஒன்று! என்னதான் மூத்தவளாய் இன்று வரை அன்பு காட்டியவளே என்றாலும் அக்கா சொல்வதை நம்பித் தன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ள பானுமதி தயாராக இல்லை.

பெயரிலேயே மதியை வைத்திருக்கிற அவளா இந்தப் பொறாமைக்கார அக்கா பேச்சை நம்பி அடி முட்டாளாய்த் தன் வாழ்வை அழித்துக் கொள்ளுவாள்?

நாட்டின் தலைவிதியையே நிர்ணயிக்கும் உரிமையை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே பெற்றவள்! அவளுக்குத் தன் வாழ்வை என்ன செய்வது என்று தெரியாதாக்கும்! தெரியாத முட்டாள் என்றுதானே அக்கா எண்ணிவிட்டாள்!

அப்படி நினைத்ததற்கே அவளுக்கு ஒரு தண்டனை கொடுக்க வேண்டும்.

என்ன செய்யலாம் என்று சுற்றுமுற்றும் பார்த்தவளுக்கு வாணியின் ஸ்கூட்டி கண்ணில் பட்டது. அது, வாணியின் வருமானத்தில் வாங்கியதுதான். ஆனால், பானுவை விடவும் நாலு ஆண்டுகள் அதிகமாக அம்மாவின் உழைப்பில் சாப்பிட்டிருக்கிறாள்தானே? அதனால் இதைப் பொதுச் சொத்தாகத்தான் கருதவேண்டும்!

மாலையில் ஸ்கூட்டியில் காலனிக்குள்ளேயே சுற்றிய பானு சாவியை வண்டியில் இருந்து எடுத்துப் போக மறந்திருந்தாள்.

குற்ற உணர்வுக்குப் பதிலாக, இப்போது அதுவே நல்ல சகுனமாகத் தோன்றியது.

அவள் பக்கம் நியாயம் இருப்பதால்தான், ஸ்கூட்டியின் சாவிக்காக மறுபடியும் உள்ளே போகத் தேவை இல்லாமல் போய்விட்டிருக்கிறது! நல்லதுதான் என்று வண்டியை எடுத்துக்கொண்டு பானு கிளம்பிவிட்டாள்.

செல்லச் செல்ல அவளுக்குச் சற்று யோசனைதான். முக்கியமாக எங்கேனும் செல்வதற்காக வாணிக்கு ஸ்கூட்டி தேவைப்பட்டால்?

சே! இன்னும் அவளைப் பற்றி என்ன கவலை? நினைத்துப் பார்க்க வேண்டியது ராகுலைப் பற்றி மட்டும்தான்! சந்தோஷமாக . . சல்லாபமாக!

ஆனால் அதிலும் ஒரு சிக்கல் இருக்கிறதோ? பொதுவாக ராகுலனைச் சந்திப்பதற்கு இது கொஞ்சம் மாறுபட்ட நேரம்தான்!

இது நண்பர்களுக்கு உரிய நேரம் என்று ராகுல்

சொல்லியிருக்கிறான். தொழில் நாட்டு நடப்பு என்று பல்வேறு முக்கிய விஷயங்களை அவனும் நண்பர்களும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்கிற தருணம்! உறவிலும் தொழிலிலும் அவனை அறிந்தவர்கள் யாரும் இந்த நேரத்தில் குறுக்கிடவே மாட்டார்களாம்.

ஆனால், அவள் வெறும் "அறிந்தவள்" மட்டுமில்லையே! எதிர்கால மனைவி ஆயிற்றே! அவளுக்கு இல்லாத உரிமையா?

வாகனத்தைப் பார்க்கிங் பகுதியில் நிறுத்திவிட்டு, யோசனையோடு லிஃப்டை நாடிப் போனாள். மேல் தளம். ரூஃப் கார்டன். அங்கே தான் ராகுல் நண்பர்களோடு இருப்பான்.

சரியாகச் சொல்வதானால் "தண்ணி"யடித்துக் கொண்டிருப்பான் என்பது அவளது ஊகம்.

ஆனால் பிசினஸ் பேசுவதால் அளவோடு நிறுத்திக் கொள்வார்களாம்!

எப்படி எல்லாவற்றையும் பற்றி மறைக்காமல் அவளிடம் சொல்லியிருக்கிறான். இவனைப் போய் ஏமாற்றுக்காரன் என்றாளே இந்த அக்கா!

கடைசித் தளம் வரை லிஃப்டில் செல்ல  பானுவுக்கு மனமில்லை. திடீரென்று போய் எதிரே நின்றால் அவனுக்குச் சங்கடமாகி விடலாம். அதைவிட மெல்லப் படியேறிப் போய், நண்பர்களின் பேச்சு சற்று அடங்குகிறபோது நேரம் கவனித்து உள்ளே போகலாம் என்று தோன்றவே, மொட்டை மாடிக்கு முந்தின தளத்தில் லிஃப்டை விட்டு வெளியேறி, மெதுவே படிகளில் ஏறத் தொடங்கினாள்.

கசமுச என்று தெளிவற்ற பேச்சு காதில் விழலாயிற்று. வார்த்தைகள் தெளிவற்று இருந்தாலும் ராகுலனின் குரல் பானுவின் உள்ளத்தைக் குளிர்வித்தது.

இதோ கடைசித் திருப்பம். குரல்கள் தெளிவாகக் கேட்கலாயின. ராகுலனின் குரல் ஓங்கி ஒலித்தது!

"என்னமோ தீண்டத் தகாதவன் போல என்ன பிகு பண்ணினாள் அந்த அக்காக்காரி! தப்புத் தண்டா தெரியாத உயர்ர்ர் . .ந்த குடும்பமாம்! என்ன பெரிய குடும்பம்? கடைசியில் அவள் தங்கையை, என் காலடியில் விழ வைத்துவிட்டேன் பார்!" என்று யாரைப் பற்றியோ கர்வத்துடன் சொல்லிக் கொண்டிருந்தான்.

காலடியில் கிடக்கும் அந்தத் தங்கை யார்? பிகு பண்ணிய அக்காவுமே யாராக இருக்கக் கூடும்? அவள் குடும்பத்திலுமே அக்காவும்

தங்கையும்தான். அவர்கள் மட்டுமேதான்! அம்மாதான் இல்லையே!

ஓடிப்போய் ராகுலின் தோளில் சாய்ந்துகொண்டு அழ வேண்டும் என்று பானுவின் மனம் துடித்தது. அப்போதுதான் அக்கா பேசிய பேச்சினால் ஏற்ட்ட வேதனை தீரும்!

ஆனால் அவனோடு யார் யார் இருக்கிறார்களோ? மற்றவர் முன்னிலையில் அவனுக்குக் கூச்சமாகிவிட்டால்?

அவசரப்படக் கூடாது! சற்றுப் பொறுக்கலாம்!

“காலடிதானே தவிர, கட்டிலில் அல்லவே. நீ நினைப்பது ஒருபோதும் நடக்காது ராகுல். அந்தக் குடும்பம் ஒழுக்கத்துக்குப் பேர் போனது!” என்ற குரல் . . .பானு அறிந்ததே. அம்மா இறந்தபோது அதிக உதவிகள் செய்த பாபு அண்ணன்!

இவனுமே எந்தக் குடும்பத்தைப் பற்றிச் சொல்லுகிறான்? என்னமோ வயிற்றுக்குள் பிசைந்தது பானுமதிக்கு.

“ஹே, போடா போ! அடுத்த அடியே அதுதான்., அந்தப் பெயரை நாசம் செய்வது! அவ்வளவு பெருமை காட்டினாள் அல்லவா, அந்த அக்காக்காரி! நீ வேண்டுமானால் பார்த்துக்கொண்டே இரு. வயிற்றில் பிள்ளையோடு அவள் தங்கையை நடுத்தெருவில் நிறுத்துகிறேன்! அப்புறம் என்னமோ பேர் போனது என்றாயே, அந்தப் பேர் போயே போய்விடும்!” என்று வில்லன் சிரிப்புச் சிரித்தான் ராகுல்.

என்ன இது? ராகுலுக்கு இப்படிக் கூடச் சிரிக்கத் தெரியுமா? அப்புறம் வயிற்றில் பிள்ளையோடு நநடுத்தெருவில் என்றானே? குரூரமான பாவமில்லை?

அதுவும், அவளோடு காதல் அது இது பேசிவிட்டு இன்னொருத்திக்கு வயிற்றில் பிள்ளையைத் தருவது என்றால் சேச்சே, நினைக்கவே குமட்டுகிறதே! இவன் கூசாமல் சொல்கிறான்?

யாரோ பெண்ணைப் பழி வாங்க வேண்டும் என்றால், இப்படிப்பட்ட மட்டமான வழிதான் கிடைத்ததா?

“வேண்டாமடா.” என்றான் அவனை மறுத்துப் பேசிய பாபு. “அத்தோடு மணம் புரிவதாகப் பேசி உறவு கொண்டுவிட்டு மாறினால் கற்பழிப்புக் குற்றமாகிவிடும் என்று, இன்று சட்டமே இருக்கிறது.”

“மாட்டினவர்களுக்குத்தான் மச்சி, சட்டம்! அவள் பல பேரோடு பழகினாள், யாரிடமோ ஏமாந்து வயிற்றில் ஏற்றுவிட்டுப் பணக்காரன் என்பதால், பிள்ளைக்கு அப்பனாக என்னைப் பிடிக்கப் பார்க்கிறாள்

என்று அப்படியே பழியை அவள் மேல் போட்டுவிடுவேன். காசை வீசி இரண்டு சாட்சிகளைத் தயார் செய்துவிட்டால், அவளது ஆட்டம் குளோஸ்! அவளுடைய அக்காவின் ஆட்டமும்தான்! நம் நாட்டில்தான் பெண்கள் மேல் பழி பேசுவது என்றால் அல்வா சாப்பிடுகிற மாதிரி ஆயிற்றே! அப்புறம் . . அப்புறமென்ன? ஆனால் ஒன்றுப்பா, தூக்குக் கயிறா தூக்க மாத்திரையா என்று . .அதில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை அவளுக்கு நான் பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்துவிடுவேன். எப்படி?" என்று இரக்கமின்றிப் பீற்றி மறுபடியும் உரக்கச் சிரித்தான் ராகுல்!

பானுவுக்கு முகமெல்லாம் எரிந்தது. அன்பே உரு என்று அவள் நினைத்த ராகுலனா இவ்வளவு அரக்கத்தனமாகப் பேசுகிறவன்?! அதுவும் ஒரு பெண் மேல் எவ்வளவு கொடிய பழியைச் சுமத்தப் போவதாகக் கொஞ்சமும் கூசாமல் கூறுகிறானே!

அக்காவைத் தூக்கி எறிந்து பேசிவிட்டு அன்பன் என்று எண்ணி வந்ததற்கு இவன் இப்பேர்ப்பட்ட படு பாதகனாக இருக்கிறான்!

அக்கா சொன்னதெல்லாமே சரிதானோ?

வந்த சுவடே தெரியாமல் அப்படியே திரும்பிப் போய்விடலாம் என்று எண்ணித் திரும்பியவளுக்கு உடனேயே வேறு தோன்றியது.

தாயார் வளர்த்த பிறருக்கு உதவும் பண்பு.

பரிதாபத்துக்கு உரிய அந்தப் பெண் யாரென்று தெரிந்தால், தூக்கையோ தூக்க மாத்திரையையோ தேட வேண்டிய தேவை இல்லாமல் அவளைக் காப்பாற்றி விடலாமே?

முன்னிலும் கவனத்துடன் அவர்களது உரையாடலை ஒட்டுக் கேட்டாள்.

இப்போது மறுபடியும் பாபு அண்ணனின் குரல்!

"தப்பும்மா. ராகுல் ப்ளீஸ், சொன்னால் கேள். மானத்துக்கு அஞ்சிய பெண்கள். அப்புறம் உயிரையே விட்டுவிடுவார்கள். சும்மாவே சமீபத்தில் தாயை இழந்து தடுமாறி நிற்கிறார்கள்."

தாயை இழந்து . . ? சமீபத்தில்? யா . .யாரைக் குறிப்பிடுகிறார் பாபு அண்ணன்?

மீண்டும் ராகுலின் குரல் கெக்கலித்தது. "நண்பனே, குறைந்த பட்சமாய் அது என் தப்பில்லை! அந்தப் பெண்கள் தாயை இழந்ததைச் சொல்லுகிறேன்! அது, அந்த மேலே இருக்கிறவன் செயல். சொல்லப்

போனால், அந்தம்மாவைச் சமயத்தில் தூக்கி விட்டதற்காக அந்தக் கடவுளுக்கே நன்றிதான். எனக்கிருந்த ஓர் இடைஞ்சலை நீக்கியதற்காக! ஆனால் . .நீ ஏன் மச்சி அந்த சுந்தரிகளுக்காக சுப்ரீம் கோர்ட் வக்கீல் மாதிரி இப்படி வாதாடுகிறாய்? ஓஹோஹோ! அந்த மூத்த ஜில்ஜில் மேல் உனக்கும் ஒரு இது இல்லை? பார்த்தாலே பரவசம் என்று கையைக் கட்டிக்கொண்டு சும்மா இராமல், என்னைப் போல முயற்சி பண்ண வேண்டியதுதானே? அடுத்தது மாதிரி இலகு கிடையாது. ஆனால், நீ சொன்ன மாதிரித் தாயை இழந்து தடுமாறி நிற்கிற நேரம், அதுவும் பலித்தாலும் பலிக்கலாம்! ஆனால் பார்த்தும்மா. அசட்டுத்தனமாக மாட்டிக் கொண்டு விடாதே! அப்புறம் வாழ்க்கை பூராவும் கட்டிக்கொண்டு அழ நேர்ந்துவிடும். என்னைப் போல நாலு நாள் சந்தோஷமாக இருந்தோமா, தூக்கி எறிந்தோமா என்று போய்க்கொண்டே இருக்க வேண்டும்!" என்று பெரிதாக அறிவுரை வழங்கினான் அந்தத் துரோகி!

அதற்கு மேல் அங்கே நின்றால் உரக்கக் கேவி அழுதுவிடுவோமோ என்ற பயம் வந்தது பானுவுக்கு. கைகளால் வாயைப் பொத்திக்கொண்டு வேகமாகத் திரும்பி ஓடினாள்.

நல்லவேளையாக அந்த ஹோட்டலில் இரவில் நடக்கும் "ஷோ"வுக்கோ அத்தோடான உணவுக்கோ மக்கள் அங்கே வருகிற நேரமில்லை. அல்லது ஓர் இளம்பெண் அழுதுகொண்டே விரைவது பலர் கவனத்தை ஈர்த்திருக்கும்!

எப்படித்தான் யார் மீதும், எதன் மேலும் மோதாமல் வண்டியோடு பானு திரும்பி வந்து சேர்ந்தாளோ?

வீட்டுக்கு வந்து பார்த்தால், வாணி இன்னமும் தாயின் படத்தின் முன்னேதான் நின்றிருந்தாள்.

ஓடிப் போய், தமக்கையைக் கட்டிக்கொண்டு அவள் தோளில் முகம் புதைத்து விம்மலும் விசும்பலுமாக அழுது தீர்த்தாள் தங்கை.

ஆறுதலாகச் சின்னவளின் முதுகை வருடியபடிச் சற்று நேரம் அவளை அழவிட்டவள், அதன் பின் மெல்ல விலக்கி உட்கார வைத்துவிட்டு, குளிர்ந்த தண்ணீரைக் கொணர்ந்து குடிக்க வைத்தாள்.

கையோடு கொண்டு வந்திருந்த ஈர டவலால் பானுவின் முகத்தை மென்மையாகத் துடைத்துவிட்டு, "உனக்கு மனசு லேசாகும் என்று தோன்றினால் சொல்லு. அல்லது பிறகு பார்த்துக் கொள்ளலாம்." என்று இதமான குரலில் கூறினாள்.

“அக்கா . ” என்று கதறி பானுமதி மீண்டும் கண்ணீர் வடிக்கத் தொடங்கவும், சிறு கண்டிப்புடன் நோக்கி, “வேண்டாம் பானும்மா. இவ்வளவு கண்ணீருக்கு யாருக்குமே தகுதி கிடையாது. அதுவும் அந்தப் பதர்! அவன், அந்த ராகுல்தானே உன்னை அழ வைத்திருப்பவன்? விட்டுத் தள்ளும்மா.” என்று பரிவும் பிரியமுமாகத் தங்கைக்கு அறிவுரை கூறினாள் வாணி.

குன்றலில் முகம் கன்ற, “அவனேதான்க்கா. நீ சொன்ன மாதிரி அவன் பதரேதான்க்கா. ரொம்பப் பொல்லாத .சே, ராட்சசன் அக்கா!” என்று தொடங்கி, அவள் தமக்கையை அலட்சியப்படுத்தி விட்டுச் சென்றதில் இருந்து நடந்ததை அவளிடம் எடுத்துச் சொன்னாள் பானுமதி.

“அநியாயக் குற்றம் சாட்டி, உன்னைத் தூக்கி எறிந்துவிட்டுப் போனேனே! அங்கே போனால், என்னைத் தூக்கி எறிந்துவிடப் போவதாக அந்தப் பேயன் பெருமை பேசினான், அக்கா! ஆனால், எனக்கு இது வேண்டியதுதான். இந்த வலி, வேதனை, தவிப்பு எல்லாமே உனக்குத் தந்தேனில்லையா? இது எனக்கு கட்டாயம் தேவைதான்! கடவுள் சரியான தண்டனை கொடுத்தார்! “ என்று கண்ணீருடன் கூறினாள்.

சின்னவளின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்து, “சொல்வதைக் கவனி, பானு! நன்றாக யோசித்துப் பார்த்தால், இது உனக்குத் தண்டனையே அல்ல என்பது புரியும்! அவனை அந்த நேரத்தில் அப்படிப் பேச வைத்துக் கடவுள் உனக்கு நல்லதே செய்திருக்கிறார் என்று தெரிந்துகொள்.” என்றாள் தமக்கை.

கையை வெடுக்கென உருவிக்கொண்டு, “என் மனம் வெடித்துவிடும்போலத் துடிக்கிறது இது நல்லது என்கிறாயே!” என்று தமக்கையிடம் பானு குறைப்பட்டாள்.

“ஆமாம் பானும்மா. அறுவை சிகிச்சை மாதிரி இப்போது என்ன வலி என்றாலும், அவனிடம் மாட்டிக் கொள்ளாமல் மீண்டுவிட்டாய் அல்லவா? நான் சொல்லியோ, பிறர் கூறியோ இது நடக்கவில்லை. நடந்திருக்கவும் முடியாது. இப்போது அவனைப பற்றி அவன் வாயாலேயே அறிந்துவிட்டதால், இனி அவன் வலையில் ஒருபோதும் விழ மாட்டாய் அல்லவா? இது நல்லபடியான மீட்சிதானே? இனி அவனால் உன்னை அணுக முடியுமா?”

“ஐயோ, அவன் முகத்தில் விழிக்கவே மாட்டேன். அக்கா! நான் உன்னோடு வருகிறேன். மறுக்கவே மாட்டேன். நாம் இந்த ஊரை

விட்டே போய்விடுவோம். நீ சொன்ன மாதிரி இந்த வீடும் வேண்டவே வேண்டாம் அக்கா. அம்மா நினைவு ரொம்ப வருகிறது. அதனால்தான் நான் . . . வந்து இஇந்த மாதிரி . . . வேண்டாம் அக்கா. இங்கே இருக்கவே வேண்டாம். போய் விடுவோம்! ஐயோ அக்கா, எனக்காக . .நான் உன்னோடு வர மறுத்தேன் என்று நீ அந்த இடத்தை விட்டுவிடவில்லையே?" என்று அக்காவின் மேல் சாய்ந்துகொண்டு பதறினாள் பானுமதி.

இதமாய் வருடியவாறு, "இல்லைடாம்மா. இன்னும் விட்டுவிடவில்லை. வேண்டாம் என்று மெயிலில் அனுப்புவதற்காக மெஸேஜ் தயார் செய்து வைத்தேன். ஆனால் அனுப்பவில்லை. அனுப்புமுன் கடைசியாக உன்னிடம் இன்னொரு தரம் கேட்க வேண்டும் என்று எண்ணினேன்." என்றாள் மூத்தவள்.

வெறுமனே கேட்பது அல்ல. எப்படியாவது கட்டாயப்படுத்தித் தங்கையை இங்கிருந்து அழைத்துப் போயே ஆக வேண்டும் என்றே எண்ணியிருந்தாள் பெரியவள்.

நல்லவேளையாக அது பிரச்சினை ஆகாமல் தானாகவே தீர்ந்தது.

ஆனால், நிம்மதியோடு வாணியின் முகத்தில் ஒரு கவலையும் இருந்தது.

"அப்பாடி!" என்று மகிழ்ச்சியோடு நிமிர்ந்தாள் பானுமதி. "நல்ல வேளைக்கா. நீ சொன்ன மாதிரி எல்லாம் கடவுள் செயல்தான், இல்லையாக்கா? இல்லை என்று முடித்து விடாமல் உன்னையும் தயங்க வைத்திருக்கிறாரே! ஒரு வகையில் நன்கு பழகிய வட்டத்தை விட்டுப் போகிறோமே என்று இருந்தாலும், நாம் சின்னப் பிள்ளைகள் அது இது என்று புத்தி சொல்லும்போது எரிச்சல்தான் வருகிறது. நமக்கு நல்லது என்று எண்ணியே சொல்லலாம். ஆனால் நாம் என்ன மூளையே இல்லாத முட்டாள்களா? . .வந்து நான் கொஞ்சம் அப்படித்தான். ஆனால் நீ? அத்தோடு அம்மா இருந்தால் இவர்கள் இப்படிப் பேசுவார்களா என்று அது வேறு வேதனை! போகட்டும் அக்கா. நல்ல கெட்ட எல்லா நினைவுகளையும் விட்டு விலகி, ஒரு நல்ல புது வாழ்வைத் தொடங்குவோம்." என்று எதிர்காலம் பற்றி நம்பிக்கையோடு அவள் பேசலானாள்.

தங்கையைப் பேசவிட்டுச் சற்று நேரம் வாணி அமைதியாக இருந்தாள்.

சின்னவளின் உற்சாகப் பேச்சு ஒருவாறு நிற்கவும், அவளை ஒரு தரம் ஆழப் பார்த்து, "நாம் எங்கே போவதானாலும் நம் அம்மாவுடைய

மகள்களாக, அம்மாவே பெருமைப்படும் விதமாகத்தான் போக வேண்டும், பானு!” என்றாள் தாழ்ந்த குரலில் அமைதியாக.

கேள்வியாக நோக்கிய பானுமதியின் முகம் சட்டெனக் கன்றிச் சிவந்தது!

# அத்தியாயம் - 2

இருபது வயது! பெற்றதாயை இழப்பதற்கு ரொம்பவே மோசமான பருவம்! அதிலும் பானுமதி அம்மாவை ஒட்டிக்கொண்டே கிடப்பாள். சோஃபாவில் உட்காரும்போது கூட வரலட்சுமியின் இடுப்பைக் கட்டிக் கொள்ளுவாள்., தோளில் சாய்ந்திருப்பாள்., குறைந்த பட்சமாய்க் கையையாவது பிடித்துக் கொண்டிருப்பாள்!

இப்போது அன்னையின் அந்த அருகாமை இல்லாத தனிமைதான் அவளை இப்படியெல்லாம் கிறுக்குத்தனம் பண்ண வைத்ததோ?

மற்றபடி அந்த ராகுலைப் போன்றவனுடன் தங்கை நின்று பேசுவாளா, என்ன?

பேசியது மட்டுமின்றி. . .

சற்று நேரம் பானுமதி குனிந்த தலையை நிமிர்த்தவில்லை.

அக்காவுக்குத் தெரியாமல் செய்ததுதான்.  ஆனால் அது இந்த அளவுக்குப் போகும்  என்று அவளே எதிர்பார்த்தது கிடையாது.

இப்போதும் மனதோடு அவளால் ஒப்ப முடியவில்லைதான். என்றாலும் அதை விட்டுவிடவும் மனம் வரவில்லை. கூடவே, ராகுல் ஓதி வந்தது ஒரு பக்கம் இருந்தாலும்,  இன்றைய கால கட்டத்தில் அந்தப் பழக்கம் தப்பில்லை என்றே அவளுக்கும் தோன்றியது. தோன்றியதையே தமக்கையிடமும் எடுத்துச் சொன்னாள்.

“இதில் என்னக்கா தப்பு? எல்லோரும் செய்வதுதான். நாம்தான் இதுவரை கட்டுப்பெட்டிகளாக இருந்துவிட்டோம். ரோமாபுரியில் ரோமர்களைப் போல வாழவேண்டும்., சூழ்நிலைக்குத் தக்கவாறு இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்று நம் அம்மாவே சொல்லியிருக்கிறார்கள். அப்புறம் என்ன? இன்றைய உலகம் இது. சாமியார் மாதிரி இராமல் நீயும் பழகிக்கொள்.” என்று மூத்தவளுக்கே புத்திமதி வேறு கூறினாள்!

மறுத்துப் பேச இடம் கொடாமல், அவளே தொடர்ந்தாள். “நிஜம்மாகச் சொல்கிறேன். ஆனால், இதில் ஒரு சுகம் இருக்கிறதுக்கா. முதலில் ராகுல் சொன்னபோது நான் நம்பவே இல்லை. ஆனால், அம்மா இல்லாத வேதனையே மறந்து போகிறது, தெரியுமா?” என்று பெரியவளுக்கு ஓர் ஆசை காட்டல் வேறு!

ஆனால் அதைச் சொல்லும்போது மறுபடியும் அவளது பார்வை

தாழ்ந்து போயிற்று. ஏனெனில் அப்போதுதானே, அம்மா இல்லாத நிலையில் அக்காவாய் அதட்டிப் பேசி அழிவுப் பாதையில் சென்று கொண்டிருப்பவளை வாணி தடுக்க முயன்றபோதுதானே  வாய் கூசாமல், “உனக்கு என்னிடம் பொறாமை” என்று சின்னவள் சகோதரியைக் குற்றம் சாட்டினாள்!

அக்காவின் அதிர்ந்து நோக்கிய முகம், இப்போது நினைவு வந்து, அவளை இன்னமும் கூச வைத்தது.

ஆனாலும் அந்த ராகுலின் பேச்சில் அந்த அளவுக்கா மயங்கி இருந்தோம் என்று அது வேறு கேவலம்!

அது மட்டுமல்ல. அவன் மீதிருந்த மயக்கத்தை வாணிக்கு எதிராக ராகுல் பயன்படுத்தியும் இருக்கிறான். தங்கையிடம் அன்பும் அக்கறையும் உள்ள வாணி, உண்மையைச் சொல்லிச் சின்னவளைத் தடுக்கக் கூடும் என்று எதிர்பார்த்து, தமக்கையை எதிர்க்கும் நிலைமைக்கு பானுவை அவன் நன்கு தயார்ப்படுத்தியும் வைத்திருந்திருக்கிறான்.

என்னவெல்லாம் சொன்னான்!

அவளை விட வாணி நா . .லு ஆண்டுகள் மூத்தவளாம். நா . .லு . . நீண்ட ஆண்டுகள்! அத்தனை வயது பெரியவளை இது வரை ஒருத்தன் கூடத் திரும்பிப் பார்க்கவில்லையாம்!

ஆனால், இருபதே வயதான சின்னவளுக்கு உயிராய் நேசிக்கிற ஒருவன் ., ஹீரோ மாதிரி ஸ்டைலான தோற்றம் வேறு! அத்தோடு பணமும் உள்ளவன் அதற்குள் கிடைத்துவிட்டானே என்று பெரியவளுக்குப் பொறாமை உண்டாவது மனித இயல்பு! அதனால்தான் அவனைப் பற்றித் தப்புத் தப்பாகச் சொல்லி, அந்த உறவைப் கெடுக்க முயற்சி செய்யத் தோன்றும்.

“பெரிய சாமியாரிணியாக இருந்தால் கூட, இந்த எண்ணம் தோன்றாமல் இராது பானு. அதைப் பெரிய தப்பாக எண்ணி உடன் பிறந்தவளை வெறுத்து விடாதே . . .” என்று நல்லவன் மாதிரி எப்படிப் பேசி அவளுக்கு உபதேசித்தான்!

குறையே இல்லாத வாணியைப் பொறாமைக்காரியாக்கி, அந்தப் பிழைக்காக அவளை வெறுக்கக் கூடாது என்று புத்தி சொல்லி, வாணி பொறாமைக்காரி என்று தங்கை மனதில் உறுதியே படுத்திவிட்டானே! என்னவொரு குள்ளநரித்தனம்!

அப்போதைக்கு “சேச்சே. என் அக்காவுக்கு நான் என்றால் உயிர்.

எனக்காக உயிரையும் கொடுப்பாள்!" என்று அவனை மறுத்துப் பேசியது ஒன்றுதான் இப்போது பானுவுக்கு ஆறுதல்.

ஆனால் சந்தர்ப்பம் நேர்ந்தபோது, சுய புத்தியே இல்லாமல் அவன் உருவேற்றியதைத்தானே ஒப்பித்தாள்!

அக்காவுக்கு எப்படி வலித்திருக்கும்.

அப்போதும் தன் வேதனையை ஒதுக்கித் தங்கையின் நலனை முன்னிறுத்தி, வாணி வாதாடினாளே!

ராகுலனின் குணம் பற்றிக் கேள்விப்பட்டதை எடுத்துச் சொன்னாள். ஆனால் அவளுடைய அசட்டுத் தங்கை அதைக் கேட்டால்தானே?

தமக்கையைக் குரோதமாக நோக்கி, "இதற்கு மேலும் பேசி உன்னைக் கேவலப்படுத்திக் கொள்ளாதே!" என்று பெரிய புத்திசாலி மாதிரி அல்லவா எச்சரித்தாள்!

அப்போதும் பொறுப்புணர்வோடு, "அதில்லை பானு, நான் நன்றாக விசாரித்துவிட்டேன். நீ அந்த ராகுலின் உண்மைக் குணம் தெரியாமல் . . " என்று அமைதியை இழுத்துப் பிடித்தபடி விவரமாகச் சொல்லத் தொடங்கிய அக்காவின் பேச்சில் மீண்டும் குறுக்கிட்டுப் பானுமதி என்னவெல்லாம் கூறினாள்!

மதியைப் பெயரிலேயே வைத்திருக்கிறேன் என்று பெருமையடிக்கிறவள், அணுவளவும் மதி இல்லாதவளாய் உளறிக் கொட்டினாளே!

"என்ன தெரியவில்லை? எனக்கு என் ராகுலைப் பற்றி நன்றாகத் தெரியும். அதை விடவும், உன்னைப் பற்றியும் இப்போது ரொம்ப நன்றாகத் தெரிந்துகொண்டேன். பொறாமைக்காரி! அவன் மாதிரி ஒருத்தன் உனக்கு இல்லை என்பதால் எனக்குக் கிடைத்ததைத் தட்டிவிடத் திட்டம் போடுகிறாயா? என் ராகுலைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் என்னிடமே கதை கட்டுகிறாயே! இதிலிருந்தே நீ பொய் மேல் பொய்யாக இல்லாததை இட்டுக் கட்டுவது எனக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது!

"ஒன்று தெரியுமா உனக்கு? என் ராகுல் ரொம்ப ரொம்ப நல்லவன் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும் ஏன் என்று நீயும் தெரிந்துகொள். . . " என்று தொடங்கி அவன் பற்றி என்னென்னப் புகழ் மாலை தொடுத்தாள்!

அவன் ஒளிவு மறைவே இல்லாதவன்! தான் குடிப்பதை அவன்

ஒருநாளும் அவளிடம் மறைத்ததே இல்லை. ஆனாலும் அந்த ராகுலுக்கே, பானு இதைத் தொடுவதில் அவ்வளவு விருப்பம் இல்லை. அம்மாவை நினைத்து பானு படுகிற வேதனையைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாமல்தான் ஒருநாள் கொஞ்சம் குடித்துப் பார் என்று கொடுத்ததை, அப்புறம் அவளே கொஞ்சம் கேட்டபோது, வலிக்கு மருந்து மாதிரி ஏதோ கொஞ்ச காலத்துக்கு . . அதாவது காலப் போக்கில் அம்மாவை இழந்த சோகம் கொஞ்சம் குறைகிற மட்டும்தான் என்று சொல்லித்தானே தந்தான்! அப்புறம் . .அதாவது அம்மா பற்றின சோகம் மறைந்த பிறகு, அவளே கேட்டால் கூட அவன் வாங்கித்தர மாட்டானாம்! சொல்லியிருக்கிறான்!

இப்படி அப்படி என்று எவ்வளவு அளந்தாள்!

“இப்படிப்பட்ட நல்லவனைப் போய் நாக் கூசாமல் என்னென்ன சொல்லிவிட்டாய்? நீ சொன்ன பொய்கள் அப்படியே நெஞ்சைக் குடைகிறதே! அவனை அப்படிக் கேவலமாகப் பேசிய உன் முகத்தைப்பார்க்கக் கூட எனக்குப் பிடிக்கவில்லையே! வெவெறுப்பாக இருக்கிறது!

“முதலில் ராகுலின் அன்பு முகத்தைப் பார்த்தால்தான் என் மனம் ஆறும்! அதனால் உடனே அவனைப் போய்ப் பார்க்கப் போகிறேன். அப்புறமும், ராகுல் போகச் சொன்னால்தான் நான் வீட்டுக்கே திரும்பி வருவேன்! மற்றபடி . .ஹூம்! திரும்பி வரவே மாட்டேன்!”

இந்த வார்த்தைகளோடு கதவை அறைந்து சாத்திவிட்டல்லவா அன்று கிளம்பிப் போனாள்!

சே! என்ன மடத்தனம் என்று பானுவுக்குத் தன் மீதே பெரும் கோபம் வந்தது. அதே கோபத்தோடு தமக்கையிடமும் சீறினாள்.

“ஏன்க்கா நீ என் பின்னோடு ஓடிவந்து, அடித்து உதைத்தோ, கெஞ்சிக் கதறியோ என்னைத் திருப்பி அழைத்துப் போகவில்லை? எப்படியோ அவன் கண்ணில் படாமலே தப்பி வந்தேன்!

மற்றபடி நான் என்ன கதியாகி இருப்பேன்!” என்று சினத்துடன் வினவினாள்.

“ஒன்றும் ஆகியிருக்காதுடாம்மா. “ என்றாள் வாணி அமைதியுடனேயே.

“அதெப்படி உனக்கு நிச்சயம்? இப்போது நானாக ஒட்டுக் கேட்டதால்தானே உண்மை புரிந்து திரும்பி வந்தேன். அப்படிக் கேட்டிராவிட்டால் என்ன ஆகியிருக்கும்?” என்று சலுகையோடு

குறைப்பட்டாள் சின்னவள்.

பழைய தங்கை திரும்புகிறாள்!

சகோதரியின் கையைத் தட்டிக் கொடுத்து, “அதற்கு இரண்டு காரணங்கள்.” என்றாள் தமக்கை.

ஒன்று அவ்வளவு வெளிப்படையாக ராகுல், பானுவைத் தன்னோடு தங்க வைத்துக்கொள்ள மாட்டான் என்ற உறுதி. அப்படித் தங்க விட்டால், அதன் பின் விளைவுகள் பற்றி அவன் அறியாதவன் அல்ல! தான் மாட்டிக் கொள்ளும்படியாக வெளிப்படையாக அவன் நடந்துகொள்ள மாட்டான் என்ற நிச்சயம்!

காதில் விழுந்த ராகுலின் பேச்சு நினைவு வர முகம் வாடினாலும், பானுவும் ஒத்துக்கொண்டு தலையாட்டினாள். அவனும் அப்படித்தானே கூறினான்!

“அப்புறம் அடுத்தது?”

“அம்மாவுடைய மக்களாக நாம் மதிப்போடு வாழும் இந்த இடத்தில் அப்படி வெளிப்படையாகக் கெஞ்சிக் கதறி நம்மையே கேவலப்படுத்திக்கொள்ள நான் விரும்பவில்லை, பானு. அத்தோடு, ராகுல் பற்றிய நிச்சயமும் இருந்ததோடு உன்னைப் பற்றிய நம்பிக்கையும் எனக்கு அடியோடு அழிந்து போகவில்லை!” என்று தங்கைக்குப் பதில் சொன்னவள், மறுபடியும் பழைய பேச்சுக்குப் போனாள்.

“ஆனால் நாம் பேசிக் கொண்டிருந்த விஷயம் இது அல்ல!”

முகம் லேசாகக் கன்ற, பானுமதி மறுபடியும் தலை குனிந்தாள். கூடவே, இந்த விஷயத்தில் தமக்கையின் பேச்சுக்குப் பணிய அவளுக்குக் கொஞ்சமும் பிரியமில்லை.

அந்தக் குணம் கெட்ட ராகுலன் கற்றுத் தந்த பழக்கம்தான். கெட்ட பழக்கம் என்று சில மாதங்களுக்கு முன்புவரை அவளுமே எண்ணி வந்ததும்தான். ஆனால் மிகச் சிறிய அந்த அளவிலேயே எவ்வளவு சுகமாக இருந்தது?

அனாவசியமாக அந்த சுகத்தை எதற்காக விடுவது? இன்றைய கால கட்டத்தில், இது உலக மகாப் பாவமும் இல்லை. அரசாங்கமே விற்கும்போது சட்டப்படியும் குற்றம் அல்ல!

“அக்கா, இதில் நான் சொல்வதைக் கொஞ்சம் கவனமாகக் கேள்! நம் வீட்டில் பழக்கம் இல்லையே தவிர, மதுப் பழக்கம் இப்போது பிழை

அல்ல. இந்தக் காலனியிலேயே எத்தனை பேர் வீட்டிலேயே அருந்துகிறார்கள் தெரியுமா? தப்பு என்று கூடச் சொல்ல முடியாதுக்கா. தலை கிறுகிறுத்துத் தள்ளாடும் அளவுக்குக் குடிக்கக் கூடாது. அவ்வளவுதான். என்னாலும் அளவோடு நிறுத்திக் கொள்ள முமுடியும்க்கா. அதனால் இஇப்படியே இருந்து விடலாமே!" என்று தனக்குத் தெரிந்த அளவில் வாதாடினாள் என்றாலும் அவளது குரலில் வலுவில்லை.

ஏனெனில், இந்த வாதங்களையெல்லாம் அவளுக்கு எடுத்துச் சொன்னவனும் அந்தக் கெட்ட ராகுலன்தானே? அவளைக் கவிழ்ப்பதற்காகவே சொல்லியிருக்கலாமோ என்ற சந்தேகம் அவளுள் மெல்லத் தலை தூக்கியிருந்தது.

ஆனாலும் அந்த மயக்கத்தில் கவலைகள் எவ்வளவு அற்பமாகத் தெரிந்தன! அந்த அனுபவசாலி சொன்னது போல, அளவு மீறாமல் கவனமாக இருந்துவிட்டால் பயமென்ன?

மீண்டும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவளாகிவிட்ட அக்காவிடம் ஆனமட்டும் சொல்லிப் பார்த்தாள்!

ஆனால் மூத்தவள் வாணி அதை ஒத்துக் கொள்ள மறுத்தாள்.

அமைதியாகவே தங்கைக்கு எடுத்துச் சொன்னாள்.

"இல்லை, தங்கம். இது எல்லோரும் சொல்கிற வாதம்தான். ஆனால் சொன்னவர்கள் யாரும் அளவில் நின்றதே இல்லை என்று புள்ளி விவரமே சொல்கிறது! எனவே அடியோடு விட்டால் ஒழிய நாம் நிம்மதியாக இருக்க முடியாது. அது மட்டுமல்ல. இரண்டு பெண்களாகப் புதிய இடத்துக்குப் போய் வசிக்கப் போகிறோம். சுற்றுச் சூழல் எப்படி இருக்கும் என்று உறுதியாகத் தெரியாது. ஒரு சிறு மன இறுக்கத்துக்கும் இதைத் துணை தேடத் தோன்றும்.

"புது இடத்திலும் நம்மிடம் ஒரு குறை யாரும் காண முடியாதபடி நாம் வாழ வேண்டும் அல்லவா? அப்பா இல்லாத நிலையிலும் சூழ இருந்தோரின் மதிப்பு, மரியாதை நமக்குக் கிடைத்தது அம்மாவின் இந்தப் பண்பினால்தான். அம்மாவிடம் யாரும் குறை காண நேர்ந்ததே இல்லை!

"உடம்பு சரியில்லாமல் போகத் தொடங்கிய பிறகு, பிழைக்க முடியாது என்று தெரிந்ததாலோ என்னவோ, அம்மா பலதரம் இது பற்றி என்னிடம் பேசியிருக்கிறார்கள்.

"மகாபாரதத்தில் மகா புத்திமானான விதுரர்

சொல்லியிருக்கிறாராம். ஓர் இடத்தில, ஒரு பிழை நேர்ந்தால், அங்கே இருப்பவர்களில் பலமற்றவனும் பின்புலம் இல்லாத எளியவனுமாக எவன் இருக்கிறானோ, அவன் மேல்தான் பழி சுமத்தப்படுமாம். பெரிய பணமோ, பின்புலமோ நம்மிடம் இல்லாததால் அலசி ஆராய்ந்தாலும் யாரும் நம்மைக் குறைவாக எண்ண இடம் கொடுக்கக் கூடாதபடி வாழ வேண்டும் என்றார்கள். அதனால்தான் சொல்லுகிறேன். சட்டென ஒரு குறையாகத் தோன்றிவிடக் கூடிய இந்தப் பழக்கத்தைச் சீர்ப்படுத்திக்கொண்டு நல்ல விதமாகவே புது இடத்துக்குப் போகலாமே! அம்மாவை மதிக்கிறாய் என்றால், அம்மா பெருமைப் படும் விதமாக இருக்க வேண்டாமா?

“சொல்லு. நாம் அப்படித்தானே வாழ வேண்டும்? நாமாக நினைத்து அழுவதும், மற்றவர்கள் வந்து அம்மாவின் அருமை பெருமைகளைப் பேசுவதுமாக நாள் முழுதுமாக எப்போதும் தவிப்பதைத் தவிர்ப்பதற்காக இங்கிருந்து போகிறோமே தவிரப் போவது அம்மாவுடைய மகள்களாகத்தான் பானு. இது என் உறுதியான கருத்து.

“இப்போது நீ என்ன சொல்லுகிறாய்?” என்று நேர்ப் பார்வையாகத் தங்கையைப் பார்த்தாள் வாணி.

அம்மா என்ற ஒரு சொல் பானுமதிக்கு மந்திரம் போன்றது. என்னதான் சிறு சுகங்களை விரும்பி வாதிட்டாலும், அம்மாவின் மகளாக வாழத்தான் அவளும் விரும்புவாள் என்பது வாணிக்கு நிச்சயம்.

அதனாலேயே அம்மா பெருமைப்படும் விதமாக என்ற சொற்றொடரை மூத்தவள் பயன்படுத்தியதே. அதற்கு அவள் எதிர்பார்த்த பலனும் கிடைத்தது.

வேறு ஏதேனும் பாடம் ஏறித் தங்கை மனம் அலை பாயுமுன், வாணி உடனடியாக அவளுக்குத் தேவையான வேலைகளைச் செய்யத் தொடங்கிவிட்டாள்.

கூகிளில் தேடி, அவளுடைய குடும்பம் பற்றி அறியாத முக்கியமானவர்களிடம் நன்கு விசாரித்து மறுவாழ்வு மையங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தாள்.

சின்னவளை ஒதுக்கி வைக்காமல், அவளிடமும் இந்த விவரங்களைக் கூறிக் கலந்து ஆலோசித்தாள்.

இருவருமாகத் தேர்ந்தெடுத்த மறு வாழ்வு மையத்திற்குச் சென்றபோது, அங்கே நம்பிக்கையூட்டும் பதிலே கிடைத்தது.

பானுமதியுடன் தனியே பேசிப் பார்த்துவிட்டு, அவள் விரைவிலேயே திருந்தி விடுவாள் என்று மையத்தில் நிச்சயமாகச் சொன்னார்கள்.

“உள்ளூரப் பானுமதிக்குக் குற்ற உணர்வின் குறுகுறுப்பு எப்போதும் இருந்திருக்கிறது. எல்லோரும் செய்வதுதானே, நாமும் செய்வதில் என்ன தப்பு என்று தன்னைத் தானே சமாளித்து வந்திருக்கிறாள். நீங்கள் சொன்ன “அம்மா” மந்திரம் பயங்கரமாக உறுத்தியிருக்கிறது. ஆனால் தாயாரை இழந்த தவிப்பும் அதே அளவு பாதித்திருக்கிறது. கூடா நட்பு வேறு! ஆனாலும் தப்பு செய்கிறோமோ என்ற தவிப்பு அவளது உள் மனதிலிருந்து மறையவே இல்லை. எனவே முழுதாக ஒத்துழைப்பாள் என்கிற நிச்சயம் இருப்பதால் ஒரே மாதத்தில் அடியோடு விட்டுவிடுவாள் என்பது எங்கள் நம்பிக்கை. அதன் பிறகு நீங்கள் கொஞ்சம் கவனமாக இருந்தால் போதும். “ என்று உறுதியோடு கூறினார்கள்.

பெற்றவளைப் பெரிதும் நினைவூட்டும் பழைய சூழலை விட்டு வெளியேறியே ஆக வேண்டும் என்பதில் வாணியின் உறுதி இன்னமும் திடம் பெற்றது. தங்கைக்காக மட்டுமல்ல. தனக்காகவுமே!

“பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்த பரிபூரணனை”ப் போலவே, அவர்கள் வசித்த அடுக்கு மாடிக் கட்டிடம் முழுதிலும் அன்னையின் முத்திரை அழுத்தமாகப் பதிந்திருந்தது.

தங்கையைக் காட்டிலும் நாலு வயது மூத்த அவளாலேயே தாங்க முடியாதபோது, சின்னவள் பானு எப்படித் தாங்குவாள்?

தானாக நினைவு வருவது போகச் சூழ இருந்தோரின் நினைவூட்டல் வேறு!

அவர்களைக் குற்றம் சொல்வதற்கு இல்லை. அவர்களும் வரலட்சுமியின் நினைவில் வருந்தித்தான் சொன்னார்கள். அவ்வளவுக்கு அனைவரையும் கவர்ந்தவள் வரலட்சுமி.

தந்தை இறந்தபோது வாணிக்குப் பத்து வயது. கிட்டத்தட்ட நாலு வயது சின்னவள் பானு.

சற்றுச் சிறு வயதான பாதி முப்பதுகளில் இருந்த வரலட்சுமி, இந்த அடுக்கு மாடிக் குடியுருப்பிற்குக் குடி வரக் காரணமுமே, வாணியுடைது போலவே கூட இருக்கலாம்!

ஆனால், அப்படிக் குடி மாறும்போது என்ன மாதிரி வாழவேண்டும் என்று சில வரைமுறைகளோடு தான் சென்றாள்.

நேர்ப்பட வாழ்தல். தவறாக நினைக்கக் கூட முடியாத ஒரு நெருப்புத் தன்மை. அதே சமயம் தேவைப்பட்டோருக்குத் தட்டாது உதவுதல், இனிய பேச்சு . .இப்படி வாழ்ந்ததாலேயே, அக்கம் பக்கம் வசித்த எல்லோரின் நன்மதிப்பை வரலட்சுமி சம்பாதித்திருந்தாள்.

மகள்களையும் தன் பிரதிபிம்பமாகவே வளர்த்தாள்.

அதனாலேயே அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் அவர்கள் குடும்பத்துக்குத் தனி மதிப்பு இருந்தது. அதனாலேயேதான் பானுமதியின் இந்தப் பிரச்சினை யார் கண்ணையும் அதுவரை உறுத்தத் தொடங்கவில்லை. அங்கே இங்கே போகிறபோது பழக்கமற்ற இடங்களில் அவளைப் பார்த்தவர்கள் கூட அதைத் தவறாகக் கருதவில்லை.

வரலட்சுமியின் பெண்கள் எங்கே போய் என்ன செய்தாலும் அதில் தவறு இராது என்ற நிச்சயம் அவர்களுக்கு!

ஆனால், இது எவ்வளவு காலம் தாங்கும்? கவலையுடன் தேடிய வாணியைப் போல வேறு யாரேனும் நேரிலேயே பானுவை இது போலப் பார்த்துவிட்டால், எல்லாமே உடைந்து நொறுங்கிப் போகுமே!

அன்னை சம்பாதித்து வைத்த நல்ல அபிப்பிராயம் குறையாமல் காக்க வேண்டும் என்பது வாணியின் ஒரு முக்கியமான நோக்கம்.

அதை விடவும், பானுவின் வாழ்வு நாசமாகாமல் காப்பது இப்போது பெரிய நோக்கமாக அமைந்தது.

அந்த ராகுல் விஷப் பூச்சி. ஆண் துணை இல்லாத வீடு என்று, வாணியிடமே முயன்றவன்தான். ஆனால் அவனை ஒரு பொருட்டாகக் கூட மதிக்காத அவளது அலட்சியம், அவனை ரொம்பவே சீண்டி விட்டுவிட்டது போலும்.

அதனாலேயே திட்டமிட்டு அவளுடைய தங்கையை வீழ்த்த முயன்று, அதில் அவனுக்குக் கிட்டத்தட்ட வெற்றி என்கிற நிலைக்குக் கொணர்ந்திருந்தான். கவனத்துடன் தாயார் வளர்த்திருந்த நல்ல பழக்க வழக்கங்கள் பலவற்றையும் பானுமதி உடைத்தெறிந்துவிட்ட நிலை!

அவன் செல்ல வேண்டியது இன்னும் கொஞ் . .ச தூரமே!

அப்போதுதான் அவனளவில் எல்லாம் தலைகீழாகிவிட்டது.

அருவமாக இருந்து வரலட்சுமி மகளைக் காத்தாளோ, தமக்கையாக வாணியின் அறிவுறுத்தலோ, அதன் அடிப்படையாகப் பெரியவளுக்குக் கிடைத்த ராகுலின் சகவாச வட்டத்துக்குள்ளேயே

இருக்கும் பாபுவின் எச்சரிக்கைக் குறிப்புகளோ, எல்லாவற்றையும் விட, சரியான தருணத்தில் சரியான வார்த்தைகளை ராகுலின் வாயாலேயே வேச வைத்துப் பானுவின் காதுகளில் விழ வைத்த கடவுளின் சித்தம்? அது நெத்தியடி அல்லவா?

எப்படியோ அப்போதைக்கு பானுவுக்குப் பிரச்சினை அகன்றபோதும், ராகுலன் திரும்ப உள்ளே நுழையவே மாட்டான் என்று சொல்வதற்கில்லை. அவன் நெஞ்சில் வஞ்சம் கொண்ட பாம்பு. தமக்கையைப் பழி வாங்கத் தங்கையை அழிக்க முயன்றானே!

எப்படியும் அவள் வசிக்க இருக்கும் இடத்தில் ராகுலில் தொல்லை நிச்சயமாக இராது. சினிமா ஹீரோ மாதிரிக் காட்டிலும் மேட்டிலும் பானுவைப் பின் தொடர அவனால் முடியாது. அவனுக்குப் பல்வேறு வசதிகள் வேண்டும். ஏசி வேண்டும் ஸ்டார் ஹோட்டல் வசதிகள் வேண்டும். நினைத்த நேரம் தண்ணியடிக்க விஸ்கியோடு பேரர் வர வேண்டும்.

எனவே, இந்தச் சூழலை விட்டு வெளியேறுவதே நிரந்தரத் தீர்வாக அமையும் என்று வாணி கருதினாள்.

அன்னையை அடியோடு மறக்க வேண்டும் என்று அவள் எண்ணவில்லை. அது ஒருபோதும் இயலாது. ஆனால் தாயின் நினைவில் துடிப்பது நிற்க வேண்டும். இழப்பு இழப்பு என்று தவிப்பது நிற்கவேண்டும்.

அனைத்துக்கும் உரிய விடை, முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையே என்று வாணி நிச்சயமாகக் கருதினாள்.

அத்தோடு அவளது வேலைக்கும் இடையூறற்ற தனிமை வேண்டும்.

அறியாத கனவானை விட அறிந்த திருடன் மேல் என்று சொல்வார்கள்.

புதிய இடத்தில் எத்தனை பிரச்சினைகள் எழக் கூடுமோ, தெரியாது. ஆனாலும் அவற்றை சமாளித்து நல்ல விதமாக வாழும் வலிமை தங்களுக்கு உண்டு என்றும் வாணி நிச்சயமாக நம்பினாள்.

இங்கே போல அக்கம் பக்கம் உள்ளவர்களின் உதவி கிடைக்காது. ஆனால் மற்றவரின் உதவிகளில் வாழுமாறு அவளுடைய தாய் மகள்களைப் பழக்கவில்லை.

எனவே, அக்காவும் தங்கையும் சென்னையை விட்டுக் கிளம்புவது உறுதிப்பட்டுவிட, எல்லோரும் அதை ஏற்று, வீட்டை ஒதுக்கிப்

பொருட்களை உரியபடி மூட்டை கட்ட உதவி செய்தார்கள்.

அதிலும் இளைஞர் கூட்டம் கிட்டத்தட்ட முழுப் பொறுப்பையுமே ஏற்றது.

அதே போலத் திருச்சி புறநகர்ப் பகுதியில் அவர்கள் வாங்கியிருந்த சிறு வீட்டில் பொருட்களை அடுக்கி வைப்பதற்கும், சென்னையிலிருந்து வந்து உதவினார்கள்.

பெற்றோரின் ஆசியுடனேயே.

“வரலட்சுமியோட பசங்க. நம்ம வாணி! நம்ம பானு! போய் வேண்டிய உதவி செய்துவிட்டு வாருங்கள்!” என்று பிள்ளைகளுக்குச் சொல்லியே அனுப்பி வைத்தார்கள்.

அதே போலவே, வந்த இளவல் கூட்டமும் வாணி சகோதரிகளோடு சேர்ந்து பொருட்களைப் பிரித்து அடுக்கிக் கொடுத்தது. கூடவே அதை இலகுவாக ஆட்ட பாட்டத்தோடு செய்தார்கள்.

வருங்காலம் பற்றிய வருத்தம் பயம் கவலை எதையும் உணர இடமே கொடுக்கவில்லை.

பெண்களின் புதிய வீடும் எல்லோருக்குமே பிடித்தது.

சென்னையின் அடுக்கு மாடிக் கட்டிடக்கடியிருப்புக்கு நேர் விரோதமாக, வீட்டைச் சுற்றிலும் தோட்டம் போட இடம். இரண்டு தென்னை மரங்கள். கொய்யா, எலுமிச்சை வகையில் இரு சிறு மரங்கள்.

அதை விடவும் கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு ஒரே பசுமை! “நலம்” என்ற பெயருடன் ஓர் ஆர்கானிக் பண்ணை என்று பெயர்ப் பலகை சொன்னது.

“உள்ளே விடுவார்களோ என்னவோ? “ என்று எல்லோருக்குமே சந்தேகம்தான். ஆனால் கண்ணால் பார்த்து ரசிப்பதை யார் தடுக்க முடியும்?

“எல்லாம் சரி. ஆனால் அக்கம் பக்கம் ஆளையே காணோமே என்று கொஞ்சம் ஒரு மாதிரி இருக்கிறது. அடுத்தடுத்து இருக்கும் மற்ற ஐந்து வீடுகளும் கூடக் காலியாகப் பூட்டி வைத்திருக்கிறதே! அதுதான் கொஞ்சம் ஒரு மாதிரி இருக்கிறது.” என்றாள் சென்னையில் கீழ்த் தளத்து வாசி சுகன்யா.

“ஆமாம்ப்பா. தன்னந் தனியே இரண்டு பெண்களாக வசிப்பது என்றால் பாதுகாப்பு பிரச்சினை ஆகாதா? அதற்கு என்ன செய்யப்

போகிறீர்கள்?” என்று பக்கத்து ஃப்ளாட் சித்ராவும் அவள் அண்ணனும் கேட்டார்கள்.

“வரலட்சுமி ஆன்ட்டி பிள்ளைகளிடம் வாலாட்டிவிட்டு கைகால் உடையாமல் ஒருவன் போக முடியுமா? சின்ன வயதில் இருந்தே ஆன்ட்டி இவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்தே வளர்த்திருக்கிறார்கள். ஆனால் வாணி, வீடு இவ்வளவு தனியாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நீ வந்து பார்த்துவிட்டுத்தானே இந்த வீட்டை வாங்கினாய்?” என்று பாபு வினவினான்.

அந்த நண்பர் வட்டத்தில் அவன் சற்றே பெரியவன். படிப்பு முடிந்து வேலை பார்க்கிறவனும் கூட. பானுமதியை மீட்டதில் அவனது பங்கு பெரிது. ரொம்ப! மீட்சியில் மட்டுமல்ல. அது பற்றிய விவரம் கசியாமல் காத்ததிலும். ரொம்பவே நன்றிக்கு உரித்தானவன்.

“ம்! நன்றாக! இதற்கு முன்பு இங்கே இருந்தவர்கள் அறுபதுகளில் இருந்த ஒரு தம்பதி. வேலையில் ஓய்வு பெற்று வந்தவர்கள். வயதானவர்கள் தனியே இருக்கப் போகிறோம் என்று பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பக்காவாகச் செய்து வைத்திருக்கிறார்கள். அத்தனை பக்கங்களிலும் சிசிகாமிரா, வீட்டு நிலத்தைச் சுற்றிலும் பலமாக வேலி., வீட்டுக் கதவுகளுக்கு கிரில் ஃப்ரேம்., மாடி முழுதுக்குமே அதே மாதிரி இரும்பு கிரில். கடைசிக் காலம் வரை இங்கேயே வசிக்கப் போவதாக எண்ணினார்களாம். . . “

“அப்புறம் ஏன் போகிறார்களாம்?” என்று குறுக்கிட்டுக் கேட்டாள் நளினி.

“மணமாகிப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு மகள் கருவுற்றிருக்கிறாளாம். அவள் இருப்பது ஆஸ்திரேலியாவில்! அவள் கொஞ்சம் டென்ஷன் பார்ட்டியும் போல! சரிதான் என்று மகள் கூடவே இருப்பதற்காகக் கிளம்பி விட்டார்கள்!

“இங்கே நானும் வீடு தேடிக் கொன்டிருந்தேனா? நம் சிவகாமியுடைய நாத்தனார் வழியில் இங்கே ரியல் எஸ்டேட் பெரிதாகப் பண்ணுகிறார்கள். நம் தேவை பற்றி அவர்களிடம் சொன்ன சமயத்திலேயே சீக்கிரமாக விற்றுத் தரும்படிக் கேட்டு இந்த வீட்டு அங்கிளும் வந்தாராம். சிவகாமி சொந்தக்காரர் என்னிடம் சொன்னார். வந்து பார்த்ததுமே இதுதான் வீடு என்று எனக்குத் தோன்றிவிட்டது. அவ்வளவுதான். காதும் காதும் வைத்த மாதிரி சட்டென்று முடிந்து விட்டது. அப்புறம் பானுவின் பயிற்சி முடியவும் நேரே வந்துவிட்டோம்.” என்றாள் வாணி.

“பானு என்ன பயிற்சி எடுத்தாள்? தெரிந்தால் என் தங்கைக்கும் . .” என்ற ஒருத்தியின் விசாரணையைக் கவனியாதவள் போன்று, “சென்னை ஃப்ளாட்டுக்கு நிறைய டிமான்டு இருந்ததால் கூடுதல் விலைக்கும் விற்க முடிந்தது. அதை விற்று இதை வாங்கியதாகக் கணக்குக் காட்டியதில் பத்திரப் பதிவில் பல லட்சங்கள் லாபம் நளினி.” என்று முடித்தவளுக்குப் பொடிப் பொடியாக வியர்வை துளிர்த்திருந்தது.

“ஆனாலும் இரண்டு பெண்களுமாகத் தனியே வசிப்பது ஒரு மாதிரித்தான் இருக்கிறது. அவ்வப்போது வந்து பார்த்தால் நிம்மதியாக இருக்கும். அதுதான் காலையில் கிளம்பினால் பத்து மணிக்குள் வந்துவிட முடிகிறதே! பிக்னிக் மாதிரி எல்லோருமே வந்து போகலாம். .”

குறுக்கிடாமல் கேட்டிருந்துவிட்டு, “எங்களைப் பற்றித் தெரிந்தவர்கள்., நீங்கள் யாரும் தப்பாக நினைக்க மாட்டீர்கள் என்ற நிச்சயத்தால் சொல்கிறேன். பாருங்கள் நண்பர்களே, நானும் பானுவும் இங்கே தனியே வசிக்கப் போகிறோம். ஆண் பெண் பாகுபாடின்றி, நீங்கள் எல்லோருமே எங்களுக்குப் பிரியமாக நண்பர்கள்தான். ஆனால் வெளியில் இருந்து பார்க்கிற கண்கள் வேறு எண்ணக் கூடும். யாரும் தவறாக எண்ண முடியாதபடி நாங்கள் வாழ வேண்டும்

“சென்னையில் நினைவிருக்கிறதா? எப்போதும் வாயில் கதவைச் சாத்தி வைத்திருந்தாலும், சின்ன வயது பெரிய வயது என்று இல்லாமல் வீட்டுக்கு யார் வந்தாலும் கதவை விரியத் திறந்து வைத்து விடுவோம். மறைப்பதற்கு எதுவும் இல்லை என்று சொல்லாமல் சொல்வது. கூடவே ஆபத்து நேராது என்ற நிச்சயமும் அங்கே இருந்தது.

“இது புது இடம். அப்படிக் கதவைத் திறந்து வைக்க முடியுமா என்று தெரியாது. கொஞ்ச காலம் போகட்டும். இங்குள்ள நிலைமை பற்றி ஒரு தெளிவு வந்தபின் பார்ப்போம்.

“இன்னும் ஒன்று. சென்னையை விட்டு நாங்கள் இங்கே ஏன் வந்தோம்? அம்மாவை மறக்க அல்ல. அது முடியாத காரியம். ஆனால் அம்மாவை நினைத்து நினைத்து மறுகுவது குறைய வேண்டும் என்பதற்காகவே. புது இடத்திற்கு ஏற்ப சமாளித்து வாழ்வதில், அதுவும் அம்மாவின் மகள்களாக வாழ்வது எப்படி என்று அது பற்றிய யோசனையும் செயலுமாக மனம் கொஞ்சம் மாறும்., மாறித் தேறும் என்றுதான்.

“கொஞ்ச நாள் அவகாசம். மனம் என்ன வழி போகிறது என்று அதற்குள் தெரிந்துவிடும். அப்புறம் நானே கூப்பிடுகிறேன்.

எல்லோருமாகச் சேர்ந்து இங்கே சுற்று வட்டாரம் எல்லாம் அலசுவோம்!” என்று மனதில் இல்லாத உற்சாகத்தைக் குரலில் காட்டி வாணி கோவையாக இயம்ப, மற்றவர்கள் எல்லோரும் ஒருவாறு ஒப்புதலாகக் குரல் கொடுத்தனர்.

எல்லா வேலைகளும் முடியவில்லைதான். ஆனால் சின்னச் சின்ன வேலைகளைத் தாங்களே செய்தால்தான் ஓரோரு சிறு பொருளை எடுப்பதற்கும் வீடு முழுவதையும் உருட்டிப் புரட்டத் தேவை இராது என்று சகோதரிகள் கூறியதை எல்லோருமே ஒப்புக் கொண்டனர்.

அவர்களுமே அதே கருத்தில்தான் அந்த மாதிரிப் பொருட்களைப் பிரிக்காமலே விட்டிருந்தார்கள். அத்தோடு, அவரவர் வேலை, படிப்பு போன்ற பொறுப்புகளும் அழைக்கவே எல்லோரும் விடை பெற்றுச் சென்றனர்.

சகோதரிகள் இருவருமாக வீட்டை உட்புறமாகத் தாளிட்டுக்கொண்டு, மேலும் சற்று நேரம் சாமான்கள் பிரித்து அடுக்கினார்கள். எளிமையாக ஒரு புளி சாதம் செய்தார்கள். தொட்டுக்கொள்ள சிப்ஸ், ஊறுகாய் இருந்தன.

ஓரளவு வேலை முடிந்துவிடவே, வீட்டை வெளிப்புறமாகப் பூட்டிக்கொண்டு கிளம்பிப் போய் சுற்றுப் புறத்தை ஆராய்ந்தார்கள்.

சிறு சாலையை ஒட்டியிருந்த ஆறு சிறு வீடுகளில் ஒன்று அவர்களது. மற்றவைகளில் ஆள் இருப்பது போலவே தெரியவில்லை. அல்லது காலையிலேயே கிளம்பி அவரவர் பணிக்குப் போயிருக்கலாம்.

ஆனால் கடை கண்ணி எதுவுமே இல்லாத சாலையாகவும் இருந்தது.

“என்னக்கா, ஒரு பால் பாக்கெட் வாங்கக் கூட முடியாது போல இருக்கிறதே!” என்றாள் தங்கை சற்றுக் கவலையாக.

“பார்ப்போம் பானு. இன்னும் ஐந்து வீடுகள் இருக்கின்றனவே! எங்கே என்ன கிடைக்கும் அவர்களிடம் என்று விசாரிப்போம். அதுவரை பால் பவுடர் கூட வாங்கி வந்திருக்கிறேன். காஃபி வேண்டும் போல இருக்கும்போது சொல்லு. கலந்து தருகிறேன்.” என்றாள் தமக்கை.

தோளை லேசாக நிமிர்த்தி, “அக்கா, என்னை ஒரே பாப்பாவாக்கி விடாதே. எனக்கும் காஃபியெல்லாம் போடத் தெரியும் உனக்கு வேண்டும்போது சொல்லு. நான் கலந்து தருகிறேன்.” என்றாள் தங்கை.

அங்கேயே நின்று “திரும்புவோமாக்கா? இப்படியே நடந்தால் எவ்வளவு தூரம்போனாலும் இப்படியே வெற்று ரோடாகத்தான்

இருக்கப் போகிறது. இனிமேல் உன் ஸ்கூட்டி வந்தபிறகு, இன்னும் கொஞ்சம் சுற்று வட்டாரம் ஆராயலாம். இப்போது வீட்டுக்குப் போவோம்க்கா. எனக்குக் கொஞ்சம் அசதியாக இருக்கிறது.” என்றாள் பானுமதி.

தங்கை சோர்ந்திருப்பது புரிய, அவளது விருப்பப்படி வாணியும் திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

வீடு இருக்கும் சாலைத் திருப்பம் வந்த பிறகு தங்கையை நிறுத்திப் பக்கவாட்டில் திருப்பி, அரை வட்டமாகக் கைகளைச் சுழற்றிச் சுற்றிலும் காட்டினாள்.

சுற்றிலும் ஒரே பசுமை. அதைத் தழுவி வரும் தென்றல் காற்று. சுகமான குளுமை!

“கண்களை மூடிக்கொண்டு பெரிய மூச்சுகளாக எடுத்துப் பார். சுத்தமான காற்று. உணர்ந்து பார்க்கவே வேறுபாடு தெரியும். கண்களுக்கும் எவ்வளவு பசுமை! சென்னையில் ஆர்கானிக் சாமான்கள் கடைகளில் “நலம்” என்ற கம்பெனி பேர் போட்ட பொருட்களைத் தேடி வாங்குவோமே, நினைவிருக்கிறதா? அவர்களுடையதாம்! கெமிகல் உரம் பூச்சிக் கொல்லி எதையுமே பயிர்களுக்குப் பயன்படுத்தாததால் காற்றே ஆரோக்கியமானதாக இருக்கும். இதெல்லாம் யோசித்துதான், ஊரை விட்டுச் சற்று அதிகத் தூரம் என்றாலும் பரவாயில்லைல என்று இந்த வீட்டை வாங்க ஏற்பாடு செய்தேன்.” என்றாள் தமக்கை.

“நீ சொல்வது சரிதான்க்கா. சென்னை வீட்டில் மொட்டை மாடியில் போய் இரவு நேரத்தில் நிற்போமே! அது போலக் குளுமை! ஆனால் . .” என்று இழுத்தபடி சுற்றுமுற்றும் பார்ததாள் சின்னவள்.

கூடச் சேர்ந்து பார்த்துவிட்டு, “அங்கொருவர் இங்கொருவர் தவிரச் சுற்றிலும் ஆள் நடமாட்டமே காணவில்லை. என்றாலும் நமக்குத் தெரியாமல் யாரோ நம்மை உற்றுக் கவனிப்பது போன்ற உணர்வு. அதுதானே? இந்த வீட்டை வாங்கி வந்த முதல் நாளில் இருந்து எனக்கும் அதே எண்ணம்தான்!” என்றாள் மூத்தவள்.

“அக்கா!” என்று அதிர்ந்தாள் தங்கை!

தங்கை பானுமதியின் மனம் சற்றுக் குழம்பிக் கிடக்கிற சமயம் என்பது வாணிக்கு நினைவு வந்தது. இது போன்ற தவிப்புகள் சென்னையில் அதிகம் ஏற்படுகின்றன என்பதால்தானே அது போன்ற சூழலின் வாசனையே இல்லாத இந்தக் கிராமத்தில் குடியேற வாணி தீர்மானித்ததே!

இது தெரியாமல் பட்டணத்து சொகுசு சுந்தரி என்று . . . சே! பழைய சம்பவங்களை எண்ணிப் பார்க்கும்போது கூடவா, அந்த ஆளின் பேச்சு நினைவு வந்து எரிச்சலூட்ட வேண்டும்?

# அத்தியாயம் - 3

அந்த மனிதனிடமிருந்து மனதை மாற்றுவதற்காகவே வாணி அன்றைய நிகழ்வுகளை மனதால் தொடர்ந்தாள்.

சின்னவளின் அதிர்ச்சியைப் போக்குவதற்காக விளையாட்டு பாவனையில் அவளது கையைப் பற்றி இழுத்தபடி, மீண்டும் நடையைத் தொடர்ந்தாள்.

“ஏய் என்னடீ பயம்? யாரோ நம்மை மிரட்டுவதற்காகவோ, மிரட்டி நம்மிடம் இருப்பதைப் பறிப்பதற்காகவோ நம்மை வேவு பார்க்கிறார்கள் என்று எண்ணிவிட்டாயா? அப்படி ஒருவன் நம் கையெட்டும் தூரத்துக்குள் வந்துவிட்டால், அப்புறம் அவன் முழுத் தோலுடன் தப்பிப் போக முடியுமா, என்ன? நீயே சொல்லேன்!” என்று பரிகாசத் தொனியில் வினவினாள்.

அவள் விரும்பியது போலத் தங்கையின் முகம் பெருமளவு தெளிந்தபோதும், “அது சரிதான் . .. ஆனால் . . பின்னே ஏன் அக்கா, அந்த யாரோ நம்மை உளவு பார்க்க வேண்டும்?” என்று விடாமல் கேட்டாள் தங்கை!

லேசாகத் தோளைக் குலுக்கினாள் மூத்தவள்.

“பெரிதாக ஒன்றும் இராது, செல்லம்! சின்னப் பெண்களாக இந்தப் பகுதிக்குப் புதிதாக வந்திருக்கிறார்களே எப்படிப் பட்டவர்களோ என்று அறிவதற்காக இருக்கலாம். ஏதோ தப்புத் தண்டா செய்துவிட்டு, இங்கே ஒளிய முயற்சி செய்வதாக எண்ணியும் உளவு பார்க்கலாம்! இவற்றில் எதுவுமே இல்லாமல் முழுதாகக் கெட்ட நோக்கம் உள்ளவர்களாக இருந்தாலும் நம்மால் சமாளிக்க முடியாதா, என்ன? பெப்பர் ஸ்ப்ரே, கத்தி  எல்லாம் இலகுவாக எடுக்கிற விதமாக நீயும் வைத்திருக்கிறாய்தானே?” என்று இயல்பான குரலில் வாணி கேட்க, பானுவின் முகமும் முழுமையாக இறுக்கம் தளர்ந்து இயல்பானது.

“அம்மா ரொம்ப கிரேட்! இல்லையாக்கா? எந்த சூழ்நிலையையும் சமாளிக்கிற விதமாக, அதையும் அலட்டலே இல்லாமல் என்ன இயல்பாக நம்மை வளர்த்திருக்கிறார்கள்! ஆனால் எவ்வளவு தூரம் வந்தாலும், அம்மாவை நம்மால் மறக்கவே முடியாதுக்கா!” என்று முகம் வாடிக் கண் கலங்கினாள் பானுமதி.

“மறக்கக் கூடாது பானு, மறக்கவே கூடாது! ஆனால் அம்மாவைப் பற்றிப் பெருமையாக நினைத்து நிமிர வேண்டுமே தவிரக் கண்ணீரில்

கரையக் கூடாது. அவ்வளவுதான்! அம்மா இழந்தது வாழ்க்கைத் துணையான கணவரை. அப்போது அம்மா அழுது ஓய்ந்து போயிருந்தால் நம்மை வளர்த்திருக்க முடியுமா? இதோ, இந்த இயற்கைச் சூழ்நிலை கூட அம்மாவின் ஆசைக் கனவுதானே? ஓய்வு காலத்தில் இப்படி இயற்கை அழகு நிறைந்த ஓர் இடத்தில் அமைதியாக வாழ வேண்டும் என்று எத்தனை முறை சொல்லியிருப்பார்கள்! இப்போது கூட அவர்களது ஆசைப்படி நாம் வாழ்வதை சொர்க்கத்தில் இருந்து பார்த்து சந்தோஷம்தான் பட்டுக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ?"

தன்னையறியாமல் வானை நோக்கிய சகோதரிகள் இருவரின் கண்களிலும் நீர் திரையிட்டிருந்தது.

அக்கா என்னென்ன சொன்னாலும், சென்னையை விட்டுக் குடி பெயர்ந்து இவ்வளவு தூரம் வருவதற்கான மிகப் பெரிய காரணம் தானே என்று, பானு புரிந்தே இருந்தாள்.

இந்த அக்காவுக்கு ஏற்ற தங்கையாக இனி வாழ வேண்டும் என்று உள்ளூர உறுதியும் செய்துகொண்டாள்.

பொதுவாகவே எல்லா வேலைகளையும் எல்லோருமாகப் பகிர்ந்து செய்வது வரலட்சுமி வளர்த்த பழக்கம். இப்போதும் இருவருமாக வேலைகளை முடித்துவிட்டுப் படுத்தனர்.

வாணி எப்போதுமே அதிகாலையில் துயில் எழுகிறவள். அன்றும் அது போல எழுந்து, பல் துலக்கிக் கையோடு கொண்டு வந்திருந்த பவுடர் பாலில் காஃபி கலந்து குடித்துவிட்டு, ஒரு சாவியை எடுத்துக்கொண்டு வெளியே கிளம்பினாள்.

அந்தப் பகுதியில் பால், பத்திரிகை, காய்கறி கொண்டு வந்து கொடுப்பவர்களைப் பார்த்து, தங்களுக்கும் கொண்டு வருமாறு ஏற்பாடு செய்ய வேண்டுமே.

சுற்று முற்றும் பார்த்தபடி வாணி நடக்கலானாள். அவர்களது வீட்டுக்கு அருகில் இருந்த மற்ற ஐந்து வீடுகளும் பூட்டியே இருந்ததால் அவள் மறு புறமாகச் சென்று பார்த்தாள்.

முன் தினம் போலவே ஓரளவு ஆள் நடமாட்டமே இருந்தது. சாலையோரம் நின்ற மரங்களைப் பார்ப்பது போல அவள் புறமாகவும் ஒரு பார்வையைச் செலுத்தினார்களே தவிர, அதற்கு மேல் யாரும் நின்று அவளிடம் பேச்சுக் கொடுக்கவில்லை. எல்லோரும் அவரவர் வேலையைப் பார்ப்பதற்காக ஓடிக் கொண்டிருந்தார்கள் போலும்.

அவளாக யாரையேனும் நிறுத்திப் பேச முயற்சிப்பதும் அவளுக்குச்

சரியாகத் தோன்றவில்லை. அவரவர் வேலையைப் பார்க்க ஓடும்போது, இதேதடா இடைஞ்சல் என்று எரிச்சல் படுத்துவானேன்?

அது போல விவரமறிதல், ஆராய்ச்சிக்கெல்லாம் அவர்களுக்கு எவ்வளவோ அவகாசம் இருக்கிறதே! ஆனாலும் அவள் மனதில் சிறு உறுத்தல்.

என்னவோ, நகரங்களில்தான் அடுத்த வீட்டில் கொலையே நடந்தாலும் யாரும் கண்டு கொள்வது இல்லை என்பார்கள். இங்கேயும் அப்படித்தான் போலும் !

பக்கத்தில் திருச்சி பெரிய நகரமே என்றாலும், இது புறநகர்ப் பகுதியையும் தாண்டி இருந்ததால் இதை நகரம் என்று சொல்லவே முடியாது. ஓரளவு கிராமப்புறத் தோற்றமே என்றாலும் அந்த அளவு கூட வீடுகளைக் காணோம்!

தோளில் மாட்டியிருந்த சிறு பையில் இருந்த மொபைலை எடுத்து வாணி மணியைப் பார்த்தாள்.

பானுமதி கண் விழித்திருக்கக் கூடிய நேரம்தான். ஆனால் படுக்கையை விட்டு எழுவதற்கு அவளுக்குப் பிடிக்காது. எப்போதுமே எழுவதற்கு அம்மாவோடு தகராறு செய்வாள். தலையில் தண்ணீரை ஊற்றி விடுவேன் என்று மிரட்டிய பிறகுதான் ஒருவாறு கண்ணைத் திறந்து பார்ப்பாள்!

அம்மா அப்படி ஒரு போதும் தலையில் தண்ணீரை ஊற்றியது கிடையாது என்றாலும், இப்படி ஒரு சுவாரசியமான சண்டை போடுவது அந்த அம்மாவுக்கும் மகளுக்கும் பிடிக்கும்!

இப்படிப்பட்ட ஏதாவது நினைவில் தங்கை மனம் கலங்கிக்கொண்டு இருக்கக் கூடாதே!

சட்டெனத் திரும்பி வீட்டை நோக்கி வாணி வேகமாக நடந்தாள்.

வீட்டை நெருங்கும் சமயத்தில் பின்னிருந்து ஜீப் மாதிரியான ஒரு மோட்டார் வாகனம் அவளது வேகத்துக்குச் சரியாக அவளை ஒட்டி வருவதை வாணி உணர்ந்தாள். உணர்ந்ததுமே, சாலையின் பக்கவாட்டில் நின்ற மரத்தருகே வேகமாகச் சென்று, அதன் ஒரு புறமாக நின்று திரும்பிப் பார்த்தாள் அவள்.

பெப்பர் ஸ்ப்ரேயை எடுக்க வசதியாகக் கைப்பையில் கை!

பயமற்ற பார்வையும் நிமிர்வுமே யாரையும் யோசிக்க வைக்கும் என்பது அவள் அனுபவத்தில் அறிந்தது.

அவளது அனுமானம் சரியே என்பது போல, ஜீப்பைச் சாலையில் இருந்து சற்று விலக்கி நிறுத்திவிட்டு அதை ஓட்டியவன் இறங்கி அவளை நோக்கி வந்தான்.

அவள் எதிரே நின்று அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு அவன் பேசினான்.

“இரண்டு பெண்களாகத் துணிந்துதான் இங்கே வாழ வந்திருக்கிறீர்கள் என்று புரிகிறது. ஆனால் ஓர் எச்சரிக்கை. ஏற்று நடப்பது நல்லது.” என்றான் அந்த இளைஞன்.

“எச்சரிக்கை என்னவென்று சொல்லுங்கள். அதை ஏற்பது தேவையா அல்லவா என்று நான் முடிவு செய்து கொள்கிறேன்.” என்றாள் அவளும் பிசிரற்ற குரலில்.

கண்கள் சற்றே இடுங்கி விரிய, “மிகவும் முக்கியமாக நீ அறிந்துகொள்ள வேண்டிய  விஷயம், இது சென்னை அல்ல. இங்கே கண்டபடி ஆட்டம் போட முடியாது! அப்படி ஏதும் ஆசை இருந்தால் உடனே திரும்பிப் போய்விடுவது நல்லது.” என்றான் அவன் குரலில் அழுத்தத்துடன்.

நாகரீகமாக அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கலாம். அதை விட்டு, அவள் திரும்பிப் போவது பற்றி இவன் என்ன சொல்வது?

தலையைச் சிலுப்பி, “சென்னையைப் பற்றி நீங்கள் அறிந்தது ரொம்பக் கொஞ்சம் என்பது இப்போது தெரிகிறது. அங்கேயும் யாரும் கண்டபடி ஆட்டம் போடுவது இல்லை.” என்று மட்டும் சொன்னாள்.

“இரண்டு நாள் நடப்பு வேறு மாதிரித் தோன்றியதே! ஒருவேளை அங்கே ஆட்டம் போட முடியாத சூழ்நிலை என்றுதான் இங்கே வந்திருப்பதோ?” என்று ஒற்றைப் புருவம் தூக்கி வினவினான் அவன்.

இரண்டு நாள் நடப்பு! அப்படியானால் மறைந்திருந்து கவனிப்பவன் இவன்தானா? ஒருவருக்குத் தெரியாமல் இப்படி வேவு பார்ப்பதே தப்பு! அதையே அடிப்படையாகக் கொண்டு அவளுக்கு எச்சரிக்கை வேறு செய்கிறானாமா?

“சென்னைக்கும் இந்த ஊருக்கும் பல வேறுபாடுகள் இருப்பதை ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்.” என்று அமைதியாகவே தொடங்கி, “அங்கெல்லாம் இப்படி அடுத்த வீட்டாரை உளவு பார்த்துக் கொண்டு அலைய மாட்டார்கள்! அவரவர் வேலையைப் பார்த்துக்கொண்டு அமைதியாகப் போய்விடுவார்கள்.” என்று சற்று ஏளனமாகக் கூறி முடித்தாள்.

“கேள்விப்பட்டிருக்கிறேன். அடுத்த வீட்டில் கொலையே விழுந்தால் கூடக் கண்டுகொள்ள மாட்டார்களாமே! ஆனால் எங்கள் கிராமப்புறத்தில் அந்த மாதிரி நாகரீகம் கிடையாது. தப்புத் தண்டா நடந்தால் தட்டிக் கேட்கத்தான் செய்வார்கள். அதனால் ஒழுங்காக நடந்துகொள்வது, உனக்கு நல்லது! அது முடியாதவர்கள் மரியாதையோடு திரும்பிப் போய்விட வேண்டும்! நீயாகப் போகாவிட்டால், போக வைப்பேன்!” என்றான் அவன் பழைய அழுத்தத்துடனேயே!

மீண்டும் திரும்பி செல்லச் சொல்லுகிறான். செல்லாவிட்டால் விரட்டுவானாமே! இவன் யார் அதைச் சொல்ல? கேட்டால் மறுபடியும் கிராமப்புறப் பழக்கம் என்று ஏதாவது சொல்லலாம்!

எனவே, “தப்புத் தண்டா நடந்தால்தானே?” என்று வேறு கேட்டாள் வாணி.

அவளை வெறித்து நோக்கினான் அவன்.

“அத்தோடு இங்கே இருப்பதும் போவதும் எங்கள் விருப்பம். அதில் தலையிட வேறு யாருக்கும், உங்களையும் சேர்த்துதான் சொல்லுகிறேன்., யாருக்குமே உரிமை கிடையாது.” என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக.

இன்னமும் கை பெப்பர் ஸ்ப்ரேயைப் பற்றிக்கொண்டுதான் இருந்தது. அவனுக்கும் புரிந்தது என்பது அவனது பேச்சில் தெரிந்தது.

“தற்காப்பு பற்றி ஏதோ தெரியும் என்று புரிகிறது. ஆனால் அந்தத் தைரியத்தில் திமிர் காட்டினால் பதிலடி தாங்க முடியாததாக இருக்கும். பட்டணத்து சொகுசு சுந்தரிகளால் அந்தக் கஷ்டமெல்லாம் அனுபவிக்க முடியாது. அதைக் காட்டிலும் வந்த வழியே திரும்பிப் போய் விடுவது நல்லது. தோன்றும். விரைவிலேயே அப்படிப் போய் விடுவாய் என்பதும் எனக்கு நிச்சயமே! “

“உங்கள் தொழில் ஆரூடமா? அவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறீர்கள்?”

“இரவு முடிந்தால் பகல் வரும் என்று சொல்ல ஆரூடம் படித்திருக்கத் தேவையில்லை.”

“ஆரூடம் போலவே தமிழும் சற்றுத் தகராறு போல இருக்கிறதே! இருளை மனதில் வைத்துக்கொண்டு தப்புத் தப்பாக உவமை சொல்லுகிறீர்கள்? “

“தப்பு சரி பற்றி வெகு சில நாட்களிலேயே தெரிந்து போகும்.”

என்றான் அவன் உறுதியாகவே.

“இலவு காத்த கிளி என்றும் ஓர் உவமை சொல்லுவார்கள். விரயமாகப் போவது உங்கள் பொழுது. தாராளமாகக் காத்திருந்து பாருங்கள்!” என்று அலட்சியப் பார்வையோடு அசையாமல் நின்றாள் அவள்.

நிற்கும்போதே, இந்த அதிகப் பிரசங்கி மனிதன் கொஞ்சம் குள்ளமாக இருந்திருந்தால் இன்னும் கொஞ்சம் கம்பீரத்தோடு பார்க்க முடிந்திருக்குமே என்று அவளது எண்ணம் ஓடிற்று.

ஒருவேளை அவனுக்கும் அப்படித்தான் தோன்றுகிறதோ?

இந்தப் பெண் இன்னும் பத்து சென்டிமீட்டர் குறைவாக வளர்ந்திருந்தால், கீழ்க்கண் பார்வையிலேயே புழுவாகச் சுருள வைத்திருக்கலாமே என்று எண்ணுகிறானோ?

இப்போது கூட . . .

அவ்வளவு நேரம் நடந்ததால் கூட இருக்கலாம். வாணியின் முழங்கால்கள் சற்றுப் பலவீனமாக உணரும்போதே, நல்லவேளையாக ஓர் அலட்சிமான தோள்க் குலுக்கலுடன் ஜீப்காரன் திரும்பித் தன் வாகனத்தை நோக்கி நடந்தான்.

ஓரளவு பாதுகாப்பாக நிற்கும் இடத்தை விட்டு, அவசரமாகச் சாலைக்குள் செல்ல வாணிக்கு விருப்பமில்லை.

இந்த ஊரை விட்டு அவளை விரட்டுவது அவனது நோக்கமானால், ஜீப் வெகுதூரம் போகிறவரை, அவள் சாலையில் ஏறாதிருப்பது நல்லது!

ஆனால் அவன் ஏன் அவளை விரட்ட வேண்டும்? அவளாலோ தங்கையாலோ அவனுக்கு என்ன பிரச்சினை இருக்கக் கூடும்?

சென்னை பற்றிக் குறிப்பிட்டானே? அவள் சென்னையைச் சேர்ந்தவள் என்று அவனுக்கு எப்படித் தெரியும்?

பானுவிடம் சொன்னதுபோல யார் என்ன என்று சும்மாக் கவனிக்கிறானா? அல்லது . . ஆனால் கெட்ட நோக்கம் இருந்திருந்தால் திரும்பிச் செல்லும்படி எப்படிச் சொல்லுவான்?

ஆணாதிக்க புத்தி என்கிறார்களே! அது போலவா?

அவளாகவே திரும்பிப் போய்விடுவாளாமே!

“மோப்பக் குழையும் அனிச்சம்” என்பார்கள். வாசனை பார்த்தாலே

அந்தப் பூ வாடி விடுமாம். அந்த மலரைப் போன்ற அதி கோமளவல்லிகளாகவா, வாணியையும் அவளுடைய தங்கையையும் அவன் நினைத்துவிட்டான்? அவர்களது வளர்ப்பு பற்றி அறியாதவன்!

ஐயோ பாவம்! எவ்வளவு பெரிய ஏமாற்றம் அவனுக்குக் காத்திருக்கிறது!

வீட்டை அடைந்து பார்த்தால் பானுமதி விழித்திருந்தாள். கண்கள் சற்றுக் கலங்கி இருந்தபோதும், காஃபியைக் கலந்து எடுத்து குடித்துமிருந்தாள்.

அது மட்டுமல்ல. அடுப்பில் உருளைக்கிழங்கு வெந்து கொண்டிருந்தது. வெட்டுப் பலகையில் பொடிசாக நறுக்கப் பட்டிருந்த வெங்காயம்!

“ஹேய்! இன்னும் கொஞ்சம் தாமதமாக வந்திருந்தால் காலை உணவே தயாராக இருந்திருக்கும் போல? இப்படித் தனியே வேலை செய்வதற்கு, என்னையும் கூப்பிட்டிருக்கலாமே!” என்றபடி மாவுப் பாத்திரத்தை எடுத்தாள் வாணி.

“நீயும் முக்கியமான வேலையாகத்தானே போயிருப்பாய்? என்னக்கா, பால், தினப் பத்திரிகை, காய்கறி . . . என்னமாவது விவரம் கிடைத்ததா?”

“ஊகூம். அந்த விவரங்கள் எதுவும் இன்னமும் தெரியாவிட்டாலும், தேவையான மற்றொரு தகவல் கிடைத்தது. . .” என்றவள் தங்கையை நேரே பார்த்து, “நாம் இங்கே குடி வந்தது இங்குள்ள யாரோ ஒருவருக்குப் பிடிக்கவில்லை. என் பின்னோடு வந்து சென்னைக்கே திரும்பிப் போய்விடுமாறு இலவசமாய் ஆலோசனை கூறிவிட்டுப் போனார். கட்டாயம் போய்விடுவோம் என்று ஜோசியமும் சொன்னார்! “

“ஓ! இரண்டு நாட்களாக நம்மைக் கண்காணிக்கிற ஆள்?”

“ரொம்ப கரெக்ட் ! “

“ஆள் ரௌடியாக்கா? மிரட்டினானா?” என்று கவலையாகக் கேட்டாள் சின்னவள்.

“மிரட்டுவதாக அந்த ஆள் நினைத்திருக்கலாம். ஆனால் எதற்காக நம்மை விரட்ட நினைக்கிறார் என்பதுதான் புரியவில்லை. எப்படியும் பழம் பழுத்தால் கீழே விழுந்துதானே ஆக வேண்டும். இப்போது இலவசமாய் எச்சரிக்கை வந்த மாதிரி, உரிய நேரத்தில் அதுவும் தானாகத் தெரிய வரும். அப்போது பார்த்துக் கொள்ளலாம். அதுவரை

நமக்கு அந்தக் கவலை வேண்டாம். எப்படியும் நாம் நமக்காக இங்கே வந்தோமே தவிர, தெருவிலே போகிறவர்கள் வருகிறவர்களின் அபிப்பிராயத்துக்காக அல்ல! சொல்லு, உனக்கு மேல் படிப்புக்கான நேர்காணலுக்குத் தேவையான எல்லாம் எடுத்து வைத்துவிட்டாயா? நாளைக்கு நேரில் போக வேண்டுமில்லையா?” என்று தங்கையின் கவனத்தை அவளது மேல் படிப்பின்மீது வாணி திருப்பினாள்.

“எல்லாம் தயார். ஆனால் அக்கா, சென்னையில் நிறைய வாய்ப்புகள். அதை விட்டு இங்கே ஏன் வந்தாய் என்று கேட்டால் என்ன சொல்வது? உண்மைக் காரணத்தைச் சொல்ல முடியாதே . . “ என்று பானு மறுபடியும் கவலைப்பட்டாள்.

“ஏன் முடியாது? எதற்கும் அடிப்படைக் காரணம் என்ன? அம்மாவை இழந்ததுதானே? அதையே சொல்லு. சென்னையில் அம்மா நினைப்பு தாங்க முடியவில்லை. புது இடத்துக்குப் போய்க் குடியேறினால், அந்த சோகம் குறையுமோ என்று எண்ணியதாகச் சொல்லு. கேட்பவர்களும் மனிதர்கள்தானே? மேலே ஒன்றும் கேட்க மாட்டார்கள்.” என்றாள் வாணி பூரி மாவை அளவாக எடுத்தபடி.

“ரொம்பக் கரெக்ட் அக்கா! கவலைப்பட அவசியமே இல்லை! சரியான பதிலைச் சொல்லித் தந்ததற்குத் தாங்க்ஸ்க்கா!” என்று ஓடி வந்து தமக்கையைக் கட்டிக் கொண்டாள் தங்கை!

“ஏய் ஏய், என்னடி அசடு. பார் உன் மேலெல்லாம் மாவு! முகத்தில் கூட! “

“உன் மேலேயும்தான் அக்கா! ரத்த சகோதரிகள் என்றால் வெளியே தெரியாதில்லையா? அதுதான் மாவு சகோதரிகள் ஆகிவிட்டோம். அக்கா, மாவைத் தட்டி விட்டுவிடாதே. ஒரு “செல்ஃபீ” எடுத்துக் கொள்ளலாம். எப்போதாவது பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கும்!” என்று ஓடிப் போய் மொபைலை எடுத்துவந்த தங்கையைப் பார்த்துப் புன்னகை செய்தாள் பெரியவள்.

இது போன்ற யோசனைகள் எல்லாம் இவளுக்குத்தான் தோன்றும். சல்வார் அணியும் காலம் வருகிறவரை நாக்கைத் துருத்தாமல், கண்ணை உருட்டாமல் ஏதாவது ஒரு சேட்டை செய்யாதபடி பானுவின் புகைப்படம் ஒன்று கூட இராது. அம்மாவும் அவளும் பார்த்துப் பார்த்துச் சிரிப்பார்கள். அப்புறமும் கூட அவ்வப்போது இது போல ஏதாவது எடுத்து வைப்பாள்.

“அக்கா சிரி! உம்மென்று இருந்தால் படத்தின் எஃபெக்டே கெட்டுவிடும்! கொட்டிய மாவை சுத்தம் செய்வதைப் பற்றி

நினைத்தாயா? அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். . . "

தங்கையின் கலகலப்பு ஆறுதலைத் தர வாணி புன்னகை செய்தாள். புது இடம் தேடி வந்த முடிவு சரியானதே!

காலை உணவின் பின் இருவருமாக மீண்டும் வீட்டை ஒழுங்குபடுத்தும் வேலையைத் தொடங்கினார்கள்.

"நம் சினேகிதப் பட்டாளம் எவ்வளவோ உதவி செய்த பிறகும், நாம் செய்வதற்கும் இவ்வளவு இருக்கிறதே! அவர்கள் வரவில்லை என்றால் நம்மால் சமாளித்திருக்கவே முடியாது, என்னக்கா?" என்றபடி பயறு வகைகளை ஃப்ரிஜ்ஜினுள் அடுக்கி வைத்தாள் பானுமதி. "என்னவோ சொல்வார்களே, வீட்டைக் கட்டிப் பார்., கல்யாணத்தைப் பண்ணிப்பார் என்று., அது போல குடித்தனத்தை மாற்றிப் பார் என்று சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது. "

"இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குக் காய்கறிகள் போதும். அதற்குள் ஸ்கூட்டி வந்துவிட்டால் நன்றாக இருக்கும். ஆனால் அன்றைக்கு நான் கீழே போட்டதில் ஏதோ வளைந்து போனதைச் சரிப்படுத்த ஒரு வாரம் பிடிக்கும் என்று சொன்னார்களே . . .அது வரை போக்குவரத்து பிரச்சினை ஆகுமா?"

"ஆகாது. சில நாட்கள் டாக்சி எடுப்பதில் நாம் போண்டியாகிவிட மாட்டோம்."

இருவரின் சளசளப்புக்கிடையே வீட்டை அடுக்கும் வேலையோடு சற்று எளியதாகச் சமையலும் முடிந்தது.

"சமைத்த பாத்திரங்களைக் கழுவி விட்டால் வேலை முடிந்தது. கசகசப்பு தீரக் குளித்துவிட்டு சற்று ஓய்வெடுக்கலாம்." என்று சிங்க்கில் கிடந்த பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவத் தொடங்கினாள் வாணி.

தண்ணீர்நூலாக வரவும், "மோட்டாரைப் போடு பானு." என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மின் விசிறி நின்று போயிற்று.

"ஐயோ அக்கா, இங்கே பவர்கட் உண்டு போல இருக்கிறதே! மின்சாரம் வரவில்லை. எவ்வளவு நேரம் வராது என்று ஒன்றும் தெரியவில்லையே! அக்கம் பக்கம் கேட்டு அறிந்துகொள்ளவும் வழியில்லை. இது எப்போது வந்து நாம் எப்போது குளிப்பது? ஒரே வியர்வை வேறு!" என்றாள் பானுமதி கவலையோடு.

அவ்வளவு நேரம் இருந்த உற்சாகம் மாறிக் குரல் ஒரு மாதிரி ஜவ்வு இழுத்தது.

இந்தச் சோர்வுகள் அவளுக்கு வரக் கூடாதவை.

“இங்கே வா, பானு. “ என்று பின் கதவைத் திறந்து கிணற்றைக் காட்டினாள் வாணி. “பார், கிணற்றில் நீர் இறைக்க எல்லா வசதிகளும் இருக்கின்றன. ராட்டினம், கயிறு, வாளி! ஆளுக்கு நாலு வாளித் தண்ணீர் இறைத்துக் குளிக்க நம்மால் முடியாதா? “ஙைஙை”“ என்கிறாயே! மின்சாரத்தைக் கண்டு பிடிக்காத காலத்தில், குளிக்க, சமைக்க, சுத்தம் செய்ய என்று எல்லா வேலைகளுக்கும் இப்படி இறைத்துத்தானே பயன்படுத்தி இருக்கிறார்கள்! அவர்களுக்கு நாம் மட்டமா? வா. தேவையான தண்ணீரை நாமே இறைத்து வந்து குளிக்கலாம்.”

செய்தார்கள். கையின் சருமம் லேசாகக் காந்தியது தவிர, ரொம்பக் கடினமாக ஒன்றும் தெரியவில்லை.

பானுவுக்குக் கொஞ்சம் சோர்வாக இருக்கவே குளித்து உணவருந்திய பின் படுத்துத் தூங்கிவிட்டாள்.

“நகரத்து சொகுசு சுந்தரிகளால், இந்த கஷ்டமெல்லாம் அனுபவிக்க முடியாது . .”

கைகளை விரித்துப் பார்த்தால் உள்ளங்கை லேசாகச் சிவந்திருந்தது.

இதைத்தான் சொன்னானோ? இதற்குப் பயந்தா திரும்பிச் சென்று விடுவார்கள்?

தங்கையின் அருகில் அமர்ந்து, அவள் விழித்து விடாதபடி மென்மையாகக் க்ரீமைக் கைகளில் தடவிவிட்டாள் வாணி. அப்படியே தனக்கும் தேய்த்துக்கொண்டு சோஃபாவில் இலகுவாகச் சாய்ந்துகொண்டாள்.

எந்தப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வு இருக்கும். அதைச் யோசியாமல் ஒரு சாதாரணச் சிக்கலுக்குப் பயந்து ஓடி விடுவார்கள் என்று அந்த ஜீப்காரன் எப்படி நினைத்தான் என்று யோசித்த வாணி விலுக்கென நிமிர்ந்து அமர்ந்தாள்.

இந்த மின்தடை அவனால் நேர்ந்திருக்குமா? இது தொடர்ந்தால் அவளது பிழைப்பே கெட்டுவிடுமே! ஆனால் அவனால் முடியுமா?

ஒரு வீட்டுக்குப் புதிதாக யாரும் குடிவந்தால் புதிய வாடிக்கை கிடைக்குமா என்று விற்பனையாளர்கள் தேடி வருவதுதானே இயல்பு? அவளாக வெளியே சென்று, பால் பத்திரிகை கிடைக்குமா என்று பார்க்கப் போனால் யாருமே நின்றுகூடப் பேசக் காணோமே!

எல்லாவற்றுக்கும் காரணம் அந்த ஆளேதானோ? அவர்களோடு பழக வேண்டாம் என்று தடுத்திருப்பானோ?

இந்தப் பகுதிக்கு இவன் ஒரு மகாராஜா மாதிரியோ?  தஞ்சை திருச்சியெல்லாம் பழைய சோழ மன்னர்கள் ஆண்ட பிரதேசம்தானே? அவர்களுடைய வாரிசாக இருப்பானோ?

நகரத்தை விட்டு இவ்வளவு வெளியே இருக்கிறான்., இந்த ஜம்பம், ஜபர்தஸ்து எல்லாம் விடாமல் அப்படியே பிடித்து வைத்திருக்கிறானோ?

கடவுளே!

# அத்தியாயம் - 4

ஒரு கணம் மனம் கலங்கிவிட்ட போதும் வாணி உடனே சுதாரித்தாள்.

அவளது அச்சங்கள் எல்லாம் இப்போது சாத்தியம் அல்ல. மன்னர்களின் காலம், அவர்களது அதிகாரம் அனைத்தும் முடிந்து கிட்டத்தட்ட எழுபது ஆண்டுகள் முடிந்தாயிற்று.

சட்டம், அரசாங்கம், போலீஸ் எதுவும் அவர்கள் கையில் இல்லை! எல்லாமே அவளைப் போன்ற மக்களுடையது. அதனால் இந்த மாதிரி அசட்டுக் கற்பனைகளை விடுத்து, அடுத்துச் செய்ய வேண்டியதை யோசிக்கலாம்.

நாளைக்கு இங்குள்ள இபி.க்குச் சென்று மின்தடை பற்றி விவரம் கேட்கலாம். சிவகாமியுடைய உறவினரிடமும் இங்குள்ள பொது விவரங்கள் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

பானுவின் கல்லூரி விஷயம் பார்க்க வேண்டும்.

முக்கியமாக அவளது வேலை ஒழுங்காக நடக்க வேண்டும். இல்லாவிட்டால் வருமானம் கெட்டுவிடும்! அது மட்டும் கூடவே கூடாது! எனவே தடையற்ற மின்சாரம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டும்.

நல்லவேளையாக மின்சாரம் வந்துவிட, லேப்டாப்பை எடுத்து வைத்துக்கொண்டு வாணி வேலையைத் தொடங்கினாள்.

இது மும்பைப் பிரதேசத்து நிறுவனம். எக்கச் சக்கமாக சினிமாவில் சம்பாதித்த பணத்தில் ஒவ்வொரு தொழிலாகத் தொடங்கிக் கொண்டிருந்தார்கள். முந்திய தொழிலுக்கான வேலையை அவளிடம்தான் கொடுத்தார்கள்.

தொழில் வெற்றியானதோடு வேலையும் தரமானதாக இருக்கவே இப்போது அடுத்த தொழிலுக்கும் அவளிடமே பொறுப்பைத் தந்தார்கள்.

தொழிலைத் தொடங்குவது ஆந்திராவில். வெங்கடாஜலபதிக்கு மிஞ்சி அங்கே எதுவுமே கிடையாது. ஆனால் அதற்காக “அரைத்த மாவையே அரைப்பது” போல அவளது வேலை அமைந்துவிடக் கூடாது!

லோகோவில் இருந்து குப்பைத் தொட்டிக் கவர் வரை, பாலாஜி இருக்க வேண்டும். ஆனால், யார் மனதையும் புண்படுத்தாத விதமாக!

யார் முகமும் சுளிக்க நேராத விதமாக!

அது பற்றிச் சற்று நேரம் யோசித்துக் குறிப்புகள் எடுத்து வைத்தாள்.

பொருட்களைப் பாக் செய்து அனுப்பும் பைகள் விஷயம் எளிது. வெங்கடாஜலபதியின் கையில் இருந்து தங்கக் காசுகளோடு நிறுவனத்தின் தயாரிப்புகளும் சேர்ந்து கொட்டுவது போலக் காட்டி விடலாம். ஆனால் குப்பைத் தொட்டி . .அதில் பரப்பும் பை . . .

சட்டென ஒன்று தோன்றியது. இறைவனின் கைகளில் இருந்து காசு பொருளோடு பூக்களும் கொட்டுவது போலக் காட்டுவது. அதில் சற்று வாடிய பூக்களைப் பிரித்துப் போடக் குப்பைத் தொட்டியும் அதில் பரப்பும் பைகளும்!

கோடுகளாக வரைந்து பார்க்கையில் ரொம்பப் பொருத்தமாகவும் சிறப்பாகவும் அவளுக்குத் தோன்றியது.

க்ளையன்டுக்கும் அப்படியே தோன்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டபடி தங்கையின் அருகிலேயே தானும் படுத்தாள் வாணி.

உடம்பு அலுப்பை விட மனம் அதிகம் களைத்திருக்க வேண்டும். பகலில் தூங்கும் பழக்கம் இல்லாத வாணிக்குமே கண்கள் சொருகிவிட்டன.

எவ்வளவு நேரம் அவள் உறங்கினாளோ? அழைப்பு மணியை யாரோ திரும்பத் திரும்ப அழுத்தினார்கள் போல! ஒரே சத்தம்.

யாரேனும் சின்னப்பிள்ளைகள் விளையாட்டோ என்று வாணி யோசிக்கும்போதே மறுபடியும் அழைப்பு மணி ஒலிக்கலாயிற்று!

பானுவும் லேசாக அசையவும் துள்ளி எழுந்து ஓடிப்போய் பக்கவாட்டு ஜன்னல் வழியே வாணி வெளியே பார்த்தாள்.

காலையில் கண்ட அதே ஜீப்காரன். இப்போது என்னவாம்?

எரிச்சலுடனேயே வீட்டின் தேக்கு மரக்கதவைத் திறந்து, “எதற்காக இப்படிக் கட்டிடமே இடிந்து விழுந்து விடும்போல மீண்டும் மீண்டும் மணியை அடிக்கிறீர்கள்?” என்று எரிச்சலை மறையாத குரலில் வினவினாள் அவள்.

“ஏன், மகாராணியின் முக தரிசனத்துக்காக என்று எண்ணினாயா? சொப்பனம் கூடக் காணாதே. உன் சொத்தை உன்னிடமே திருப்பிக் கொடுத்துவிட்டுப் போக வந்தேன்! வந்து ஏற்றுக் கொள்!” என்று ஏளனமாகக் கூறிவிட்டு அவனது வாகனத்தின் புறமாகத் திரும்பி,

“உம்!” என்று யாருக்கோ கட்டளை இட்டான்.

என்னவென்று அறிந்துகொள்ளும் ஆர்வத்தை முகத்தில் காட்டாமல் கட்டுப்படுத்திக் கொண்டு வராண்டாவைச் சுற்றிச் சென்ற கிரில் அருகே மெல்லச் சென்று நின்றாள் வாணி.

ஆனால் அடுத்து அவளது எல்லைக்குள் எறியப்பட்டு வந்து விழுந்த பொருட்களைக் கண்டதும் அவள் வெளியே காட்டிய அமைதி பறந்தது.

“ஏய்! என்ன இது நிறுத்துங்கள். போடாதீர்கள். இது வீடு. குப்பைக் கிடங்கல்ல. ஏ மிஸ்டர், அவர்களை நிறுத்தச் சொல்லுங்கள்! நிறுத்தி இதை அள்ளிக்கொண்டு போகச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் . .” என்று அதட்டியபடி கிரில் கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

அதற்குள் ஒரு மூட்டை நிறையப் பயன்படுத்திய பாலிதீன் பைகள், தெர்மக்கோல் அட்டைகள், காலியான குளிர்பானப் பாட்டில்கள் அவளது வீட்டின் கம்பிவலை வேலியைத் தாண்டி உள்ளே வந்து விழுந்தன. குவியல் குவியலாகக் குப்பைகள்.

அவனது கையசைவில், குப்பைகளைக் கொண்டுவந்த வண்டி திரும்பிச் செல்லவும் தொடங்கியது.

அதன் பிறகே அவள் பக்கம் திரும்பி, “இல்லாவிட்டால் என்ன செய்வாய்?” என்று கேட்டான் அவன்.

கண்களில் தீயெழ நோக்கி, “என்ன் . . ன செய்வேனா? போலீசில் புகார் செய்வேன். என்ன தைரியம் இருந்தால் இப்படிக் குப்பையைக் கொண்டுவந்து எங்கள் வீட்டில் கொட்டுவீர்கள்? எங்கள் வீடென்ன குப்பைத் தொட்டியா? “ என்று சீறினாள் வாணி.

அலட்சியமாக நோக்கி, “அதையேதான் நானும் கேட்கிறேன். கண்ட சொகுசு சுந்தரிகளின் வீட்டுக் குப்பைகளைப் போட, என் பண்ணை என்ன குப்பைத் தொட்டியா? நானே போலீசுக்குப் போயிருப்பேன். இந்த ஒருமுறை நீ எல்லை தெரியாமல் போட்டிருப்பாயோ என்று எண்ணி உன்னை மன்னித்திருக்கிறேன். ஆனால் உன் குப்பையை நீயே வைத்துக் கொள். எனக்குத் தேவையில்லை.” என்றான் அவன்.

“உங்களுக்குக் காது ரிப்பேரா? குப்பையை நான் போடவில்லை என்று சொல்லிக் கொண்டே இருக் . . .” என்று வாணி சொல்லும்போதே, பின்னிருந்து பானு அவள் கையைப் பிடித்து இழுத்து அக்காவின் காதருகே முணுமுணுத்தாள்.

“எல்லாம் நம் சினேகிதர்கள்தான் அக்கா. நம் பார்சல்களைப் பிரித்து அடுக்கும்போது அந்தப் பக்கம் வீசி இருப்பார்கள் போல. அப்போதே பார்சல் குப்பையைக் காணோமே என்று நினைத்தேன். ஆனால் பேச்சில் மறந்துவிட்டது.” என்றாள் மெதுவாக.

வாணிக்கு முகம் வியர்த்துவிட்டது.

தப்பு அவர்களதாக இருக்கப் போலீஸ், காது ரிப்போர் அது இதென்று என்னமாகக் கத்திவிட்டாள்! அதற்காக வேறு மன்னிப்புக் கேட்டாக வேண்டும் போல இருக்கிறதே!

பார்த்தால், அதற்காகவே காத்திருப்பது போல அவனும் அங்கேயே நின்றிருந்தான்.

முகம் கன்ற, “சாரி சார். குப்பை எங்களதுதான் போலத் தெரிகிறது. இன்னும் கிடந்தாலும் சொல்லுங்கள். எடுத்து விடுகிறோம்.” என்றாள் சின்னக் குரலில்.

ஆனால் அத்தோடு விட மனமற்றவன் போல, “எடுத்து?” என்று கேட்டான் அவன்.

அவள் புரியாமல் பார்க்கவும், “என் இடம் சுத்தமாகிவிட்டது. ஆனால் இவைகளை எடுத்துச் சாலையில் எங்கேயும் வீசி விட வேண்டாம். பஞ்சாயத்தில் அபராதமாகப் பணம் கட்ட நேரும்.” என்று எச்சரித்தான் அவன்.

பின்னே இந்தக் குப்பைகளை இப்படியே வைத்திருப்பதா? அவள் நடந்து சென்று ஆராய்ந்த அளவில் குப்பைத் தொட்டி எதையும் காணவில்லை.

எச்சரித்ததோடு வேலை முடிந்தது என்பது போலத் திரும்பியவனை “ஒரு நிமிஷம்!” என்று நிறுத்தினாள் அவள்.

கேள்வியாகப் பார்த்தவனிடம், “இங்கே குப்பை எடுக்க வண்டி எதுவும் வரும்தானே? அது எப்போது வரும்?” என்று விசாரித்தாள்.

லேசாகத் தலையசைத்து, “வண்டியோட்டியும் மாடும் நல்லபடியாக இருந்தால் வாரம் ஒரு தரம் வரக் கூடும். ஆனால் இதையெல்லாம் விசாரித்து அறியாமலே வீட்டை வாங்கிக்கொண்டு வந்து விடுவீர்களா? அப்படியென்ன அவசரம்?” என்று கேட்டான் அவன்.

ஆமாம், அதை உன்னிடம் விலாவாரியாக விளக்கத்தானே க்யூவில் நின்று காத்துக் கொண்டிருக்கிறோம் என்று கடுப்புடன் நினைத்தாலும் அதை மறைத்து, “இங்கே வந்தபின் அக்கம் பக்கத்தில் கேட்டுத் தெரிந்து

கொள்ளலாம் என்று நினைத்தோம். . ஆனால் இப்படி எதிர்பார்க்கவில்லை!” என்றுரைத்துப் பக்கத்துக் காலி வீடுகளைப் பார்த்தாள் வாணி.

மறுபடி அவள் திரும்பியபோது அவனும் அங்கிருந்து திரும்பிச் சென்றுகொண்டிருந்தான்.

கேள்வி கேட்டு அவர்களைப் பற்றி அறிய முற்படுவானே தவிர, வாய் வார்த்தையாகக் கூட அவர்களுக்கு உதவி செய்ய அவன் தயாரில்லை.

ஆனால் முதல் முதலாகப் பார்க்கும்போதே திரும்பிப் போய்விடச் சொல்லி விரட்டியவன்., அப்படித் திரும்பிப் போய்விடுவார்கள் என்று ஜோசியமும் சொன்னவன் இது போன்ற உதவிகளை ஏன் செய்யப் போகிறான்? அது எவ்வளவு சின்ன உதவி என்றாலும்!

என்ன கஷ்டப்பட்டேனும், அவளேதான் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடிப்பாளே தவிர, அவன் எதிர்பார்ப்பது போல வாலைச் சுருட்டிக்கொண்டு திரும்பி ஓடிவிட மாட்டாள்! அது மட்டும் நடக்கவே நடக்காது!

அக்காவும் தங்கையுமாக எல்லாக் குப்பைகளையும் ஒன்றாகத் திரட்டி, இரண்டு பெரிய பைகளில் போட்டுக் கட்டி வைத்தார்கள்.

பைகளை ஓரமாக ஒதுக்கி வைத்தவர்களுக்கு மேலே அவைகளை என்ன செய்வது என்று தெரியவில்லை. குப்பை வண்டி வரும் நேரமும் தெரியவில்லை., கண்ணுக்கெட்டிய தூரம் வரை குப்பைத் தொட்டியும் இருக்கவில்லை.

மனச் சோர்வும் கவலையும் தங்கையின் எதிரிகள் என்று அறிந்திருந்ததால் வாணி உற்சாகமாகவே பேசினாள்.

“இப்போதைக்கு இந்த மூலையில் வைப்போம் பானு. நம் எல்லைக்குள்ளேயே வைக்கப் போவதால், யாருக்கும் கேள்வி கேட்கும் உரிமை இல்லை. அவன் எப்பேர்ப்பட்ட கொம்பனானாலும் சரிதான்! நாளைக்கு ஊருக்குள் போகிறோம் அல்லவா? அப்போது எல்லாம் விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.”

“ஒரு வகையில் அந்த ஆள் பரவாயில்லை அக்கா. நம் வீட்டுக் குப்பையை அவர் இடத்தில் போட்டால் கோபம் வரத்தானே செய்யும்? எடுத்த எடுப்பில் எங்காவது புகார் பண்ணாமல், வந்து அள்ளிக்கொண்டு போ என்று விரட்டவும் இல்லாமல், அவரே ஆள் வைத்து எடுத்துக் கொணர்ந்து போட்டுவிட்டுப் போகிறாரே! அடுத்த முறை

பார்க்கும்போது நன்றி சொல்ல வேண்டும்.” என்றாள் சின்னவள்.

அவனைப் பார்க்காதிருப்பதே நல்லது என்று வாணி நினைத்தாள்.

காலையில் முதல் முதலாகச் சந்தித்தபோதே, மூட்டையைக் கட்டிக்கொண்டு திரும்பிப் போ என்று விரட்டியவன் இவனே என்று அறிந்தால் பானுவும் அவளைப் போலவேதான் நினைக்கக் கூடும். ஆனால் அவள் அதை உடனடியாக அறிந்தாக வேண்டிய அவசரம் இல்லை!

இப்போதைக்கு அவள் சற்று நிம்மதியாகவே இருக்கட்டும்.

மறுநாள் கல்லூரிக்குச் சென்று நேர்காலை முடித்துக்கொள்ளவே நேரம் சரியாக இருந்தது.

அங்கே காத்திருக்கையில் வாணி விசாரித்த அளவில், அவள் வாங்கியிருந்த வீடு திருச்சி நகர எல்லை தாண்டி தனியே ஒரு கிராமப் பஞ்சாயத்தின் அதிகாரத்துக்குள் இருந்தது.

வீட்டைப் பத்திரப் பதிவு பண்ணும்போதே கிராமத்தின் பெயரை வாணி அறிந்திருந்தாள். எனினும் அங்குள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் பஞ்சாயத்தையே அணுக நேரும் என்பது அவளுக்குப் புதுச் செய்தியாக இருந்தது.

ஆனால் அதுவும் பெரிய பிரச்சினை அல்ல. ஆனால் திக்கு திசை, வழி எதுவும் தெரியாத புதிய இடத்தில் பஞ்சாயத்து அலுவலகத்தைக் கண்டுபிடித்து, அங்கே சென்று யாரைப் பிடித்துத் தன் வேலைகளை எப்படிச் செய்வது என்று வாணிக்குச் சற்று மலைப்பாகத்தான் இருந்தது.

ஆனால் எல்லாம் முதல் அடி எடுத்து வைக்கும் வரைதானே? பிடிவாதமாக வேலையைத் தொடங்கிவிட்டால் அப்புறம் எப்படியாவது செய்து முடித்து விடலாம் என்று தன்னைத்தானே உற்சாகப்படுத்திக் கொண்டாள் அவள்.

ஸ்கூட்டி இருந்தால் அங்கும் இங்கும் அலைகிற வேலை எளிதாக இருக்கும்.

மெக்கானிக் ஷெட் வைத்திருப்பவர் பாபுவுக்குத் தெரிந்த ஆள்.

ஆனால் அவனிடம் அதிக உதவி கேட்கக் கூடாது என்று வாணி முன்பே முடிவு செய்திருந்தாள். எனவே ஷெட்டுக்கே ஃபோன் செய்து வண்டி பற்றி விசாரித்தாள்.

“இன்னும் இரண்டு சின்ன வேலை இருக்கிறதம்மா. பாபு சாரிடம் அது பற்றிப் பேசினேனே, சொல்லவில்லையா?” என்று கேட்டார் அவர்.

“அது . .நாங்கள் இருக்கிற இடத்தில் டவர் தொடர்பு சரியாகக் கிடைப்பதில்லை. எதற்கும் நீங்கள் என்னிடமே இனிமேல் சொல்லுங்கள். இப்போது வண்டி என்றைக்குக் கிடைக்கும்?” என்று வினவினாள் வாணி.

“அதுதாம்மா பாபு சார் கிட்டே  பேசினேன். அத பற்றி . . இதோ வரேம்ப்பா . . .மேடம், கொஞ்சம் வேலையாயிருக்குது. நீங்களும் பாபுசார் கிட்டே பேசிட்டு சொல்லுங்களேன்.” என்று பேச்சை முடித்தார் அவர்.

என்னவாக இருக்கும்? பெரிய செலவா? எதுவானாலும் அவளிடமே சொல்லலாமே. பாபு பேசினால் அவனிடமும் இது பற்றிச் சொல்லி வைக்க வேண்டும் என்று வாணி எண்ணும்போதே சிரித்த முகமாகக் கையை ஆட்டிக்கொண்டு பானு வந்து சேர்ந்தாள்.

“சீட் தந்துவிட்டார்கள். ஒரு வாரத்தில் பணம் கட்ட வேண்டுமாம். ஒரு வேலை முடிந்தது. ஏதோ லிஸ்ட் போட்டோமே, வாங்கிக்கொண்டு இப்போதே வீட்டுக்குப் போவோமா, அல்லது இங்கே தாயுமானவர் கோயில் பற்றி அம்மா சொல்லுவார்களே, அதைப் பார்த்துவிட்டுப் போகலாமா?” என்று சின்னவள் கேட்க அதன்படி இருவரும் சுற்றி அலைந்துவிட்டுக் களைப்போடு வீடு திரும்பினார்கள்.

கையோடு வாங்கி வந்ததைச் சாப்பிட்டுவிட்டுப் பானுமதி சீக்கிரமே படுத்து உறங்கிவிட அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு வாணி தன் வேலையில் ஆழ்ந்தாள்.

வாடிக்கையாளர் கேட்டபடி வெங்கடாஜலபதியை முன்னிறுத்தி மற்ற அனைத்தும்  தயாராகிவிட்டாலும், அந்தக் குப்பைத்தொட்டி, பை இரண்டும் அவளுக்குச் சற்று சவாலாகவே இருந்தன. பிரசித்தி பெற்ற தெய்வத்தை இவைகளோடு எப்படி இணைப்பது?

அடி மனதில் அதே யோசனை இருந்ததாலோ என்னவோ, உச்சிப் பிள்ளையார் கோயில் வரை சென்று வணங்கிவிட்டுக் குன்றை விட்டிறங்கி கீழே சன்னிதித் தெரு வழியே வரும்போது அவளுக்கு ஒரு புது ஐடியா தோன்றியிருந்தது.

அங்கிருந்த பூக்கடை ஒன்றின் முன்னிருந்த குப்பைத் தொட்டியில் காய்ந்த பூ, இலை போன்றவற்றைப் போட்டு வைத்திருந்தனர். மேலே வாய்ப்புறத்தில் வாடிய தாமரைப் பூ ஒன்று தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு கிடந்தது. அதைப் பார்த்ததுமே அவளுக்கும் ஐடியா தோன்றிவிட்டது.

அவள் தயாரிக்க வேண்டிய குப்பைத் தொட்டி, குப்பைப் பையின் வெளிப்புறத்தில் ஒரு புறத்தில் குவியலாகப் பூக்களையும் இரு கரங்கள் அவற்றைப் பிரித்தெடுத்து வேண்டாதவற்றைத் தொட்டி, பைக்குள் போடுவது போலவும் வெறும் கோடுகளாக வரைந்து பார்த்தாள். குப்பைத்தொட்டி வாயில் ஒன்றிரண்டு வாடிய பூக்கள்!

ஒரு புறமாகக் கிடந்த நல்ல பூக்களுக்கு அருகே மாலை தொடுப்பதற்கான ஆயத்தம்.

கோட்டுச் சித்திரம் பொருத்தமாகத் தோன்றவே நிம்மதியோடு எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டுப் படுக்கப் போனாள் .

பானு அசந்து உறங்குவது தெரிந்தது. இன்னமும் எளிதில் களைப்படைகிறாளே, கொஞ்ச நாள் இவளை அதிக வேலை செய்ய விடக் கூடாது என்று எண்ணியவாறே தன் படுக்கையில் விழுந்தவள், அவளுமே அசந்து உறங்கிவிட்டாள்.

மறுநாள் காலையில் இன்னோர் எரிச்சல் நேர்ந்தது. சுற்றுப்புற வேலியோடு இணைந்திருந்த தபால் பெட்டியைத் திறந்து பார்த்தால் பஞ்சாயத்து அலுவலகத்தின் முத்திரையோடு ஒரு ப்ரௌன் நிறக் கவர் கிடந்தது.

முன் தினமே வந்திருக்க வேண்டும். அவசரமாகப் பிரித்துப் படித்தாள்.

சாலைப் புறமாக வீட்டு எல்லை தாண்டி வளர்ந்திருக்கும் மரக் கிளைகளை அவர்களாக வெட்டாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் போவதாக அந்தக் கடிதம் அதிகாரத்தோடு அறிவித்தது.

என்ன நடவடிக்கை?

அதையும் கடிதம் விவரித்தது.

குறிப்பிட்ட நாளுக்குள் மரத்தை வெட்டா விட்டால் அபராதம் கட்டவேண்டும். நாளுக்கு நாள் அபராதத்தொகை ஏறிக்கொண்டே போகும்!

நோட்டீசைப் பாக்கெட்டுக்குள் சொருகிக்கொண்டு வாணி நடையைத் தொடங்கினாள். உள்ளே ஒரே யோசனை.

சாலையில் ஏறி நின்று பார்த்தால் மரம் சாலைக்குள் வந்திருப்பது தெரிந்தது. ஒரேயடியாக நிறைய என்று இல்லாவிட்டாலும் கொஞ்சம் அதிகமாகத்தான்.

மரம் செடிகளுக்கு எல்லைக் கோடுகள் என்ன தெரியும்? மறு

பக்கத்தில் விரிந்து படர முடியாமல் வீடு தடுக்கவே கிடைத்த பகுதியில் அது கிளைகளைச் செலுத்திவிட்டது.

தொல்லை என்னவென்றால் தெருவோரமாக இருந்த மின்சாரக் கம்பம், அதன் வயர்களூடே மரம் வளர்ந்திருந்தது. ஓரளவேனும் வெட்டப்பட வேண்டும்தான். ஆனால் எப்படி?

அபராதம் என்ன கணக்கில் விதிக்கப் படக் கூடும்? அது வேறு ஏறிக்கொண்டே போகுமாமே! அதற்குள் அந்த மரத்தை யாரைக் கொண்டு வெட்டுவது?

ரொம்பவும் யோசித்துவிட்டுத் தயக்கத்துடனேயே தோழி சிவகாமியுடைய உறவினரிடம் பிரச்சினை பற்றி விவரித்துவிட்டு மரத்தை வெட்ட ஆள் கிடைப்பார்களா என்று கேட்டாள்.

ரியல் எஸ்டேட் பண்ணுகிறவர் ஆயிற்றே, இது போன்ற வேலைக்கும் ஆள் வைத்திருப்பார் என்று அவள் நினைத்தாள்.

ஆனால், "இங்கிருந்து அவ்வளவு தூரத்துக்கு யாரம்மா வந்து வெட்டப் போகிறார்கள். அங்கே பக்கத்தில் யாரையேனும் பார்த்துக் கொள்ளேன்." என்று முடித்துவிட்டார் அவர்.

இடத்தை வாங்கிக் கொடுத்து அதற்கான கமிஷனையும் வாங்கியாயிற்று. அதற்கு மேல் அவளைப் போல எத்தனையோ புதுப்புது வாடிக்கையாளர்கள். இது அவருக்கு உபயோகம் அற்ற வேலையே!

வேறு என்ன செய்யலாம் என்று யோசித்தபடியே பார்த்தவளுக்கு அதுவரை சென்று ஆராய்ந்த இரு திசைகளிலும் செல்ல மனமில்லை. சற்றுத் தள்ளி ஓர் ஒற்றையடிப் பாதை, நிறையப் பேர் வழக்கமாக நடப்பதைக் காட்டும் விதமாகச் சற்று அகலமாகவே சாலையிலிருந்து சரிந்து உட்புறமாகச் சென்றது.

இருபுறமும் காட்டுச் செடிகளால் ஆன வேலி போலப் பெயருக்கு ஒன்று இருந்தது. என்றாலும் பல காலமாகப் பயன்படுத்தும் பாதைகளை நகர்ப் புறங்களில் கூட யாரும் அடைப்பது கிடையாது. கிராமங்களிலோ கேட்கவே தேவையில்லை. வயல்களின் ஊடே செல்லும் வரப்புகளே எல்லோருக்கும் பொதுதானே?

அத்தோடு இது பலர் பயன்படுத்தும் வழி என்றால் அவளது பல பிரச்சினைகளுக்கு ஏதாவது தீர்வு கிடைக்கலாம் அல்லவா?

அதற்கு மேல் நின்று யோசியாமல் பாதையில் இறங்கி வாணி நடக்கலானாள்.

வாணி எதிர்பார்த்த ஆள் நடமாட்டம் அங்கே இருக்கத்தான் செய்தது. ஆனால் ஏதோ பணிக்குச் செல்லுகிற மாதிரி தலையில் தோளில் சுமையோடு அவளைத் தாண்டி வேகமாகச் சென்று கொண்டிருந்தவர்களை நிறுத்திப் பேச அவளுக்குத் தயக்கமாக இருந்தது.

அவள் நிறுத்திப் பேசுவதால் தாமதமாகி, அதனால் அவர்களுக்குப் பிரச்சினையாகி விட்டால்?

எப்படியும் இவர்கள் சென்றடையும் இடம் என்று ஒன்று இருக்கத்தானே செய்யும்? அங்கேயே போய்க் கேட்டுக் கொள்ளலாம் என்று எண்ணி அவர்களைப் பின்தொடர்ந்தாள் அவள்.

ஆனால் கொஞ்ச நேரத்திலேயே அந்த முதுகில் குத்துகிற உணர்வு தோன்றச் சட்டென நின்று சுற்றிலும் ஆராய்ந்தாள்.

எண்ணியது போல அவனேதான். அவளைத் தொடருவதைத் தவிர இவனுக்கு என்ன வேறு வேலையே கிடையாதா? நன்றாகக் கேட்டுவிட வேண்டும் என்று அவனை முறைத்துப் பார்த்தபடி நின்றால் அருகில் வரும்போதே, அவளை முந்திக்கொண்டு அவன் பேசத் தொடங்கிவிட்டான்.

“என்னம்மா, உங்கள் பட்டணத்தில் அடுத்தவர் எல்லைகளை மதிக்க வேண்டும் என்பதெல்லாம் கிடையாதா? அனுமதி கேளாமல் என் பண்ணைக்குள் வந்து நிற்கிறாய்?” என்று ஏளனமாகக் கேட்டான் அவன்.

இதுவும் இவனது இடமா? வீட்டின் பின் புறத்திலிருந்து குப்பையைக் கொண்டு வந்து வீசியதால் அந்தப் பக்கம்தான் இவன் இடம் என்று எண்ணினால், அவனே ரோடு தாண்டி எதிர்ப்புறமாகவும் நிலத்தை வளைத்துப் போட்டிருப்பான் என்று அவளுக்கு என்ன தெரியும்?

அவள் யோசிக்கும்போதே, “இது எச்சரிக்கை. இன்னொரு தரம் உன்னை இங்கே பார்த்தால் அத்து மீறி உள்ளே நுழைந்ததாகக் காவல் நிலையத்தில் புகார் செய்வேன்.” என்று மிரட்டலாக மொழிந்தான் அவன்.

புகாரா? ஓட ஓட விரட்டுகிறானா?

ஆத்திரத்துடன் நிமிர்ந்து, “ரொம்பத்தான் மிரட்டாதீர்கள் சார்! நகரத்து மனிதர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று எண்ணினீர்களா? இது பொதுவான ஓர் ஒற்றையடிப்பாதை. பல காலமாக மக்கள்

பயன்படுத்துவது. உங்கள் பண்ணை வழியே போகிறது என்பதாலேயே இதில் நடப்பது சட்டப்படிக் குற்றமாகிவிடாது!” என்று அழுத்தமான குரலில் பதில் கொடுத்தாள் வாணி.

புருவம் சுளித்து அவளைக் கூர்ந்துவிட்டு, “இது பொது வழியா? என்ன பைத்தியக்காரக் கதை இது!” என்று அதிசயித்தான் அவன். “பாரம்மா, இது இந்தப் பண்ணையில் பணி புரிகிறவர்கள் வருகிற குறுக்கு வழி. பண்ணையில் வேலை செய்கிறவர்கள் மட்டுமே பயன்படுத்தலாம். ஒருவேளை நீயும் பண்ணை வேலையில் சேர்ந்து உழைப்பதானால், நீயும் இதே வழியில் வரலாம், போகலாம்.” என்றவன் அவளை ஒருதரம் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, “ஆனால் உன்னைப் போலப் பட்டணத்து சொகுசு சுந்தரிகளுக்கு ஏற்ற மாதிரி இங்கே வேலை எதுவும் கிடையாதே!” என்று ஏளனக் குரலில் கூறி முடித்தான்.

அவன் பேசி முடிக்கும்போது வாணி அந்த இடத்தில் இல்லை. விறுவிறுவென்று வேகமாகத் திரும்பி நடந்தவள் அந்தப் பாதை தாண்டிச் சாலையில் ஏறிய பிறகுதான் நின்றாள்.

என்ன ஏளனம்!

மீண்டும் மீண்டும் இவனிடமே மாட்டும்படி ஆகிறதே! மூன்று சந்திப்புகளில் அவளது பிழையென்று மாட்டுவது இரண்டாவது முறை. ஆனால் முதல் தடவையே வெறுப்பாகத்தானே பேசினான்.

ஜென்மாந்திரப் பகை என்பது போல பல பிறவிகளில் இருவரும் விரோதிகளாக இருந்திருப்பார்களோ?

பல பிறவிகளில் தொடரும் அன்பு போல வெறுப்பும் தொடருமோ? விதியா?

அப்படித்தான் இருக்க வேண்டும் மற்றபடி தினம் தினம் இருவரும் சந்திக்க நேர்வானேன்?

நடைக்குச் சரியாக எண்ணங்களும் வேகமாக ஓடுகையில் வாணி சட்டென நிதானித்தாள்.

அடுத்தடுத்த இடங்களில் இருக்கிறார்கள். அடிக்கடி பார்க்க நேர்வது இயல்புதானே? கண்ணில் படாமலே இருப்பதுதான் ஆச்சரியம். இதைப் போய்ப் பல பிறவித் தொடர்பு, விதி என்று யோசிப்பது மடத்தனம்!

புது இடத்தில் நன்கு பழகி எல்லாம் இயல்பாகும்ரை இப்படி எதற்கும் பரபரப்பு அடையக் கூடாது. நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்!

பிடிவாதமாக மனதை அமைதிப்படுத்திக்கொண்டு வாணி வீடு நோக்கி நடந்தாள்.

சாலையோரமாக ஒரு டாக்சி நிற்பதைப் பார்த்தபடி வீட்டுக்குத் திரும்பி வந்தால் வாயிற்கதவு விரியத் திறந்து கிடந்தது.

“யார்” என்று யோசித்தபடியே உள்ளே சென்று பார்த்தால் கையில் காஃபிக் கப்போடு பாபு உட்கார்ந்திருந்தான்.

வரலட்சுமி குடும்பத்து விருந்தோம்பலில் சற்றும் குறை வைக்காமல் வந்த விருந்தாளிக்கு பானு காஃபி கலந்து கொடுத்திருந்தாள்.

ஆனால் சொல்லாமல் கொள்ளாமல் பாபு அங்கே வந்திருந்தது, அதுவும் அவள் அவ்வளவு சொல்லி அனுப்பிய பிறகும் வந்தது வாணிக்குப் பிடிக்கவில்லை!

# அத்தியாயம் - 5

செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே வந்த வாணியை முதலில் கண்டுகொண்டவள் பானுமதிதான்.

அதுவும் வரலட்சுமி மகள்களுக்குக் கற்றுக் கொடுத்ததுதான். வாயிலைத் தாண்டி யார் வந்தாலும் அவர்கள் முதலில்லேயே கண்ணில் படக் கூடிய இடத்தில் வீட்டினர் அமர வேண்டும் என்பாள். வருகிறவர் யாராக இருந்தாலும் உடனேயே ஏற்ற விதத்தில் செயல்பட இலகுவாக இருக்குமாம்.

தமக்கையைக் கண்டதும் ஆர்வத்தோடு எழுந்து, “அக்கா, வாவாவா. யார் வந்திருக்கிறார் பார்த்தாயா? இந்தக் காலை நேரத்தில் பாபு அண்ணனைப் பார்த்ததும் எனக்கு ஒரே அதிசயமாகிப் போயிற்று. உட்காரச் சொல்லிக் காஃபி கொடுத்துவிட்டுப் பேசுமுன் நீ வந்துவிட்டாய். உட்கார். உனக்கும் காஃபி கொண்டு வருகிறேன். . .” என்றுவிட்டு சமையல் அறையை நோக்கி நடந்தாள் பானு.

“வாருங்கள் பாபு.” என்று வரவேற்றபடி அமர்ந்த வாணியின் கேள்விப் பார்வையில் பாபுவின் முகம் லேசாகக் கன்றியது.

காஃபியை அருந்துவது போல சமாளித்துவிட்டு மெல்லப் பேசினான் அவன். “மெக்கானிக் ஷெட் சுந்தரம் ஃபோன் செய்தான் வாணி. எப்போதோ விழுந்ததில் உள்ளே ஒரு சின்ன நெளிசல் ஏற்பட்டுவிட்டதாம். சரி பண்ணச் செலவாகுமாம். ரிப்பேர் செய்தால் கூட, முன் போல இருக்காதாம். அந்த மாதிரி ஸ்கூட்டியை ரிப்பேர் பண்ணுவதற்குப் பதிலாக வேறு வாங்கிக் கொள்ளச் சொல்லுகிறான். எனக்கும் அதுவே மேல் என்று தோன்றுகிறது. பேசாமல் புதிதாக வேறே வாங்கி விடேன்.” என்றான்.

பானு அதற்குள் காஃபியோடு வந்தாள்.

அவளிடம் ஒரு தரம் விவரம் சொல்லிவிட்டு, வாணி பாபுவுக்குப் பதில் சொன்னாள். “இப்போது அது முடியாது பாபு. அதையே பழுது பார்த்துத் தரச் சொல்லுங்கள். இதைச் சொல்லவா வீணே இவ்வளவு தூரம் வந்தீர்கள்? சுந்தரத்தையே சொல்லச் சொல்லியிருக்கலாமே!”

“அதில்லை . . “ என்று அவன் இழுக்கும்போதே, தமக்கையை ஒட்டியே பானுவும் பேசினாள்.

“ஆமாம் பாபு அண்ணா. இதைச் சொல்வதற்கு இவ்வளவு அலைந்திருக்கிறீர்களே! நீங்கள் வந்த நேரத்துக்குக் கணக்குப் பார்த்தால்

இரவு இரண்டு மணிக்கே கிளம்பியிருப்பீர்கள் போல! தூக்கமும் கெட்டு . . அனாவசியமாக எவ்வளவு கஷ்டம் பாபு அண்ணா!”

பானு மெய்யாக அவனுக்காக மனம் உருகியே கூறினாள். அந்தப் பொல்லாத நாளில், அந்த ராட்சசன் ராகுலிடம் நியாயத்தை எடுத்துச் சொன்னவன் பாபுவே அல்லவா? ராகுலோடு நட்பே . .பேச்சு வார்த்தை கூட வேண்டாம் என்று யோசனை சொல்லக் கூட அவளுக்கு ஆசைதான். அவள் சொல்லி அவன் கேட்பானா என்பதோடு, ராகுல் பெயரை நாவால் உச்சரிக்கக் கூட இப்போது அவளுக்குப் பிடிக்கவில்லை.

ஆனால் “நான் நேற்றே வந்துவிட்டேன்.” என்று சகோதரிகளை பாபு வியக்க வைத்தான். “வந்தது ரயிலில். இங்கே வந்து பார்த்தால் நீங்கள் இருவரும் வெளியே போயிருந்தீர்கள். எப்போது வருவீர்கள் என்றும் தெரியவில்லை. வைஃபை இல்லாமல் பேசவும் முடியவில்லை. இங்கே வேறே ஒரு வேலையும் இருந்தது. வேலையை முடித்துவிட்டு, இரவில் இங்கே வரக் கூடாது என்று ஹோட்டலில் ரூம் எடுத்துத் தங்கினேன். . .” என்றான் தொடர்ந்து.

நல்லவனாகச் சரியாகச் செய்தான் என்று தோன்றினாலும், இங்கே வராதிருந்த காரணத்தைச் சொல்லாமலே விட்டிருக்கலாம் என்று வாணிக்குத் தோன்றியது.

நல்லவனாகக் காட்டிக்கொள்ள முயற்சிக்கிறானோ என்று தோன்றியிராது.

மனதைக் காட்டாமல் “உங்கள் வேலை முடிந்துவிட்டதா?” என்று விசாரித்தாள் அவள்.

“முடிந்த மாதிரிதான். சாதகமாக யோசிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த வாரம் வந்து பார்த்தால் முடிவு தெரிந்துவிடும்.”

“ஹை! அப்போது அடுத்த வாரமும் வருவீர்கள்!” என்று உற்சாகத்தடன் கூவினாள் பானுமதி.

“கட்டாயம்! என் வேலை நல்லபடியாக நிறைவேறிய பின் அடிக்கடியே வருவேன்.” என்றான் பாபு புன்னகையோடு வாணியைப் பார்த்து.

அதைக் கவனியாதது போல, “பானு நான் வெளியே போக வேண்டியிருக்கிறது. நீ உள்ளே பூட்டிக்கொண்டு கவனமாக இருப்பாய் அல்லவா? நேற்று வாங்கி வந்த மாவில் தோசை சுட்டு செல்லோவில்

வைக்கிறாயா? நான் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிவிட்டு வருகிறேன். எங்கள் செடிகளைப் பார்க்கிறீர்களா பாபு?" என்று அவனை உடன் அழைத்தாள் அவள்.

"இதோ." என்று உடனே எழுந்தான் அவன்.

"நேற்று ஒரு மாதுளைச் செடி வாங்கி வந்தோம். மாதுளைச் சாறு ரத்த சுத்திகரிப்புக்கு மிகவும் நல்லதாமே." என்று பேசியபடி அவனை வெளியே அழைத்துச் சென்றாள்.

தங்கையிக் காது எட்டாத தூரம் சென்றதும், "பாருங்கள் பாபு, அன்றே சொன்னேன் அல்லவா? இங்கே எங்களைப் பற்றி யாருக்கும் தெரியாது. சுற்றுப்புறத்தில் உள்ளவர்களோடு நாங்கள் நன்றாகப் பழகும்வரை தயவு பண்ணி நீங்கள் சற்று ஒதுங்கியிருந்தால் எங்களுக்கு நல்ல பெயர் சீக்கிரமாகக் கிடைக்கும். தப்பாக நினைக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன். அடுத்த முறை திருச்சிக்கு வரும்போது, இங்கே வரவேண்டாம்." என்று தணிவான குரலில் வினயமாகவே கூறினாள் வாணி.

"ஆனால் வாணி, நான் வந்த விவரமே தெரியாமல் அவசரப்பட்டுப் பேசுகிறாயே. எங்கள் அலுவலகக் கிளை ஒன்று இங்கே இருக்கிறது. அதற்கு மாற்றல் கேட்டுத்தான் இங்கே வந்தேன். நீங்கள் இருவரும் இங்கே தனியே இருப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. உன்னைப் பாராமல் இருப்பதும் அப்படியே. உனக்குப் புரிகிறது அல்லவா? என் விருப்பத்துக்கு என் பெற்றோர் மாறு சொல்ல மாட்டார்கள். . ."

"பாபு ப்ளீஸ்!" என்று அவனது பேச்சை நிறுத்தினாள் வாணி. "தயவு பண்ணி இந்தப் பேச்சு வேண்டாம். பானுவைக் கவனித்துக் கொள்வதாக நான் அம்மாவுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன். மேலும் எனக்கு . ." என்றவளின் பேச்சில் அப்போது பாபு குறுக்கிட்டான்.

"பானுவை விட்டுவிடும்படி நான் சொல்லவில்லையே! உன் தோளில் இருந்து அவளது சுமையையும் நானே ஏற்றுக் கொள்கிறேன் என்றுதானே கூறுகிறேன். என்னைப் புரிந்துகொள் வாணி." என்றான் அவன் அவசரமாக.

விசித்தி[ரமான பார்வையால் அவனை நோக்கிவிட்டு வாணி பேசினாள். "புரியாமல் பேசுவது நீங்கள்தான் பாபு. பானு எனக்குச் சுமை அல்ல. ஒருபோதும் அவளை நான் சுமையாகக் கருதியதே கிடையாது. கருதவும் மாட்டேன். அவளை அந்த வார்த்தை சொன்னதே, நீங்கள் என்னைக் கொஞ்சம்கூடப் புரிந்து கொள்ளவில்லை என்று காட்டுகிறது. நமக்குள் ஒத்து வரவே வராது. தயவு பண்ணி இந்தப்

பேச்சை இனிமேல் எடுக்க வேண்டாம். அத்தோடு கொஞ்ச காலம் வேறு யாருமே இங்கே வராமலும் நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். ப்ளீஸ் . . " என்று பொறுப்பைக் கொடுக்கிற பாவனையில் அவனையுமே மீண்டும் வரவேண்டாம் என்று சொல்லாமல் சொன்னாள்.

மறுத்துப் பேசாதபோதும் "இந்தப் பேச்சை இவ்வளவு சீக்கிரமாக நான் எடுத்திருக்கக் கூடாது." என்றான் அவன் வருத்தத்துடன்.

"எப்போதானாலும் முடிவு இதுதான் பாபு. காலை உணவுக்குப் பிறகு கிளம்புகிறீர்களா? தோசையோடு மிளகாய்ப் பொடி போதும் என்றால் இப்போதே தயார்."

"என்னை விரட்டுவதில் எவ்வளவு வேகம்!" என்று கேலி போலக் கூறினான் அவன். கூடவே, "எதுவும் வேண்டாம் வாணி. நான் தங்கியிருக்கும் ஹோட்டலில் காலை உணவு இலவசம். அதை விடுவானேன்? பத்து மணிக்குள் போனால் அங்கேயே சாப்பிட்டு விடலாம். அப்படியானால் நான் கிளம்பட்டுமா? என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான் அவன்.

"ஓகே பாபு. அங்கே விதம் விதமாகக் கிடைக்கும்போது அதை உண்பதுதான் உத்தமம்! அப்புறம் . . வந்து, கேளாமல் யோசனை சொல்லக் கூடாது என்று அம்மா சொல்லுவார்கள். ஆனால் நீங்கள் ஒரு நல்ல நண்பர் என்பதால் சொல்லாதிருக்கவும் முடியவில்லை. திருச்சி வேலை விஷயம் சற்று யோசித்து முடிவெடுங்கள், பாபு. சென்னை போல ஒரு மாநிலத் தலைநகரில் இருந்து அந்த மானிலத்திலேயே அதை விடச் சின்ன நகரத்துக்கு வேலையை மாற்றிக் கொள்வது, மதிப்பைச் சற்று இறக்கிக் கொள்வது போல ஆகாதா? எதுவானாலும் ஆன்ட்டி, அங்கிளிடமும் கலந்து பேசிவிட்டுச் செய்யுங்கள்." என்றாள் வாணி.

நீ எதிர்பார்த்த மாதிரி எதுவும் நடக்காது என்று இதைவிடத் தெளிவாகக் கூற முடியாது. அதற்கு மேல் அவன் வாழ்க்கை., அவன் விருப்பம்!

புரிந்து கொண்டவனாக அதற்கு மேல் தாமதியாமல் பாபு கிளம்பிச் சென்றுவிட்டான்.

"உன் அக்காவுடன் சற்றுத் தனியே பேச வேண்டும். என் முயற்சி கெட்டதாக இராது என்று உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். சற்று உதவியாக இரு." என்று பாபு கேட்டதற்கு இணங்கியே தோசை சுடும் சாக்கில் பானுமதி சமையல் அறையிலேயே நின்றிருந்தாள்.

வெறுமனே அவன் விடைபெற்றுச் சென்றுவிடவும் பானுவுக்கு

ஏமாற்றமாக இருந்தது.

அவளது வாழ்வைக் காத்ததில் பாபுவின் பங்கு பெரியது. உறவும் ஆகிவிட்டால் நன்றாக இருக்குமே என்றாள் தமக்கையிடம்.

பொதுவாக இந்த மாதிரிக் காரணங்களுக்காகத் திருமணம் செய்வது சரியல்ல என்பது வாணியின் கருத்தாக இருந்தது. சும்மாவே உறுதிதான். உதவிக்குப் பதில் உதவிதானே தவிர, வாழ்க்கை அல்லவே!

அத்தோடு, மற்றெப்போதையும் விடப் பானுவைச் சுமை என்றானே பாபு., அப்போது வாணிக்கு அவன் விஷயம் தெள்ளத் தெளிவாகிவிட்டது.

பானு என்றேனும் அவளுக்குச் சுமை ஆவாளா? இருவரும் ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள். ஒருவருக்கொருவர் இணை, துணையாக இருப்பார்களே தவிர எப்படி அடுத்தவருக்குச் சுமையாக முடியும்?

இதுவே வாணிக்கு ஒன்று என்றால் பானு செய்ய மாட்டாளா? ஒரு மாதம் சிகிச்சை பெற்று வந்த பெண்., சும்மாவே சற்று நோஞ்சான்., அப்படியும் கூடச் சேர்ந்து எவ்வளவு வேலைகளைச் செய்கிறாள்! ஒன்றும் தெரியாமல் சுமை என்றானே!

அது மட்டுமல்ல. இன்று சுமை இறக்க உதவுவதாக எண்ணுகிறவன், நாளைக்கு அந்த உதவிக்குக் கைமாறு எதிர்பார்க்க மாட்டானா? திருமணத்தில் ஒருவர் மட்டும் கடமைப் பட்டவராக இருப்பது, அப்படிப்பட்ட எண்ணம் அடுத்தவருக்கு இருப்பது ஒருபோதும் சரியல்ல.

“அப்படியல்ல பானு. இங்கே நாம் நிம்மதியைத் தேடி வந்திருக்கிறோம். அதையே கவனிப்போம். நீ படிப்பிலும், நான் வேலையிலும் முழுக் கவனத்தையும் செலுத்தினால்தான் அது நடக்கும். வேறு எதையும் நினைத்துக் குழப்பிக் கொள்ள வேண்டாம்.” என்றாள் தங்கையிடம்.

பாபு பற்றிய பேச்சை அத்தோடு நிறுத்த விரும்பி, “அத்தோடு பானு, இங்கே நாம் காலூன்றவே நிறையப் பாடு படவேண்டும் போல இருக்கிறதே, பார்.” என்று கூறி, பஞ்சாயத்தின் நோட்டீசை ப் பையில் இருந்து எடுத்துக் கொடுத்தாள்.

“நேற்றையத் தபாலில் வந்திருக்கும் போல.”

படித்துப் பார்த்தவளுக்கு முகம் வாடிவிட்டது. “என்னக்கா இது? சும்மாவே பேசிப் பழக யாருமில்லாமல் நாடு கடத்தப்பட்டவர்கள் மாதிரித் தனியே கிடக்கிறோம். மரம் வெட்ட ஆளுக்கு எங்கே போவது?

யாரிடம் கேட்பது? “ என்று கவலைப்பட்டாள் பானுமதி.

“நீ கடிதத்தைச் சரியாகப் படிக்கவில்லை என்று தெரிகிறது!” என்று புன்னகை செய்தாள் வாணி.

கடிதத்தை அவசரமாக இன்னொரு தரம் அலசிவிட்டு, “இல்லையே! உடனே மரத்தை வெட்டும்படி மிரட்டுவது போலத்தானே எழுதியிருக்கிறது?” என்றாள் தங்கை.

“அது சரிதான் குட்டிப் பாப்பா, கூடவே மேலே என்ன இருக்கிறது பார். பஞ்சாயத்து அலுவலகத்தின் முகவரி. புவனபூவதி என்று தலைவர் பெயர் வேறு. எங்கே போய் யாரிடம் கேட்பது என்று இல்லாமல் போய்க் கேட்பதற்கு ஓர் விலாசம் கிடைத்திருக்கிறதே! அலுவலக முகவரி! தலைவருக்கு நேரம் இருக்கிறதோ இல்லையோ, எப்படியும் அங்கே ஒரு பத்துப் பேரேனும் வேலை பார்ப்பார்கள். ஓரிருவராவது நல்லபடி நமக்கு வேண்டிய விவரம் சொல்ல மாட்டார்களா, என்ன?”

“ஐ! ஆமாம்க்கா!” என்று ஒரு துள்ளலோடு தமக்கையை அணுகி அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு குதித்தாள் பானுமதி. “இப்படி ஒரு நல்ல விஷயம் இருப்பதை நான் யோசிக்கவே இல்லை பார்! படித்ததுமே ஐயையோ அடுத்த குண்டா என்று பயந்து போனேன். நல்லவேளையாக நீ சட்டென இதைக் கண்டுபிடித்தாய். நீ மட்டும் பக்கத்தில் இல்லாவிட்டால் நான் என்னக்கா ஆவேன்?”  என்று நன்றியோடு உரைத்தாள்.

தங்கையின் பிடியை அகற்றி அவளது கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு, “இதை விட ரொம்ப நன்றாக இருந்திருப்பாய். இயற்கையிலேயே புத்திசாலியான நீயே இந்த விவரத்தைக் கண்டுபிடித்தும் இருப்பாய். நானும் அம்மாவும் சின்னப் பெண் என்று உன்னைக் கொஞ்சம் கெடுத்து வைத்திருக்கிறோம். அவ்வளவுதான். ரைட். இனி இன்றைய வேலைகளைப் பார்ப்போம். பானு, நீ உன் கோர்ஸ் விஷயமாக என்னென்ன தேவை என்று நெட்டில் பார்த்துக் குறித்துவை. பணம் கூட பாங்க் மூலமாக கோச்சிங் சென்டர் பாங்க் கணக்குக்கு அனுப்புவதா, டிடி எடுக்க வேண்டுமா என்று எல்லாம் பார். நான் குளித்துக் கிளம்பி அதையெல்லாம் பார்த்துவிட்டு, அப்படியே பஞ்சாயத்து அலுவலகத்துக்கும் போய் வருகிறேன்.  நீ வீட்டில் சற்று ஓய்வாக இரு. நேற்று அலைந்ததில் நீ ரொம்பக் களைத்துப் போனாய். . .” என்றவளைக் குறும்புடன் நோக்கி, “ஆஹா! சின்னப் பெண் என்று கெடுக்கிறாயா அக்கா?” என்று சிரித்தாள் சின்னவள்.

கூடச் சேர்ந்து சிரித்தபோதும், “சந்தடிச் சாக்கில் அடுப்படி

வேலையை உன் தலையில் கட்டுகிறேனே, அது தெரியவில்லை உனக்கு?" என்று புருவம் உயர்த்திக் கேட்டபடியே டவலை எடுத்துக்கொண்டு குளிக்கப் போனாள் தமக்கை.

பாபு விஷயத்தில் துணிந்து முடிவைச் சொல்லிவிட்டதில் உள்ளூர வாணிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. கண்ணுக்குத் தெரியாமல் பிணைக்க முயன்ற ஏதோ தளையில் இருந்து விடுதலை பெற்றுவிட்ட உணர்வு அவளுக்கு.

அவனுடைய பெற்றோருக்கும் நிம்மதியாகவே இருக்கும். என்னதான் மகனின் விருப்பத்துக்குப் பணிந்து போனாலும், அவர்களது உண்மை ஆசை என்ன என்று வாணிக்கு நன்றாகத் தெரியும். மகனது திருமணத்தைக் கோலாகலமாக நடத்த வேண்டும் பெற்றோர் ஆசைப்படுவதைத்  தப்பென்று எப்படிச் சொல்ல முடியும்?

ஒரு விஷயம் நல்லபடியாக முடிந்த திருப்தியோடு வாணி உடனடி வேலைகளைக் கவனிக்கலானாள்.

குளித்துவிட்டு வந்து முதலில் மெக்கானிக் சுந்தரத்துக்கு ஃபோன் செய்தாள்.

இப்போதைக்குப் புது வண்டி வாங்குவது கடினம் என்பதால் பழசையே விரைவாக, நன்கு பழுதுபார்த்து, உடனே அனுப்புமாறு சிறு அழுத்தத்துடனேயே தெரிவித்தாள்.

"புது இடத்தில் பழகிய வண்டியும் இல்லாமல் எவ்வளவு சிரமமாக இருக்கும் என்று உங்களுக்கே புரியும், சார். வண்டி வந்ததும், உடனே பில் தொகையை உங்கள் பாங்க் கணக்கில் போட்டு விடுகிறேன். நம்புவீர்கள்தானே?"  என்று கேட்டாள்.

"அய்யோ என்னம்மா நீ? வரலட்சுமி அம்மா பொண்ணை நம்பாத வேறே யாரை நம்ப முடியும்?"

"ரொம்ப நன்றி. அம்மா மேல் அதே மதிப்புடன் என் ஸ்கூட்டியையும் கூடிய சீக்கிரம் அனுப்பி வையுங்கள் சார்." என்று முடித்தாள் அவள்.

"கட்டாயம்மா. வேலை முடிய ரெண்டு நாள். அனுப்புறதுக்கு . .இன்னைக்கு நாலாம் நாள் வண்டி உன் கையிலே இருக்கும் தாயி!" என்றார் அவரும்.

ஆக இரண்டாவது வேலையும் தெளிவாயிற்று. போக்குவரத்துச் செலவு சற்று அதிகம்தான். ஆனால் புது இடத்தில் குடியேறும் கணக்கோடு சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

அடுத்த பெரிய தொல்லையான வேலை மரத்தை வெட்டுவதுதான். அதாவது மரத்தின் சில கிளைகளை. முழு மரத்தை வெட்டச் சொன்னால் அவளே போர்க்கொடி தூக்கியிருப்பாள்.

வெட்டிய கிளைகள் துளிர்த்து மீண்டும் பெரிதாக வளருமுன் மாற்று ஏற்பாடுகள் என்ன என்று பார்க்க வேண்டும். ஆனால் அதை மெதுவாகப் பார்த்துக் கொள்ளலாம்.

பெரிய பிரச்சினை ஏதுமின்றி மற்ற வேலைகளும் விரைந்து முடிந்துவிடவே, அது வரை பயன்படுத்திய அதே ஆட்டோவிலேயே வாணி பஞ்சாயத்து அலுவலகத்தை அப்போதே நாடிப் போனாள்.

அவள் கேட்ட மரம் வெட்டுகிற ஆட்கள் தொடர்பாக ஆட்டோ ஓட்டுனருக்கு விவரம் சொல்ல முடியாவிட்டாலும், அவள் இருந்த கிராமத்தின் பஞ்சாயத்து பற்றி மதிப்போடு பேசினார்.

“சுத்துப்பட்டி எல்லாம் சேர்த்துப் பெரிய பண்ணைம்மா. அந்தப் பண்ணையாலே பஞ்சாயத்துக்கு வருமானம் நல்லபடியாக உண்டும்மா. அதை முழுங்கிடாம ஊருக்காகவே செலவு பண்ணுறதாகச் சொல்லுவாங்க. கவுருமென்டு போட்ட பெரிய வெளி ரோடு போக உள் கட்டமைப்பு எல்லாம் நல்லாச் செய்திருக்கிறாங்களாம். பண்ணை சம்பந்தப்பட்ட ஆளுங்களே நிறையக் குடும்பங்க சுத்தி இருக்கிறாங்க. உள்ளாரயும் ரோடு, தண்ணி, கிணறு குப்பை வண்டி, பாத்ரூமு . .. நிறையச் சொல்லுவாங்க.”

லேசாக முறுவலித்து, “ஆக, பஞ்சாயத்தின் வருமானத்தை அதற்கு உரிய படி செலவு செய்வதே பெரிய காரியம் என்கிறீர்கள்!” என்றாள் வாணி இலகுவான குரலில்.

“பின்னே இல்லையா தாயி? முழுசா முழுங்கறவங்க, பாதிக்குப் பாதியானும் கொள்ளையடிக்கிற மனுஷங்க மத்தியிலே, இப்படி ஒருத்தர் இருக்கிறது அதிசயமில்லியா?” என்றார் ஆட்டோக்காரர்.

“அப்படியானால் பஞ்சாயத்துத் தலைவர் நல்ல மனிதர் என்கிறீர்கள்?” என்று தன் விஷயமே குறியாகக் கேட்டாள் வாணி.

“ரொம்ப நல்லவருதாம்மா. எத்தனையோ தலைமுறையாப் பெரிய குடும்பம். ஊரிலே ரொம்ப மரியாதை. எந்த நல்லதுக்கும் முன்னாலே நின்னு நடத்துவாராம். ஆனால் தப்பு பண்ணால் ரொம்பக் கோபப் படுவாராம். அதிலே ரொம்பக் கண்டிப்பாம். நம்ம சொந்தக்காரப் பையன் ஒருத்தன் அங்கே இருக்கிறான். அவன்தான் இதெல்லாம் சொல்லுவான். ஆனால் குணமும் இருந்தா, கொஞ்சம் கோபத்திலே

என்னம்மா தப்பு? சாமி கூடக் கெட்டவங்களைக் கோவப்பட்டுத்தானே கொல்லுது? “ என்று அறியாத அந்த  மனிதனுக்காக வக்காலத்து வாங்கிப் பேசினார் ஆட்டோ ஓட்டி.

“அதனாலே கோபப்படுவது தப்பே கிடையாது என்கிறீர்கள்!” என்று சந்தோஷமாகச் சிரித்தாள் வாணி.

“அப்படியில்லம்மா . . “ என்று இழுத்தாலும் வண்டியோட்டிக்கும் சிரிப்புதான்.

வாணிக்கு மெய்யான மகிழ்ச்சியே. மனிதர் நல்லவர் என்றால் அவளுக்குப் பிரச்சினை இருக்க வழியில்லை அல்லவா?

வந்ததும் வராததுமாகத் திரும்பிப் போகச் சொன்னானே, அவனைப் போலக் கோணல் புத்திக்காரன் என்றால்தான் கவலைப்பட வேண்டும்!

இருக்கட்டும். அவன் முன்னே இங்கே வாழ்ந்து காட்ட வேண்டாமா?

நம்பிக்கையோடு பஞ்சாயத்து அலுவலகத்தின் முன் வாணி இறங்கிக் கொண்டாள்.

“வேறே எங்கேனும் போக வேணுமா, தாயி? இல்லாட்டி என் சொந்தக்காரப் பையன் வீட்டுக்குப் போய் பார்க்கலாமின்னு நினைச்சுதான் இவ்வளோ தூரம் வந்தேன்.” என்ற அவரிடம் பணத்தைக் கொடுத்துக் கணக்கு முடித்து அனுப்பி வைத்தாள் அவள்.

எட்டிப் பார்த்தால் ஒரு புறமாகச் சாலை தெரிந்தது. அதன் வழியே நடந்தால் வீடு வந்துவிடும். கூடக் கொஞ்ச தூரம் நடப்பது பிரச்சினை இல்லை.

உற்சாகத்துடனேயே பஞ்சாயத்து அலுவலகத்தின் உள்ளே சென்று விசாரித்தாள்.               தலைவர் எதையோ பார்வையிடப் போயிருக்கிறாராம். “விரைவில் வந்துவிடுவார்., காத்திருங்கம்மா.” என்றார்கள்.

அங்கே ஏதேனும் வேலையாக அங்கே வந்தவர்கள் உட்காருவதற்காக, நீண்ட மர பெஞ்ச்சுகள் சில  போடப் பட்டிருந்தன. எல்லாமே சுத்தமாக இருக்கவும் அவற்றுள் ஒன்றில் ஓர் ஓரமாக வாணி அமர்ந்தாள்.

பார்வை துழாவிய அளவில் சுத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருப்பது புரிந்தது.

கிராமத்தின் ஒரு சிறு வீட்டைப் பஞ்சாயத்து அலுவலகமாக மாற்றியிருக்க வேண்டும் என்று தோன்றியது.

சுற்றிலும் வண்ணப் பூக்களுடன் தோட்டம் ஒன்று கண்ணுக்கு இதமாக அழகாகப் பராமரிக்கப் பட்டிருப்பது தெரிந்தது.

அங்குள்ள விவரம் தந்தவரிடம், தலைவர் வந்தால் ஒரு குரல் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டுவிட்டு, வாணி செடிகளை அருகில் சென்று பார்க்கலானாள். விதை கிடைத்தால், இதில் எதெதை வீட்டில் வளர்க்கலாம் என்று அவளது யோசனை ஓடியது.

சுற்றிலும் இடத்தோடு தனி வீடு என்றால் இது ஒரு வசதி என்று உள்ளூர மனம் உற்சாகம் கொண்டது.

“ஜல்ஜல்” என்ற ஜோடிக் காளைகளின் கழுத்து மணி ஓசைக்காகப் பாதிக் கவனத்தை ஒதுக்கியபடியே தோட்டத்தில் சுற்றிக் கொண்டிருந்த வாணி யாரோ அழைக்கும் குரலில் திரும்பிப் பார்த்தாள்.

தலைவர் வந்தால் கூப்பிடும்படி அவள் கேட்டிருந்த மனிதன்தான். ஆனால், மாட்டின் சலங்கைச் சத்தமே கேளாதபடி தலைவர் எப்படி வந்தார்?

விரைந்து வரும்போதே வாணி தன் தலையில் தானே லேசாகத் தட்டிக் கொண்டாள்.

கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் என்றால் இரட்டை மாட்டு வண்டியில் சலங்கை ஒலிக்கத்தான் வருவாரா? பட்டி தொட்டி எங்கும் பைக்கும் ஜீப்பும் பறக்கும்போது மாட்டு வண்டியில் மெல்ல அசைந்தாடி யார் வருவார்கள்?

அதிலும் டீவியும் பல சானல்களும் வந்த பிறகு நகரத்துக்கும் கிராமத்துக்கும் உடையிலோ, வசதிகளிலோ அப்படி ஒன்றும் வேறுபாடு இருப்பதில்லை.

அதை யோசியாமல் என்ன மாதிரிக் கற்பனை செய்துவிட்டாள்!

தலைவரின் உடை கூட . . . நல்ல மயில் கண் வேஷ்டிக்குப் பதிலாக ஜின்சாகவே இருக்கலாம்!

வயதினால் சற்றே சரிந்த தொப்பையோடு இறுக்கிப் பிடிக்கும் ஜீன்சில் ஒரு நடுத்தர வயது மனிதனை மனதில் உருவகப் படுத்தியவாறே அலுவலகக் கட்டிடத்துக்குள் விரைந்த வாணிக்கு உள்ளூரச் சிரிப்பு குமிழியிட்டது.

“நல்ல் . . ல மனிதர்” என்று ஆட்டோ ஓட்டி சொன்னாரே!

விரிந்த முறுவலுடன் தலைவரின் அறைக்குள் சென்ற வாணியின் முகத்தில் இருந்த சிரிப்பு அப்படியே மறைந்து போனது.

ஏனெனில் தலைவரின் நாற்காலியில் அமர்ந்திருந்தவன் அந்தக் கோணல்புத்திக்காரன்.

இவனா நல்லவன் என்று ஆட்டோ ஓட்டி வர்ணித்த அந்தப் புவனபூபதி?

சகோதரிகள் இங்கே வந்த மறுநாளே பின்னோடு துரத்தி வந்து, வந்த வழியே திரும்பிப் போய்விடுமாறு விரட்டியவன்! அடுத்தும் ஒற்றையடிப் பாதையே என்றாலும் அவனது பண்ணைக்குள் காலடி எடுத்து வைத்தால் போலீசுக்குப் புகார் செய்யப் போவதாக மிரட்டியவனும் கூட!

சும்மாவே போ போ என்று விரட்டிய இவனிடம் கேட்டு என்ன நடக்கப் போகிறது?

முகம் பனிப் பாறையாக உறையத் திரும்பிச் சென்றுவிட எண்ணிப் பின்னே ஓர் அடி எடுத்து வைத்த வாணி ஒரு கணம் தயங்கினாள்.

இவனிடம் உதவி கேட்பதில் எந்தப் பயனையும் எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால் கேளாமல் போயும்தான் என்ன லாபம்? மிகவும் உறுதியான “ஒன்றுமில்லை”தானே?

அதைவிட ஒருவேளை, அந்த “வாரம் ஒரு முறை வரும் குப்பை வண்டி” போல, ஓரளவேனும் நல்லதாக ஏதோ ஒரு விவரம் கிடைக்கலாமில்லையா?

இவன் ஏதேதோ நன்மைகள் செய்வதாக வேறு அந்த ஆட்டோ ஓட்டி கூறினாரே. . .

மனம் மாறிவிடக் காலை முன்னே வைத்து அறையின் உள்ளே சென்றாள்.

உள்ளூரக் கடுப்புடன்தான்.

புதிதாக ஒருத்தி வருகிறாளே. ஊருக்கே புதியவள் என்று அவனுக்கும் தெரியும்! வாம்மா, என்ன விஷயமாக வந்தாய் என்று கேட்கலாமில்லையா?

என்னமோ பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி போஸ் கொடுத்தபடி அசையாமல் உட்கார்ந்திருக்கிறானே என்று அவள் மனதில் எரிச்சல் மண்டியது.

ஆனால் வேலை நடக்க வேண்டியது அவளுக்கு அல்லவா?

எரிச்சலை மறைத்து வணக்கம் தெரிவித்தாள்.

பெரிய மகாராஜா மாதிரித் தலையசைத்து அவளது வணக்கத்தை ஏற்றவன், பார்வையாலேயே எதிரில் கிடந்த நாற்காலிகளுள் ஒன்றில் அமருமாறு தெரிவித்தான்.

பரவாயில்லை. உட்கார இடம் கொடுக்கிறான்! ஆனால் வாயைத் திறந்து கூட உட்காரச் சொல்லலாமே!

அவனுக்கு நன்றாகவே தெரியும்தான். என்றாலும் முதலில் வாணி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

பஞ்சாயத்தின் நோட்டீசை எடுத்து அவன் முன்னே வைத்தாள்.

“பெரிய சாலைப் புறமாக உள்ள வீடுகளில் ஒன்றை வாங்கிக் குடி வந்திருக்கிறோம். இப்போது இந்த நோட்டீஸ் வந்தது. வெளிப்புறமாக நீட்டிக் கொண்டிருக்கும் மரக் கிளைகளை உடனே வெட்டி அகற்ற வேண்டுமாம். கூலியை நான் கொடுத்துவிட்டால், மரத்தை வெட்ட ஆள் அனுப்பி உதவ முடியுமா?” என்று விவரமாகவே கேட்டாள்.

அவனேதான் கையெழுத்திட்டு அனுப்பியிருக்க வேண்டும். ஆனாலும், கல்லுளி மங்கன் போலப் பேசாமலே அமர்ந்திருக்கிறானே!

உதட்டோரம் ஏளனமாக வளைவது தெளிவாகத் தெரிந்தது. ஆனால், மரத்தின் மேலே ஏறி வெட்டுவதற்கு ஆள் கேட்டால் இகழ்வதற்கு அதில் என்ன இருக்கிறது?

இருக்கிறது என்று அவன் சொன்னான்.

“நினைத்தால் காசை வீசி எறிந்து வேலையை நடத்திக்கொள்ள இது நகரம் அல்ல. அவரவர் வேலையை அவரவர்தான் செய்ய வேண்டும்.” என்றான் அவன் கறார்க் குரலில்.

“ஆனால் மரம் ஏறி வெட்டுவதற்கு . . அதாவது விறகு வெட்டி மாதிரி யாராவது இங்கே இருப்பார்கள்தானே? அவர்களில் யாராவது கிடைத்தால் வசதியாக இருக்கும்.” என்று பொறுமையை இழுத்துப் பிடித்தபடி அவள் கூறினாள்.

இப்போது அவனது ஏளனம் குரல் வடிவம் பெற்றது. ஓர் ஏளன “ஹூம்” உடன் அவன் சொன்னான். “அன்றே சொன்னேனில்லையா? பட்டணத்து சொகுசு சுந்தரிகளுக்கு இந்தக் கிராமத்து வாசம் சரி வராது என்று! பேசாமல் திரும்பிப் போய்விடு . . . “

அவன் முடிக்கும்வரை வாணி காத்திருக்கவில்லை.

சட்டென எழுந்தவள் கையை நீட்டி பஞ்சாயத்து நோட்டீசை

எடுத்துக்கொண்டு மடமடவென்று வெளியே நடந்துவிட்டாள்.

“ஆணுக்குப் பெண் குறைவில்லை காண்” என்று என்றைக்கோ பாரதியார் எழுதி வைத்திருக்கிறார். அதை மறந்து இந்த அகம்பாவியிடம் உதவி கேட்டு வந்தது அவளது பிழை!

# அத்தியாயம் - 6

உள்ளே கொதிப்புடன் பஞ்சாயத்து அலுவலகத்தை விட்டு வெளியேறி மடமடவென்று நடந்த வாணிக்குப் பின்னிருந்து ஏதோ குரல் கேட்பது போலத் தோன்றியபோதும் நிற்கவும் இல்லை., நடை வேகத்தைக் குறைக்கவுமில்லை.

எதற்காக நிற்பது? அவனாக இருந்தால் இன்னும் ஏதாவது மட்டம்தட்டிப் பேசுவான்.

பட்டணத்து சொகுசு சுந்தரிகளாமே! அவர்களுடைய தாயார் மகள்களை எப்படி வளர்த்தாள் என்று அவனுக்கு என்ன தெரியும்?

பள்ளி, கல்லூரி விடுமுறைநாட்களில் சம்பளம் கொடுத்தே வேலைக்காரியை வரலட்சுமி நிறுத்தி விடுவாள். வீட்டு வேலைகள் அத்தனையையும் அக்காவும் தங்கையும் பங்கு போட்டுக்கொண்டு செய்ய வேண்டும். வாய் வார்த்தையாக எத்தனை கற்றுக் கொடுத்தாலும், நேரடியாகச் செய்யும்போதுதான் செய்முறை மனதில் நிற்கும் என்பாள்.

அப்படிப் பயிலவில்லை என்றால், இருவரும் மட்டுமாக வீட்டைப் பராமரிக்கும் தைரியம் எப்படி வரும்?

எதுவும் தெரியாமல் சும்மாச் சும்மா அதென்ன “பட்டணத்து சொகுசு சுந்தரிகள்”?

“ஏ . . நில்லும்மா. நில்லு!” என்று அவளுக்கு முன்னே வந்து மூச்சிரைக்க நின்ற ஆளைப் பார்த்ததும், வாணியும் நடையை நிறுத்தினாள்.

பஞ்சாயத்து அலுவலகத்து பணியாள். அப்படி எதற்கு ஓடி வந்து வழியை மறிக்கிறான்? இவன் மூலமாகவும் ஏதாவது மிரட்டல் செய்தி அனுப்பியிருப்பானா அந்தக் கோணல் புத்திக்காரன்?

அப்படி எதுவும் இல்லை என்பது அந்த அலுவலரின் நீட்டிய கையைப் பார்த்ததும் புரிந்தது.

அவனது கையில் இருந்தது அவளது பைதான். பாங்க் வாசலில் மலிவாகக்கிடைத்தது என்று கொஞ்சம் பழங்கள் வாங்கிருந்தாள். இருந்த கோபத்தில் வெளியே வைத்துவிட்டுப் போன பழங்கள் பற்றிய நினைவே இல்லாமல் விடுவிடுவென்று நடந்திருக்கிறாள்!

பழங்களை அவளிடம் கொடுத்துவிடும் நல்ல நோக்கத்தோடுதான், அவனும்  அவளைத் துரத்திக்கொண்டு ஓடி வந்திருக்கிறான். பழப் பையை வேறு தூக்கிக்கொண்டு. வயது ஐம்பதேனும் இருக்கும்!

எவனோ என்னமோ சொன்னான் என்று இந்த மனிதனைக் கஷ்டப்பட வைத்துவிட்டாளே!

அவன் மூச்சு வாங்கிக்கொண்டு இருக்கும்போதே, “சாரி சாரி. மன்னித்துவிடுங்கள். அவசரத்தில் கிளம்பியதில் மறந்து, உங்களைச் சிரமப்பட வைத்து விட்டேன். வந்து . .வீட்டில் பிள்ளைகள் இருப்பார்கள் இல்லையா? கொஞ்சம் கொண்டு போங்கள்.” என்று இரண்டு ஆப்பிள்களை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

சாதாரணமான நடுத்தர நிலைப் பணியாள்தான். ஆப்பிள் பெரிய விஷயமாகவே இருக்க வேண்டும். ஆனாலும் அவள் நீட்டிய பழங்களைப் பெற்றுக் கொள்ளாமல் பின்னடைந்து, “வேண்டாம்மா. ஆப்பீசுக்கு வாரவுக கிட்டே பொருள் வாங்கினியான்னு தலைவரு திட்டுவாரு. பையை வாங்கிட்டேயில்ல? போய் வா.” என்றுவிட்டு அலுவலகத்தை நோக்கி நடந்தான் அந்த ஆள்.

என்ன பெரிய கண்டிப்பு? இந்த இரண்டு பழங்களை வாங்கிக் கொண்டால் தலையைக் கொய்துவிடுவானா?

அப்படியானால் அவனது அதிகப்படிப் பேச்சுக்கு என்ன தண்டனை கொடுப்பது? அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று ஒன்றுமே தெரியாமல் சொகுசுசுந்தரி என்கிறானே!

கோபமும் கொதிப்புமாக அவள் குமுறும்போதே ஆட்டோ ரிக்ஷா சத்தம் கேட்டது.

அவள் வந்த வாகனமேதான். அவள் அருகில் கொணர்ந்து ஆட்டோவை நிறுத்தி “ஏறிக்கிறியாம்மா? பக்கத்திலே எங்கேயுமானாக் கொண்டு விட்டுவிட்டுப் போறேன். எங்க மாணிக்கம் பையன் வீட்டிலே யாருமில்ல. குடும்பத்தோடக் கோயிலுக்குப் போயிருக்கானாம். அதான் வந்திட்டேன். உன்னை விட்டுவிட்டு அப்படியே போயிடுவேன். ரூபா ஒண்ணும் வேணாம்.” என்றார் ஆட்டோ ஓட்டி.

சாலை கண்ணுக்குத் தெரிந்தாலும் நடப்பதானால் சற்றுத்

தூரம்தான்.

நன்றியுடன் ஆட்டோவில் ஏறிக் கொண்டவள் வீட்டில் இறங்கும்போது தனியே வைத்திருந்த இரு ஆப்பிள்களையும் அவரிடம் கொடுத்து அனுப்பினாள்.

வாயெல்லாம் பல்லாக அந்தப் பழங்களை அவர் பெற்றுக்கொண்டது, அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

இருவருமாக உணவருந்தியவாறே அன்றைய நிகழ்வுகளைப் பற்றிப் பேசினார்கள்.

மற்ற வேலைகள் எல்லாம் முடிந்தபோதும் மரம் வெட்ட ஆள் கிடைக்காதது பானுவுக்குக் கவலையாக இருந்தது.

அதுவும், "தன் கையே தனக்குதவி பானு. சின்ன மரம்தானே? வரும்போதே நன்கு பார்த்துவிட்டு வந்தேன். முன்னேயும் இதே போல வெட்டியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். புதிதாக வளர்ந்த கிளைகள்தான் மேலே போய்க் கம்பியை இடிக்கின்றன. அவைகளும் மெல்லிசுதான். நாமே வெட்டி விடலாம்." என்று வாணி உறுதியான குரலில் கூறியபோது, சின்னவள் முகம் ரொம்பவும் வாடிப் போயிற்று.

கவனித்துவிட்டு, "ஏய் என்னடி பயம்? மரத்தில் ஏறவா? சென்னையில் நம் குடியிருப்பில் உள்ள செர்ரி மரத்தில் எத்தனை முறை ஏறிப் பழம் பறித்துத் தின்றிருப்போம்? இதுவும் அது போலத்தான். செய்யும்போது உனக்கே புரியும்." என்று தேற்றினாள் பெரியவள்.

குடியிருப்பில் இருந்த அழகான செர்ரி மரத்தில் ஏறிப் பழம் பறிப்பதும் எல்லோருக்கும் கொடுத்து உண்பதும் வேறு., சின்னதானாலும் மரத்தில் ஏறித் தடுமாறாமல் அமர்ந்து அதன் கிளைகளை வெட்டுவது வேறு என்பதை வாணிதான் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

நன்றே செய்க, அதையும் இன்றே செய்க என்பது வரலட்சுமி மக்களுக்குக் கற்றுக் கொடுத்த மந்திரம். நாளை என்று ஒதுக்கி வைத்தால் அந்த வேலை நடக்கவே நடக்காது என்பாள். அதன்படி அன்று மாலையே வாணி மரம் வெட்டும் வேலையைத் தொடங்கிவிட்டாள்.

சும்மாவே சற்றுச் சோர்வாகத் தெரிந்த பானுவை மரத்தில் ஏற அவள் விடவில்லை. வெட்டுப்பட்டு விழும் கிளைகளை விழ விழ இழுத்துக்கொண்டு போய் வீட்டு எல்லைக்குள் போடும்படி அவளிடம் சொல்லிவிட்டு, வாணிதான் மரத்தில் ஏறினாள்.

கிளைகளை வெளியே போட்டு வைத்து அது வேறு பிரச்சினை ஆகிவிடக் கூடாதே.

அந்தக் கோணல் புத்திப் பஞ்சாயத்துத் தலைவன்தான் எங்கே எங்கே என்று காத்திருக்கிறானே!

சின்னச் சின்ன கிளைகளை அகற்றுவது அவ்வளவு கடினமாக இருக்கவில்லை. லேசாக அறுத்துவிட்டு இழுத்தாலே அவை உடைந்து போயின.

பானுவும் முதலில் உற்சாகத்துடனேயே அந்தக் கிளைகளை இழுத்துப் போய் அவர்களது எல்லைக்குள் போட்டுவிட்டு வந்தாள்.

தொடக்கம் எதிர்பார்த்ததை விட எளிதாக முடிந்தது. ஆனால் அடுத்திருந்த சற்றே பெரிய கிளைகளை வெட்டுவது கடினமாக இருந்தது. ப்ளைவுட், மரப் பட்டிகளை அறுக்கப் பயன்படுத்தி பழகியிருந்த அரத்தின் பிளேடு இரண்டு முறை உடைந்து போனது. அதற்கு மேல், வெட்டரிவாளைக் கையில் எடுத்தாள் வாணி.

ஆனால் மரத்தின் மேல் தடுமாறாமல் உட்கார்ந்தபடி வெட்டரிவாளால் வீசி வெட்டுவது கடினமாக இருந்தது. வீசாமல், சின்னச் சின்ன வெட்டுகளாக அழுத்தம் கொடுத்து வெட்டுமுன் கைகள் சோர்ந்து போயின.

அத்தோடு சாலையின் போக்குவரத்து வேறு! அந்தச் சாலையில் அதிக வாகனங்கள் செல்வதில்லை என்றாலும், போனவர்களுக்கு ஒரு பெண் மரத்தின் மேல் அமர்ந்திருப்பது வியப்பளித்தது போலும்!

ஒரு சிலர் வண்டியைச் சற்று மெதுவாக ஓட்டியபடி பார்த்துவிட்டுப் போனார்கள். வேறு சிலர், வட்டமடித்துத் திரும்பி வந்தே மரத்தை . .மரத்தின் மேல் இருந்த அவளையே வெறித்து நோக்கிவிட்டும் சென்றார்கள்.

மரத்தின் மேலிருந்த பெண்ணின் கையில் இருந்த அரிவாள் காரணமாகவோ என்னவோ போய்விடவும் செய்தார்கள்.

மனதோடு உடம்பும் சோர்ந்து போகவே, அன்றைய வேலை அத்தோடு போதும் என்று வாணி மரத்திலிருந்து மெல்ல இறங்கினாள்.

மதிய மீதியும் சில பழங்களுமாக இரவு உணவு முடிந்தது. நல்ல சுடுநீரில் அலுப்பு தீரக் குளித்துவிட்டுப் படுத்ததுமே வாணி அடித்துப் போட்டாற்போலத் தூங்கிவிட்டாள்.

படுக்கையில் பானு உருண்டு புரண்டதும் அனத்தியதும் வெகு

நேரம்வரை அவளுக்குத் தெரியாது.

உடலின் களைப்பு ஓரளவு ஓரளவு நீங்கிய பிறகே தங்கையின் அனத்தல் சத்தம் மெல்ல அவளது காதுகளில் மெல்ல விழலாயிற்று.

பானு அனத்தியதோடு படுக்கையில் இங்குமங்குமாகப் புரண்டு புரண்டு படுப்பதும் புரிய எழுந்து விளக்கைப் போட்டுவிட்டுத் தங்கையைத் தொட்டுப் பார்த்தாள்.

சின்னவளுக்குக் காய்ச்சல்! நல்ல காய்ச்சலும் கூட!

மதியத்தில் இருந்தே பானுமதியின் பேச்சுக் குறைந்து போயிருந்தது காலம் கடந்து வாணிக்கு நினைவு வந்தது. இதில் மரக்கிளைகளை இழுத்துப் போட்டு வேலை வேறு!

பானு எவ்வளவு நேரமாக அனத்துகிறாளோ? ஒன்றும் தெரியாமல் நன்றாகத் தூங்கிவிட்டோமே என்று இருந்தது வாணிக்கு!

தங்கைக்குக் குளிருவது போலத் தோன்ற, கம்பளியை எடுத்து வந்து மூடிவிட்டாள்.

உடலில் சூடு அதிகமாக இருக்கவும், இப்போதைக்கு அவளை எழுப்பி காய்ச்சல் மாத்திரை ஒன்றைக் கொடுத்துவிடுவது நல்லது என்று எண்ணினாள்.

நாளை பொழுது விடிந்தும் ஜுரம் இருந்தால் யாராவது மருத்துவரைத் தேட வேண்டும்.

மனதில் திட்டமிட்டபடியே மாத்திரை மருந்துகளை வைக்கும் அட்டைப் பெட்டியைத் திறந்து பார்த்தால், பெரிய அதிர்ச்சியாக அதில் காய்ச்சல் மாத்திரையைக் காணோம்!

பானு அதை வேறு எங்கேனும் வைத்திருக்கிறாளா? அதற்கு வாய்ப்புக் கிடையாது என்று தெரிந்தபோதும், மாத்திரை அட்டையை வைக்கக் கூடிய மற்ற இடங்களிலும் வாணி தேடிப் பார்த்தாள்.

எங்கேயும் இல்லை என்று தெளிவானதும், மெல்லத் தங்கையை எழுப்பிக் கேட்டாள்.

கஷ்டப்பட்டுக் கண் விழித்து அவள் சொன்ன பதிலில் வாணிக்கு இன்னமும் பகீரென்றது. “இ . .இரண்டு நாட்களாக உடம்பு கொஞ்சம் வலித்ததா? படுக்கும்போது போட்டு மாத்திரையைக் காலி பண்ணிவிட்டேன், அக்கா. . அ . .ம்மா . . “ என்று மீண்டும் அரற்றினாள் சின்னவள்.

சொல்லும்போதே சோர்வில் தங்கையின் கண்கள் செருகிக்

கொள்ளவும், வாணி கதி கலங்கிப் போனாள்.

இப்போது என்ன செய்வது? தர்மாமீட்டரை வைத்துப் பார்த்தால் கையிடுக்கிலேயேநூற்றிரண்டு இருந்தது.

யூடிகோலோன் நனைத்த துணியால் நெற்றியில் ஒத்தனம் கொடுத்துப் பார்த்தாள். குறைவதற்குப் பதிலாகக் காய்ச்சல் ஏறுவது போல இருக்கவே பெரியவள் மீண்டும் அரண்டாள்.

இரவு முழுவதும் இப்படியே விட்டுவிட முடியாது. காய்ச்சலுக்கு மருந்து கொடுத்தே ஆக வேண்டும்.

ஆனால் எங்கே போய் வாங்குவது?

அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் அவள் பார்த்த அளவில் மருந்துக்கடை எதுவும் அவள் கண்ணில் படவில்லை. இருக்கிறதா இல்லையா என்றே தெரியாததைத் தேடி அலைவது வீண்.

சாலை வழியே போய் வந்தபோது இருபத்துநாலு மணிநேர மருத்துவமனை  ஒன்றைப் பார்த்த நினைவு வாணிக்கு வந்தது. சற்றுத் தூரம்தான். ஆனால் ஓட்டமும் நடையுமாக வேகமாகப் போனால் ஒரு மணி நேரத்தில் திரும்பி வந்துவிடலாம்.

வேகமாகப் போய் மருந்தை வாங்கி வருவதற்கு இப்போது அவளது ஸ்கூட்டி இல்லையே என்ற வருத்தத்தையும் வாணி உடனே உதறினாள். இல்லாததை நினைத்து விரயமாக்க இப்போது அவகாசம் இல்லை.

தங்கையை மறுபடியும் உலுப்பி எழுப்ப மனமின்றி, ஒரு காகிதத்தில் மருந்து வாங்கிவரப் போவதாக எழுதிப் பார்த்தாலே தெரியும்படிப் படுக்கை பக்கத்து மேஜையில் வைத்தாள். தோள்ப்பையில் கொஞ்சம் பணத்தோடு செருப்பை மாட்டிக்கொண்டு டார்ச் லைட் சகிதம் வீட்டைப் பூட்டிக்கொண்டு வாணி கிளம்பிவிட்டாள்.

பகலில் பார்த்ததற்கும் அதிலேயே இரவில் நடப்பதற்கும் வேறுபாடு உண்டு. எங்காவது தட்டி விழுந்து அது வேறு தாமதம் ஆகிவிடக் கூடாதே என்று கவனத்துடன் சாலையைப் பார்த்தபடி வாணி வெகு வேகமாக நடக்கலானாள்.

சுமார் பத்து நிமிஷங்கள் நடந்திருப்பாள்.

ஆள் அரவமே இல்லாதிருந்த சாலையில் ஒரு மோட்டார் பைக் வரும் சத்தம் கேட்கலாயிற்று.

தன் வேலையாகச் செல்லும் இன்னொரு மனிதனாகக் கூட

இருக்கலாம். ஆனால் எதற்கும் தயாராகப் பெப்பர் ஸ்ப்ரேயைப் பயன்படுத்தத் தயாராக எடுத்து வைத்துக்கொண்டபடியே வாணி நடையைத் தொடர்ந்தாள்.

வந்த ஆள் யாரோ தன் வழியே போகிறவன் அல்ல.

ஆனால் அவள் முன்னே வந்து அவளை வழி மறிக்கவும் இல்லை. ரொம்பவும் நெருங்கி வரவுமில்லை. சற்று விலகியே ஆனால் அவளது நடை வேகத்துக்கே வண்டியை ஓட்டியபடி, “நான் புவனபூபதி, பஞ்சாயத்துத் தலைவன். கையில் இருப்பதைப் பயன்படுத்தத் தேவையிராது என்பதால் சற்று நின்று பதில் கூறலாமில்லையா?” என்று கேட்டான்.

ஸ்ப்ரே பாட்டிலைப் பையுள் போட்டபோதும் வேகம் குறையாமல் நடந்தபடியே, “நிற்பதற்கு நேரமில்லை.” என்றாள் அவள் சுருக்கமாக.

“ஆனால் இந்த நேரத்தில் தனியே செல்வதும் சரியல்ல. என்ன விஷயம்?” என்று கேட்டான் அவன்.

அவனது பேச்சின் முன் பகுதியை ஒதுக்கி, அருகிலே ஏதாவது மருந்துக்கடை இருந்தால் சொல்லக் கூடுமே என்ற ஒரே காரணத்துக்காக, “தங்கைக்குக் கடுமையான காய்ச்சல். உடனே மருந்து வாங்க வேண்டும்.” என்றாள் அவள் மறுபடியும் சுருக்கமாகவே.

“ஓ!” என்றான் அவன். கூடவே, “அதற்கு நீதான் இந்த நடு நிசியில் போக வேண்டுமா? உன் ஆண் நண்பர்கள் எவனையாவது அனுப்ப வேண்டியதுதானே?” என்று எரிச்சலும் பட்டான்.

“அப்படி யாரும் கிடையாது.”

அவளது பதில் காதிலேயே விழாதது போல, “ஏறிக்கொள். மருந்துக் கடைக்குக் கூட்டிப் போகிறேன்.” என்றான் அவன். . .புவனபூபதி.

ஆட்டோ ஓட்டி அவனைப் பற்றிக் கூறியது வாணிக்கு நினைவு வந்தது. செய்யலாமோ என்று தோன்றியபோதும், அவள் அளவில் அவன் ஒன்றும் நல்லவன் இல்லையே!

எனவே, “உங்களை எப்படி நம்புவது?” என்று கேட்டாள் அவள்.

“அது சரி. கண்டவர்களோடு கூத்தடிப்பீர்கள் நல்லவனைக் கண்டால் நம்ப மாட்டீர்கள்!” என்றான் கொஞ்சம் கோபமாக.

அதென்ன அவளுக்கு வேண்டியவர்கள் “கண்டவர்கள்”? அவன் மட்டும் “நல்லவன்”? “நல்லவன் என்று மற்றவர் சொல்ல

வேண்டும் தானே பீற்றக் கூடாது.” என்றாள் அவள் சற்று இளக்காரமாக. “பொதுவாகத் தன்னைத்தானே உயர்த்திப் பேசுகிறவர்களை நம்ப முடியாது என்று என் அம்மா சொல்லியிருக்கிறார்கள்.”

ஒரு வேக மூச்சுக்குப் பின், “இதையெல்லாம் இந்த நேரத்தில் விவாதித்துக் கொண்டிருக்க முடியாது. இப்போது என்ன செய்யப் போகிறாய்? அதைச் சொல்லு. மருத்துவமனை, அதை ஒட்டிய மருந்துக்கடை எதற்கானாலும், இன்னும் ஒரு கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அதற்கு முன்னால் டாஸ்மார்க் கடை ஒன்றும் உண்டு. பத்து மணிக்கு மேல் பின் வழியே விற்பனை நடக்கும்.” என்று விவரம் சொன்னான் அவன்.

மிரட்டுகிறானாக்கும் என்று ஆத்திரம் வந்தது அவளுக்கு.

வீட்டில் பானு எப்படி இருக்கிறாளோ என்ற கவலை வேறு.

எனவே எரிச்சலுடன், “யாரும் என்னை எதுவும் செய்ய முடியாது. அப்பா இல்லை என்று அம்மாவே பாதுகாப்புக் கலைகள் கற்று வைத்திருந்தார்கள் எங்களுக்கும் நல்ல பயிற்சி உண்டு.” என்றாள் கடுப்பாக.

“அப்புறம் என்னிடம் மட்டும் என்ன பயம்?”

“பயமா? அதெல்லாம் கிடையா . . து.” என்று முடிக்கும்போதே அவனது தந்திரம் அவளுக்குப் புரிந்து போயிற்று.

ஆனால் இந்த நேரத்தில் நல்ல பஞ்சு மெத்தையில் படுத்துத் தூங்காமல், அவளுக்குத் துணையாக வந்துகொண்டு இருக்கிறானே! உதவவும் முன் வருகிறான்.

அத்தோடு அந்த ஆட்டோ ஓட்டி வேறு நிறையச் சொன்னான்!

நின்று, “பயம் மற்றவர்களிடம் போலவே உங்களிடமும் எனக்குக் கிடையாதுதான். ஆனால், அவ்வளவு தூரம் நடப்பதற்கு உங்கள் பைக்கில் போனால் என் தங்கைக்கான மருந்தைச் சீக்கிரமாக வாங்கி வந்து விடலாமே என்று மட்டுமே உங்களோடு வருகிறேன்.” என்று எடுப்பாகக் கூறியவள், அவன் பேசாமல் பைக்கை நிறுத்தவும் போய் அதில் ஏறிக் கொண்டாள்.

வேகத்தில் கவனம் வைத்ததாலோ என்னவோ அவன் மேலே எதுவும் பேசவில்லை. வாகனத்தை விரைந்து செலுத்தி மருத்துவமனையை அடைந்தான்.

“மருந்துச் சீட்டு . .” என்று இழுத்த அங்கிருந்த பொறுப்பாளரிடம் பேசிச் சீட்டு இல்லாமலே மருந்தை வாங்கிக் கொடுத்தான்.

திரும்பும்போதும் பேச்சுக் கொடுக்காமல் வேகமாகவே ஓட்டி வந்து வீட்டில் முன் இறக்கி விட்டான்.

“ரொம்ப நன்றி. அப்போது . . “ என்று வாணி விடை பெற முயன்றால், கதவைத் திறந்து  உள்ளே செல்லுமாறு சைகை செய்தான்.

கிராமத்து கனவான். பெண்கள் பாதுகாப்பாக வீட்டுக்குள் செல்வதைப் பார்த்துவிட்டுத்தான் கிளம்புவான் போல.

வீட்டுக் கதவைத் திறந்தவள் அவனும் உள்ளே வரத் தொடங்கவும் வழியை மறைத்து நின்று, “இதற்கு மேல் உங்களை அனுமதிக்க முடியாது.” என்றாள் கறார்க் குரலில்.

கேட்டுக்கொண்டு சும்மாப் போய்விடவில்லை அவன். “ஏன்? நான் உள்ளே வந்தால், உன் வண்டவாளம் தண்டவாளம் ஏறிவிடுமா?” என்று பழைய ஏளனக் குரலில் கேட்டான்.

முகமும் குரலும் கடுக்க, “இதே பழைய வார்த்தைகளை ஹோவர் க்ராஃப்ட் ரயில் வந்தாலும் விட மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.” என்றாள் வாணி.

“அது புழக்கத்துக்கு வரட்டும் அப்புறம் மாற்றிக் கொள்ளலாம். முதலில் தங்கையைப் போய்ப் பார். அவளுக்கு வேறு உதவிகளும் தேவைப்படலாம்.” என்றபடி பிடிவாதமாக வீட்டினுள் வர ஒரு காலை முன்னே வைத்தான் புவனன்.

வாணிக்கு ஆத்திரமே. ஆனால் பிடித்துத் தள்ளி ரசாபாசம் பண்ணவும் அவளுக்கு விருப்பம் இல்லை.

எனவே “உதவி செய்திருப்பதால் உள்ளே விடுகிறேன். அத்து மீற முயன்றால் கைகால் உடைவதற்கு நான் பொறுப்பல்ல.” என்ற எச்சரிக்கையுடன் அவனுக்கு வழி விட்டாள்.

“ஆகா, நீ அடித்து உடைக்கும்வரை என் கை பூப் . . வேண்டாம். அந்த பழைய உவமை வேண்டாம். பதிலாக, என் கை கம்ப்யூட்டர் கேமா விளையாடிக் கொண்டிருக்கும்?” என்று கேட்டவாறு அவன் உள்ளே வந்து பார்த்தான்.

அவனுக்குக் கிடைத்திருந்த தகவலின்படி அன்று ஓர் இளைஞன் அந்த வீட்டுக்கு வந்திருந்தான். அவன் போய்விட்ட விவரம் அவன் அறியாதது. முறைகேடுகள் இருப்பதாகத் தெரிந்தால் எப்பாடு

பட்டேனும் இவர்களை விரட்டிவிடுவதே அவனது நோக்கமாக இருந்தது.

எதற்கும் கிடைத்த தகவலைச் சரிபார்த்துக் கொள்வது நல்லது.

அத்தோடு ஒரு பெண்ணை இந்த நேரத்தில் தனியே அனுப்பிவிட்டு அவன் இங்கே என்ன வேட்டி முறிக்கிறான்? என்ன மாதிரி நிலையில் இருந்தாலும் அவனைக் கிழிகிழியென்று கிழித்துவிடும் நோக்கத்தில்தான் புவனபூபதி பிடிவாதமாக வீட்டினுள் சென்றது.

ஆனால் அங்கே இரு பெண்கள் மட்டுமே இருந்தனர்.

அது மட்டுமல்ல. உள்ளே சந்தன மாலையுடன் ஒரு பெண்மணியின் படம் இருந்தது.

“அம்மா இல்லையா?” என்று தணிந்த குரலில் வினவினான்.

“ம்.”

“அப்பா?”

“சிறு வயதிலேயே போய்விட்டார்.”

“ஓ, ரொம்ப சாரி.” என்றான் இன்னமும் இரங்கிய குரலில்.

தலையசைத்து “அவசியமில்லை. ரொம்ப காலமாக அப்பா இல்லாமலே வாழப் பழகிவிட்டோம். இப்போதுதான் . . .ஆனால் இதில் யாரும் எதுவும் செய்ய முடியாது. தப்பு சொல்வதானால்கூட மேலே இருப்பவரைத்தான் சொல்ல வேண்டும்!” என்றாள் அவள் உணர்ச்சியற்ற குரலில்.

“அக்கா . .தாகம் . . “ என்ற தங்கையின் குரல் அவளை நடப்புக்குக் கொண்டு வந்தது.

புவனபூபதியை ஒரு பொறுமையிழந்த மூச்சுடன் பார்த்து, “உங்களுக்குத்தான் இந்த வீட்டு அமைப்பு தெரியும் போல இருக்கிறதே. முன் அறையில் உட்காருங்கள்.” என்றுவிட்டு வேகமாக உள்ளே போனாள்.

அவசரமாகத் தண்ணீரைச் சூடு பண்ணி வென்னீரோடு தங்கையிடம் சென்றால், யூடிகோலோன் நனைத்த துணியை பானுவின் நெற்றியில் போட்டு எடுத்துக் கொண்டிருந்தான் அவன்.

இதமாக இருந்ததோ? கண்ணைத் திறக்காமலே “தாங்க்ஸ்கா.” என்றாள் சின்னவள்.

ஒன்றும் பேசாமல் முன்னறைக்கு விலகிச் சென்றான் அவன்.

வாங்கி வந்த மாத்திரையை நோயாளிக்குக் கொடுக்கும்வரை காத்திருந்தான். அவளும் விரைவிலேயே வெளியறைக்கு வந்து, “நீங்கள் செய்த உதவிக்கு ரொம்ப நன்றி.” என்று சுருக்கமாக நன்றி உரைத்துக் கிளம்பு என்று சொல்லாமல் சொல்வது போலக் கதவைப் பூட்டச் சாவியை எடுத்தாள்.

கையில் எடுத்து வைத்திருந்த கார்டை நீட்டி, “ஏதேனும் உதவி தேவை என்றால் இதில் என் மொபைல் எண் இருக்கிறது.” என்றான் அவன்.

மறுக்காமல் வாங்கிக் கொண்டபோதும், “அனேகமாகத் தேவைப்படாது. தன் கையே தனக்குதவி என்று இருந்தால் நல்ல பெயர் கெடாமல் வாழலாம் என்பது என் அம்மாவின் அறிவுரை.” என்றாள் வாணி.

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, “எப்போதும் நினைவில் இருக்க வேண்டிய நல்ல அறிவுரை. ஆனால் இந்தப் பகுதியில் யார் பெயரும் என் பழக்கத்தால் கெடாது. மாறாக, உயர்வாகத்தான் எண்ணப்படும்.” என்றான் அவன்.

திமிரா என்று எண்ணியபோதும், அப்போது வாதிடத் தென்பு இல்லாதது போல வாணிக்கு அலுப்பாக இருந்தது.

நல்லவேளையாக மேலே நில்லாமல் பூபதியும் கிளம்பிவிட்டான்.

கட்டிலை இழுத்துத் தங்கையுடையதோடு ஒட்டிப் போட்டுக்கொண்டு படுத்தாள் வாணி.

அன்றைய அதிகப்படி வேலையினால் முன் போல உறங்கிவிடக் கூடாதல்லவா?

தூக்கம் கண்களைத் தழுவுமுன், அந்தப் புவனன் கடைசியாகச் சொன்னது அவளுக்கு நினைவு வந்தது.

அவனுடன் பழகுவது பெருமைக்குரியது என்று எவ்வளவு சாதாரணமாகச் சொன்னான்!

அப்படி யாரும் பெருமை அடைந்துவிடக் கூடாது என்றுதான் கத்தி விரட்டிக்கொண்டே இருந்தான் போலும்.

ஆனால், அவன் இருக்கிற திசைப் பக்கம் திரும்பிக் கூடப் பாராமல் இருந்துவிட்டால் அவனால் அவளை எப்படி விரட்ட முடியும்?

மனதுக்குள் முடிவு செய்துவிட்டபோதும் ஏதோ ஒன்றை முழுதாகச் செய்யாமல் விட்டுவிட்ட உணர்வில் வாணிக்குத் தூக்கம் வர மறுத்தது.

சற்று யோசித்துவிட்டு, எழுந்து சென்று, புவனபூபதி கொடுத்த விசிட்டிங் கார்டை எடுத்து, சமையல் அறையில் இருந்த குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு வந்த பிறகே அவளுக்கு ஒழுங்காக உறக்கம் வந்தது!

# அத்தியாயம் - 7

காய்ச்சல் மாத்திரையினால் பானுவும், களைப்பில் வாணியும் அதிக நேரம் தூங்கியிருக்க வேண்டும். காலையில் யாரோ வெளிக் கதவைத் தட்டி உரக்க அழைக்கும் குரலில்தான் வாணியின் தூக்கம் கலைந்தது.

அப்போதும் உறக்கம் கலையாத தங்கையை ஒரு தரம் பார்த்துவிட்டு அவசரமாக எழுந்து வாயில் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள்.

பழுப்பேறிய தார்ப் பாய்ச்சிய வேஷ்டியில் வெளியே மூன்று பேர் நின்றார்கள். கைகளில் கோடரி, வெட்டரிவாள் போன்றவற்றைக் கண்டதுமே இவர்கள் மரம் வெட்டுகிறவர்கள் என்று வாணிக்குப் புரிந்து போயிற்று.

ஆனாலும் இவர்கள் எங்கிருந்து வந்தார்கள் ? யார் அனுப்பி வந்தவர்கள்? சும்மா தெருவோடு போகிறவர்கள் என்றால் எப்படி நம்பி உள்ளே விடுவது?

“இதோ வருகிறேன்.” என்று சொல்லி உள்ளே சென்று மின்னல் வேகத்தில் ஜின்சையும் டாப்பையும் மாட்டிக்கொண்டு மீண்டும் வெளியே போனாள். “யாரப்பா நீங்கள்? இங்கே எதற்காக வந்தீர்கள்?” என்று விவரம் கேட்டாள்.

குழப்பத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு, “நாங்க மரம் வெட்டுகிறவங்கம்மா. இங்கே ஏதோ மரத்திலே கிளை வெட்டோணும்னு சொல்லி அனுப்பினாங்க. அதான் வந்தோமுங்க.” என்றான அவர்களில் வயதில் மூத்தவனாகத் தோன்றியவன்.

“யார் அப்படிச் சொல்லி அனுப்பினார்கள்?”

“அதாம்மா பஞ்சாயத்துக்காரரு. டீ குடிச்சிட்டு வாரதாச் சொல்லிட்டு மனுசனை இன்னுமே காணமே . . ..” என்று சாலைப் பக்கம் எட்டிப் பார்த்தவன் “யோவ் கணக்கு சீக்கிரமா வாய்யா!” என்று கத்தினான்.

வந்தவன் பஞ்சாயத்து ஆளேதான். இரண்டு பழங்களை வாங்க அஞ்சி மறுத்தவன். இவன் அழைத்து வந்தவர்கள் என்றால் தப்பானவர்களாக இருக்க வாய்ப்பில்லை.

வேகமாகச் சென்று வெளிக் கதவைத் திறந்துவிட்டாள்.

அதற்குள் வந்து சேர்ந்துவிட்ட பஞ்சாயத்து அலுவல் ஆள், "அம்மா, நேத்திக்கி மரம் வெட்ட ஆள் கேட்டு ஆப்பீசுக்கு வந்தீகளே, இவங்க மூணு பேரும் கூலிக்கு மரம் வெட்டுறவங்க. வேலை, கூலி நீங்க பேசிக்கிடுங்கம்மா." என்று விவரம் தெரிவித்தான்.

வாணிக்கு உள்ளூரப் பெரும் நிம்மதிதான். என்னதான் "ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்" என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டிருந்தபோதும், முன் தினம் செய்த பழக்கமற்ற வேலையில் தோள்ப்பட்டையில் இப்போதும் அவளுக்கு வலிதான். இந்த வேகத்தில் மீதமுள்ள மரக்கிளைகளை எப்போது வெட்டி முடிப்பது என்று கவலையும்தான்.

எனவே உள்ளூர ஆறுதலோடு, "இங்குள்ள கூலி விவரம் எனக்குத் தெரியாதே. அது பற்றிப் பேசி ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும்." என்றாள் வாணி.

மறுக்காமல் மரம் வெட்டிகளோடு பேசி விட்டு, "பாரு நாட்ராயா, டீத்தண்ணி, நாஷ்டான்னு வேலைய மொள்ளச் செய்யாதீங்க. இன்னைக்குக் குப்பை வண்டிய இங்கே வரச் சொல்லியிருக்கேன். எப்படியும் பன்னண்டு ஒரு மணிக்குள்ள வந்துவிடும். அதுக்குள்ள வேலையை முடிச்சு, குப்பை கூளத்தை வண்டியிலேயும் ஏத்திரணும். பெரசிடண்டு அய்யா சொல்லி அனுப்பியிருக்கிறாக!" என்று சற்று அதட்டலாகக் கூறி முடித்தான்.

பிரசிடண்ட் அய்யா! பஞ்சாயத்துத் தலைவன், அந்தப் புவனன் !

என்ன திடீர் நல்லதனம்? முன்தினம்தானே சொகுசு சுந்தரிகள் என்று பட்டம் கட்டித் திரும்பிப் போய்விடச் சொன்னான்!

போதி மரத்தடி போல இரவின் குளிர்ச்சியில் நல்ல புத்தி உதிக்கும்போல! அப்படியானால் பகலில் வெப்பம் ஏற ஏற அது ஆவியாகிப் போய்விடுமா?

சித்திரமும் கைப் பழக்கம் என்பது போல மரம் வெட்டுவதையே தொழிலாகக் கொண்ட அந்த மூவரும் சுமார் இரண்டு மணி நேரத்துக்குள்ளாகச் சாலை ஓரமாக நின்ற மரங்கள் அத்தனையிலும் கிளைகளை வெட்டி முடித்ததோடு அவளிடம் அனுமதி கேட்டு சற்றுத் திண்ணமான மரத் துண்டுகளைத் தங்கள் சொந்த உபயோகத்துக்கு எடுத்துக்கொண்டு மீதியைக் குப்பை வண்டியில் எடுத்துச் செல்ல வசதியாகக் கட்டி வைத்தார்கள்.

இடையிலே வாணி போட்டுக் கொடுத்த காஃபிக்கும் தந்த

பிஸ்கட்டுக்கும் நன்றி தெரிவிப்பது போல, வீட்டில் கிடந்த மற்ற குப்பைகளையும் சேர்த்துக் குவித்து வைத்தார்கள்.

“தோட்டம் ஏதானும் கொத்திப் புரட்ட வேணுமின்னா கணக்கு கிட்டே சொல்லி அனுப்புங்கம்மா. வந்து செய்யுறோம்.” என்றார்கள்.

“வேலையில் களைத்திருக்கும்போது ஒரு கப் டீ, காஃபி கொடுப்பதுநூறு ரூபாய் கூடக் கொடுப்பதற்குச் சமம்” என்று தாயார் கூறியதன் பொருள் வாணிக்கு அப்போது புரிந்தது. அவர்கள் கிளம்பிக்கொண்டு இருக்கும்போதே, ஜீப் வரும் ஓசை கேட்டது.

“ஏலேய் ராசா வாராக. எல்லாம் ஒழுங்கா வெட்டியிருக்குதான்னு பார்த்துர்ரா, செவத்தையா.” என்று சின்னவர்களில் ஒருவனை மூத்த மரம்வெட்டி ஏவினான்.

“ஆச்சு நய்னா. அவக சொல்லி அனுப்பிச்சா மாதிரி உள்ளாரயும் கலங்கலா இருக்ககாப்புல அங்கங்க வெட்டிட்டோமில்ல?” என்றான் அந்த சிவத்தையன்.

வாணி குழப்பமாகப் பார்க்கவும், “அப்பத்தான் உடனேயே வெளிப்பக்கமா கிளைக வைக்காதும்மா. மரம் வளர உள்ளாரவும் இடம் இருக்குமில்ல?” என்று விளக்கம் சொன்னான் மூத்தவன்.

உள்ளூர வியப்பாக இருந்தது அவளுக்கு. ஏதோ வெட்ட மட்டும் இல்லாமல் அதை உருப்படியாகச் செய்யவும் சொல்லி அனுப்பியிருக்கிறானே! நன்றி தெரிவிப்பது அவசியம் என்று எண்ணினாலும் உள்ளூர அவள் மனம் முரண்டியது.

எப்படியும் முதலில் அவன் பேச்சு மிகவும் அதிகப்படி அல்லவா? புத்தகத்தின் பக்கத்தைத் திருப்புவது போல ஓரிரு உதவிகளில் அது அடியோடு மறைந்து போகுமா? நேற்று இற்றுவிடும் போலக் கை வலித்தது, இந்தக் கிராமத்துப் பணக்கார சுகவாசிக்கு என்ன தெரியும்?

ஆனால், அது என்ன “ராசா”? ஆட்டோ ஓட்டியும் அது போல ஏதோ சொன்னான்!

ஜீப்பை சாலை ஓரமாக நிறுத்திவிட்டு புவனபூபதி அவர்களது வீடு நோக்கி வந்தான்..

அறிமுகத்தின் அறிகுறியாக வாணியை நோக்கித் தலையசைத்துவிட்டு மரம் வெட்டினவர்களிடம் பேசினான் அவன்.

வெளியே காட்டி, உள்ளே காட்டி அவர்கள் சொன்ன விவரம் திருப்தி அளித்தது போலும்.

அதற்குள் குப்பை வண்டியும் வந்துவிடப் பணியாட்கள் எல்லோருமாகக் குப்பையை வண்டியில் ஏற்றுவதில் முனைய, அந்தப் புவனபூபதி  வாணியிடம் திரும்பினான்.

“தங்கை எப்படி இருக்கிறாள்? காய்ச்சல் குறைந்துவிட்டதா?” என்று பானுமதி பற்றி விசாரித்தான்.

முதல்நாள் நட்ட நடு இரவில் மருந்து வாங்க உதவி செய்தவன். இந்த நலம் விசாரிப்பு இயல்பானதுதான். ஆனால் வாணிக்கு ஏனோ உள்ளூர எரிச்சல் உண்டாயிற்று.

என்னமோ பெரிய மகாராஜா தர்பார் நடத்தும்போது, “மந்திரி நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி பொழிகிறதா” கேட்கிற மாதிரி இருக்கிறதே என்று புகைந்தாள்.

மாத்திரையைக் கொடுத்தால் ஜுரம் குறையத்தானே செய்யும்? இதைக் கேட்க வேறு வேண்டுமாக்கும் என்று உள்ளூரப் பொருமியபடி “ஆமாம்.” என்று சுருக்கமாகப் பதிலிறுத்தாள் அவள்.

மின்னலாய்ப் பாய்ந்த ஒரு கூர் பார்வையின் பின், “வெட்டுக் கூலி அதிகம் என்று தோன்றுகிறதோ?” என்று கேட்டான் அவன்.

எரிச்சலைக் கண்டுகொண்டானே என்று இருந்தபோதும், தன் பிழையை அவன் உணரவே இல்லையே என்று வாணி எண்ணினாள்.

அவனைச் சுற்றி உள்ள எல்லோரும் “ஆமாம்” போட்டுப் பழக்கமாயிருக்கும்! ஆனால் வாணி அவர்களில் ஒருத்தி அல்லவே!

தன்னையறியாமல் லேசாகத் தலையைச் சிலுப்பி, “நேற்றுக் கேட்டபோது, ஆள் அனுப்ப முடியாது என்றீர்கள்?” என்றாள் கடுப்புடனேயே.

அசராமல், “ஆனால் நீ பஞ்சாயத்து ஆட்களை அல்லவா கேட்டாய்! தனியாரிடம் வேலை செய்து அதற்குப் பணம் வாங்கிப் பழகிவிட்டால், அவர்களுக்கு உரிய வழக்கமான வேலையை அந்தப் பணியாட்கள் எப்படிச் செய்வார்கள்? கைமேல் உடனே பணம் கிடைக்கும்போது, ஏதாவது பொய்க்காரணம் சொல்லி அந்த வேலைக்கு மட்டம் போடுவது பழகிவிடாதா?” என்று அவன் கேட்டபோது அவளால்தான் ஒன்றும் பேச முடியாது போயிற்று.

சமாளித்து, “ஆனால் இப்படி ஆட்கள் கிடைப்பார்கள் என்று சொல்லியிருக்கலாமே?” என்றாள் அவள்.

அவனது கண்கள் சிரித்தன. “எங்கே? அதுதான் நான் பேசி முடிக்கு

முன்பே கிளம்பிவிட்டாயே! ஓட்டத்தில் பிடி உஷாவாக அல்லவா இருந்தாய்! கொண்டு வந்த பையைக் கூட விட்டுவிட்டு ஓடினாயே!" என்றபோது அவனது குரலிலுமே சிரிப்புத் தெரிந்தது. "அந்ந் . . த ஓட்டம் நம்மால் முடியாதும்மா!"

முகம் சிவந்தபோதும் அவளும் விடவில்லை. "அதற்காக? பட்டணத்து சொகுசுசுந்தரி என்றால் ஆத்திரம் வராதா?" என்றாள் அவள்.

அவன் முகம் மாறியது. இப்போது "அதற்காக?" என்று கேட்டது அவன். "மரத்தின்மேல் ஏறி வெட்டத் தொடங்கி விடுவாயா? கையெல்லாம் பொத்துப்போய் விடாது?" என்றவன் அவள் எதிர்பார்க்குமுன் அவளது கையைப் பற்றித் திருப்பிப் பார்த்தான்.

சிவந்திருந்த உள்ளங்கையை வருடி, "பார், எப்படிச் சிவந்திருக்கிறது? எண்ணை கிரீம் ஏதாவது தடவினாயா? அல்லது அதுவுமில்லையா?" என்று, என்னவோ எல்லாம் அவளது குற்றம் போலச் சிறு கோபத்துடன் வினவினான்.

என்ன இவன்? ஒரு நாளில் எத்தனை அவதாரம் எடுப்பான்? ஒவ்வொரு வேளையும் ஒவ்வொரு விதமாகப் பேசிக்கொண்டு . . .

எதிர்பாராமல் கையைப் பற்றிய அவனது வருடலின் மென்மை வேறு அறியாத விதமாக வாணியைக் குழப்பியது.

கையை உருவ முயன்றபடி, "விடுங்கள். பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்?" என்றாள் அடிக் குரலில்.

கையை விடாமலே "தப்பாக எதுவும் நினைக்க மாட்டார்கள். உனக்காக வேண்டுமானால் . . " என்றவன் வெளியே பார்த்துச் "சின்னா . ." என்று அழைத்தான். "ஜீப்பில் முதலுதவிப் பெட்டி இருக்கிறது பார். அதை எடுத்துவா. " என்று பணித்தான்.

எதற்கு, ஏன் என்ற கேள்வியே இல்லாமல் மரம் வெட்டியவர்களில் ஒருவன் போய் முதலுதவிப் பெட்டியை எடுத்து வந்து கொடுத்தான்.

"திற." என்று அதில் இருந்த ஒரு ட்யூபை எடுத்துப் பிதுக்கி அவளது உள்ளங்கையில் தேய்த்துவிட்டு, "பெட்டியை முன்போல வைத்துவிட்டுக் கிளம்புங்கள். வேலை முடிந்துவிட்டது போல இருக்கிறதே." என்றான்.

"சரீங்கய்யா." என்று சென்றான் அவன்.

அவர்கள் எல்லோரும் செல்வதைப் பார்த்தபடி, "போதுமா?" என்று

கேட்டான் புவனபூபதி.

மருந்து போட்டு விட்டதால், அவள் கையை அவன் பிடித்ததை யாரும் தவறாக எண்ண மாட்டார்களாம்.

ஆத்திரத்துடன் முறைத்து, “ஆனால் இதில் எதுவுமே எதற்குமே தேவையில்லை. என்னைப் பார்த்துக்கொள்ள எனக்குத் தெரியும். “ என்றாள் அவள்.

“அதுதான் கையைப் பார்த்தாலே தெரிகிறதே! உன் தங்கை எப்படி? அவளும் உன்னைப் போலத்தானா?”

வீட்டுக்குள் வரப் போகிறானா? அவள் வளர்ந்த முறைக்கு இது சரியில்லையே!

அவசரமாக அவனை மறித்து நின்று, “இரவெல்லாம் நல்ல காய்ச்சல் அவளுக்கு. தூங்கட்டும் என்று விட்டுவிட்டேன்.” என்று அவள் சொல்லும்போதே, “அக்கா . .” என்று அழைத்தவாறு பானுமதி வாயில்புறம் வந்தாள்.

இவள் வேறு! பேச்சுக் குரலில் தூக்கம் கலைந்துவிட்டாலும் சும்மா உள்ளேயே இருந்திருக்கலாமே என்றிருந்தது வாணிக்கு.

புன்னகையை அடக்கியபடி வாணியைத் தாண்டி முன்னே வந்தான் புவனன். “ஹல்லோ, எப்படி இருக்கிறாய்? இரவில் மருந்தோடு நாங்கள் வந்தது, ஜுரத்தில் உனக்குத் தெரிந்திராது என்று நினைக்கிறேன். நான் இந்தப் பக்கம் கொஞ்சம் பெரிய ஆள். இது செல்ஃப் டப்பா இல்லை. சரிபார்த்துத் தெரிந்துகொள்ளக் கூடிய நிஜம்!” . . “ என்று தன்னைத்தானே ஒழுங்காக அறிமுகம் செய்துகொண்டான்.

அவனது இலகுவான பாணியில் பானுவின் முகமும் மலர்ந்தது.

ஆனாலும் சிறு குழப்பத்துடன் நோக்கி, “அன்றைக்கு ரொம்பக் கோபமாய் . . . உங்கள் இடத்தில் குப்பையைப் பார்த்ததும் . . வந்து . .அப்படிக் கோபம் வருவது இயல்புதான் இல்லையா? அதற்கு மீண்டும் சாரி சார். இஇன்று எழுந்து மாத்திரை அட்டையைப் பார்த்ததும் இது எப்படி வந்தது என்று குழப்பமாக இருந்தது. நீங்கள்தான் வாங்கி வந்தீர்களா சார்? ரொம்பத் தாங்க்ஸ்!”என்றாள் சின்னவள்.

வாணியை ஒரு தரம் பார்த்துவிட்டு, “அவ்வளவு நன்றிக்கு நான் தகுதியானவன் அல்லம்மா. என் உதவியெல்லாம் ராமருக்குப் பாலம் கட்ட அணில் உதவிய மாதிரிதான். என்னால் உனக்குக் கொஞ்சம் சீக்கிரமாக மருந்து கிடைத்தது. அவ்வளவே. ஆனால் திடீரென்று என்ன காய்ச்சல்? இந்தப் பக்கம் தொற்று நோய் எதுவும் கிடையாதே. “ என்று

புவனபூபதி விசாரித்தான்.

"அந்த மாதிரி இல்லை சார். சும்மாவே நான் கொஞ்சம் நோஞ்சான். வீடு அடுக்குவதில் ரொம்ப அலுத்துவிட்டேன் போல. இந்தப் பஞ்சாயத்து உத்திரவால் நேற்று வேறு மரம் வேறு வெட்டி . . " என்று வெளியே பார்த்தவள் அதிசயித்தாள்.

"அக்கா, நேற்று இழுத்துப்போட்ட குப்பை ஒன்றும் காணோமே! பழசையும் . . .என்னக்கா? எப்படி? " என்று கண்களை விரித்துக் கேட்டாள்.

அவனை இன்னமும் அதிகமாக உயர்த்திக் காட்டும் எதையும் சொல்ல மனமற்று வாணி தயங்குகையில், அவன் பேசினான். "இன்று குப்பை வண்டி இந்தப் பக்கம் வருகிற நாள். வேலை கேட்டு வந்த மரம் வெட்டுகிறவர்களைக் கணக்குப்பிள்ளை இங்கே அனுப்பியிருக்கிறார்." என்று சுருக்கமாக விளக்கினான்.

என்ன பெரிய தன்னடக்கம்? நான்தான் அனுப்பி வைத்தேன் என்று தம்பட்டம் அடிக்க வேண்டியதுதானே? பீற்றுவது ஒன்றும் புதிதில்லையே!

வாணி கேட்பாளோ என்று ஒரு கணம் பொறுத்திருந்துவிட்டு, "ஒரு கப் காஃபி குடிக்கிறீர்களா சார்?" என்று தானே கேட்டாள் பானு.

"ஐயோ வேண்டாம்மா. அது வேறு வேலை செய்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. பேசாமல் ஓய்வு எடு. உடம்பு சீக்கிரம் தேறும். "

"மாத்திரை போட்டு நன்றாகத் தூங்கியதால் இப்போது எனக்கு ஒன்றுமே இல்லை சார். அத்தோடு அக்காவே நிறைய காஃபி போட்டு ஃப்ளாஸ்கில் வைத்திருப்பதால் எனக்கு அது பெரிய வேலையும் இல்லை. உட்காருங்கள். ஆனால் பவுடர் பால்தான் அக்கா. வேறு பால் இன்னமும் கிடைக்கவில்லை." என்றாள் பானு.

"தமிழ்நாட்டு விருந்துபசாரம். மறுக்க மனம் வரவில்லை." என்றவன் வீட்டினுள் செல்லாமல் வெளி வராண்டாவிலேயே ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

பானு காஃபி கப்புகளுடன் வந்துவிட சற்று நேரம் இருந்து குடித்துவிட்டே சென்றான் அவன். பவுடர் பாலில் இவ்வளவு சுவையான காஃபி யாராலும் தயாரிக்க முடியாதாம்!

இந்த ஐசுக்கெல்லாம் வாணி உருக மாட்டாள் என்று இவனுக்கு என்ன தெரியும்?

அவன் சென்றதும், “என்னடி, யாரோ ஒருவர். உட்கார வைத்து உபசாரம் செய்கிறாயே.” என்று தங்கையுடம் குறைப்பட்டாள்.

“யாரோவா? மனிதர் இங்கே முக்கியமானவர் என்று தெரிகிறது. வீணாக விரோதித்துக் கொள்வானேன்? பக்கத்து இடம் வேறு அவருடையது! பஞ்சாயத்துத் தலையும் அவர்தான் என்றாய். குப்பை எடுக்கும் வண்டி கூட அவரது கட்டுப்பாட்டில் இருக்கும்போது நல்லுறவோடேயே இருக்கலாமே! எப்போதும் நீ சொல்வதுதான். இன்றைக்கு என்னமோ . . .அக்கா, உனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே? நேற்று உனக்குச் செம வேலையில்லை?” என்று கவலையுடன் தமக்கையின் அருகில் வந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

என்னதான் பெரிய ஆள் என்றாலும் சொகுசுசுந்தரிகள் எனலாமா? வந்ததும் வராததுமாகத் திரும்பிப் போ என்றுதான் சொல்லலாமா? நேரில் கேளாததால் பானுவுக்கு அதன் தாக்கம் முழுதாக இல்லை போலும்!

அலுப்பான சிரிப்புடன் தங்கையின் கையை அகற்றியபடி, “ஏய் சும்மா இரடி. எனக்கு ஒன்றுமில்லை. நீதான் பேசாமல் படுத்து இன்று முழுவதும் ஓய்வு எடுக்க வேண்டியவள். “ என்றாள் பெரியவள். “நேற்று இரவில் என்ன காய்ச்சல் தெரியுமா? இன்று காய்ச்சல் இறங்கி விட்டதால் இஷ்டம் போல ஆடாதே. போ, போய்ப் படு. வெறும் ரசம் சாதம் வைத்துவிட்டு நானும் என் வேலையைப் பார்க்கப் போகிறேன்.” என்று சற்று அதட்டலாக உரைத்தபடிக் காலிக் கப்புகளை எடுத்துக்கொண்டு உள்ளே நடந்தாள்.

ஓர் ஆர்வத்தில் வந்து நின்றபோதும், இரவு அடித்த காய்ச்சலின் களைப்பு மெல்லத் தலை தூக்க, பானுவும் பணிந்து போனாள். கதவைச் சாத்திக் கொண்டு மூத்தவளைப் பின் தொடர்ந்து உள்ளே வந்தவள் பேசாமல் படுத்துவிட்டாள்.

எளிமையான சமையலை முடித்துவிட்டு நிம்மதியாக வேலையில் இறங்கலாம் என்று வாணி பார்த்தால் முதல் இடையூறாகப் பஞ்சாயத்துக் கணக்குப் பிள்ளை வந்து கூப்பிட்டார்.

அந்தப் பக்கம் பத்திரிகை, பால் வினியோகம் செய்கிறவர்களைக் கூட்டி வந்திருந்தார். சற்றுப் பொறுத்து, சில நாட்டுக் காய்கறிகளோடு வடிவு என்ற பெண் வந்து நின்றாள். “ராசா அனுப்பிச்சாகம்மா. காய்ங்களைக் கொடுத்திட்டு, சுற்றுவேலை செய்திட்டு வரச் சொன்னாக.” என்றாள்.

வாழ்க்கையைச் சற்று இலகுவாகச் செல்ல வைக்கும் சகாயங்கள்.

என்ன பாடு படுத்தினாலும் இவர்கள் இங்கேதான் இருக்கப் போகிறார்கள்., திரும்பிப் போய்விட மாட்டார்கள் என்று தெளிவாகிவிட்டது போல. சும்மாச் சும்மா வந்து தொல்லை தருவாளோ என்று அதைத் தடுப்பதற்காகச் செய்யப் படும் செயல்களோ?

எப்படியும், சற்று சிரமப் பட்டேனும் அவளாகவே செய்துகொள்ளக் கூடிய ஏற்பாடுகளே. என்னவோ பெருந்தன்மையோடு அவனே செய்தமாதிரி மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்ள நினைத்தானோ?

அப்படித்தான் இருக்கும் என்று அலட்சியமாக எண்ணும்போதே ஒன்று இடித்தது. முன் தினம் இரவில் அவன் செய்த உதவி? அது பெரிதல்லவா? அதைப் பெரிதாகப் பேசவுமில்லை!

மனிதன்தானே? அபூர்வமாக நல்ல குணமும் எட்டிப் பார்த்திருக்கலாம்!

பிடிவாதமாகப் புவனபூபதியைப் பற்றிய சிந்தனையை ஒதுக்கி, காய்களுக்கு விலை என்ன என்று வடிவை வினவினாள் அவள்.

வியப்பாய் நோக்கிவிட்டு வடிவு யோசித்தாள். “அம்மா, இங்க எல்லா வீட்டுக்கும் காய் வெல எடைக்குப் பத்து ரூபாதான். எடையின்னா ஒன்னரைக் கிலோ மாதிரி இருக்கும். . . இதுக்கும் பத்து ரூபாவே கொடுங்கம்மா.”

“ஆனால் அது ரொம்பக் குறைவில்லை? கட்டுப்படி ஆகுமா?” என்று ஓய்வாகச் சரிந்திருந்த பானுமதி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

வடிவின் முகம் பெருமையால் பூரித்தது. “எங்க ராசா சும்மாவே குடுப்பாக. ஆனா காசுக்கு வாங்கினாத்தான் கருத்தா செலவு பண்ணுவாக, இல்லாட்டா அருமை தெரியாமப் பொருளை வீணாக்கி விடுவாகன்னுதான் அவுக பணம் வாங்குறதே!” என்று புகழாரம் தொடுத்தாள்.

“சரிசரி. இந்தா.” என்று பத்து ரூபாயை எடுத்துக் கொடுத்துவிட்டு, “இன்று எல்லா வேலையும் முடிந்துவிட்டது. நாளைக்கு . .ஒரு . .ஓர் எட்டு மணிக்கு வா. அந்த நேரம் உன்னால் வர முடியும்தானே?” என்று வாணி விசாரித்தாள்.

“வாரேனம்மா. என்ன? வயக்காட்டு வேலைதானே? இங்க முடிச்சிட்டுப் போய்ச் செய்யுறேன்.” என்று இலகுவாகக் கூறினாள் வடிவு.

வயக்காட்டு வேலை என்றால், அந்த புவனனின் பண்ணை வேலையா? தப்பு செய்தால் ரொம்பக் கோபப்படுவான் என்று ஆட்டோ ஓட்டி சொன்னாரே, இவள் தாமதமாகப் போனால் கோபத்தில் வேலையை விட்டு நீக்கிவிட்டால் என்ன செய்வது?

எத்தனையோ கேள்விகள் தோன்றியபோதும், எதையும் கேட்டுத் தெரிந்துகொள்ள வாணிக்கு விருப்பமில்லை. அதுவும் பானு முன்னிலையில் ஒன்றுமே கூடாது. அப்புறம் விஷயம் தெளிவாகும்வரை அவள் விடவே மாட்டாள்.

அத்தோடு வாணிதான் இதையெல்லாம் யோசித்தாள், விசாரித்தாள் என்று அந்தப் புவனபூபதியிடமே வாயை விட்டாலும் விடுவாள். அது மட்டும் கூடவே கூடாது!

காலையில் நடைப்பயிற்சியைத் தொடங்கிய வாணி, “நலம்” பண்ணையின் ஒற்றையடிப் பாதைகளுக்கு எதிர்த் திசையில் நடக்கத் தொடங்கினாள்.

ஒரு கிளை வழி கண்ணில் பட அதன் வழியே அன்று கூடுதலாகக் கொஞ்ச தூரம் நடந்தாள். இன்னும் கொஞ்சம் பழகிவிட்டால் பாட்டுக் கேட்டுக்கொண்டே நடக்கலாம். இப்போது சுற்றுப்புறத்தில் முழுக் கவனம் வைக்க வேண்டும்.

திரும்ப வேண்டியதுதான் என்று நினைத்துச் சுற்றிலும் ஒரு தரம் பார்வையால் அலசியவள் சற்றுத் திகைத்தாள். அடுத்திருந்த மரம் செடிகளுக்கிடையே இருந்து வந்த அந்தப் பெரிய மாடு அவளை நோக்கித்தான் வருகிறதா?

வேகமாகவும் வருகிறதே!

மாடு தன் வழியே போகிறதா இல்லையா என்று நின்று ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்க முடியாது. மாட்டின் வேகத்தை மீறிச் சாலையில் ஓடித் தப்பிக்கவும் இயலாது.

அதற்குள் மாடு கொம்புகளை ஆட்டிக்கொண்டு அவளை நெருங்கிவிட, நெஞ்சு பதைக்க அந்த வழியின் ஓரத்தில் இருந்த பெரிய மரத்தின் பின்னே ஒதுங்கி, மாட்டின் பார்வையில் இருந்து தப்ப முயன்றாள். நல்லவேளை! எதற்காகவும் இந்த மரங்களை யாரும் வெட்டிச் சாய்த்துவிடவில்லை என்று எண்ணியபடி மறைந்து நின்றாள்.

ஆனால் அந்தப் பொல்லாத மாடு, அப்படி ஒன்றும் அவளை விட்டுவிடுவதாக இல்லை என்பது விரைவிலேயே வாணிக்குப் புரிந்தது. ஏனெனில் மரத்தைச் சுற்றிக்கொண்டு அவளைத் தேடி வந்தது அது!

குறுக்கே நீண்டிருந்த அதன் உருவத்தால் மாடு சட்டென வளைந்து நெளிந்து வந்து அவளை வந்து முட்டிவிட முடியாது என்பது வாணிக்குப் புரிந்தது. ஆனால் எவ்வளவு நேரம் மாட்டிடமிருந்து தப்ப இப்படி மரத்தைச் சுற்றிக் கொண்டிருக்க முடியும்?

கொஞ்சம் அவகாசம் கிடைத்தால் மரத்திலாவது ஏறிக் கொள்ளலாம். அதற்கு நேரமில்லை! அத்தோடு பற்றி ஏற, அடி மரத்தில் கிளைகளும் இல்லை. துணிந்து சாலையில் இறங்கி ஓடவும் முடியாது!

அந்த நேரத்தில் சாலையில் சென்ற ஓரிரு வாகனங்கள் கூட முடிந்த வரை ஒதுங்கியே சென்றார்களே தவிர உதவ வரவில்லை. மாட்டினுடைய சைஸ் அப்படி!

வேறு எதையும் செய்ய முடியாத தவிப்புடன் மாட்டுக்குப் பயந்து அவள் மரத்தைச் சுற்றிக்கொண்டு இருந்தபோது பலமாக ஹார்ன் அடித்தபடி ஒரு வாகனம் அருகே வந்து நிற்க, மாடு பயந்து எதிர்த் திசையில் ஓடிச் சென்றது.

அப்பாடி என்று பெரிய பெரிய மூச்சுகளுடன் வாணி தன் ஆபத்பாந்தவனைப் பார்த்தால், வந்தவன் அந்தப் பிரதேசத்துக் காவல் தெய்வம் புவனபூபதியேதான்.

கடவுளே! இவனிடமிருந்து விடுதலையே இல்லையா என்று பொருமியது அவளது மனம்! ஆனால் காப்பாற்றி இருக்கிறானே! “வவந்து ரொம்பத் தாங்க்ஸ்!” என்றாள் முணுமுணுப்பாக.

“ஏறிக்கொள்.” என்றவனிடம் மறுக்காமல் ஜீப்பில் ஏறிக் கொண்டாள்.

நன்றியுடன்தான். மாட்டிடம் பயமும் மரத்தைச் சுற்றி ஓடியதுமாகக் கால்கள் வெடவெடத்துப் போயிருந்தன அவளுக்கு.

வண்டியைக் கிளப்பியபடி புவனபூபதி கேட்டான். “ஏன் இந்தப் பக்கம் வந்தாய்? இது கோயில் மாடு மேய்கிற இடம்.”

“கோயில் மாடு எஎன்றால்? திருவிழா நடக்கிறபோது பலி கொடுத்துவிடுவார்களா?” என்று அதிர்ந்து போய்க் கேட்டாள் அவள்.

“இல்லை. இது வேறு காரணத்துக்காக வளர்ப்பது. ஆனால் பழகியவர்கள் தவிர யாரும் இங்கே வரமாட்டார்கள்.” என்றவன் ஓரக் கண்ணால் அவளைப் பார்த்து, “ஆனால் உன் பாதுகாப்புக் கலைகள் மனிதர்களை மிரட்ட மட்டும்தானா? மாட்டோடு கிடையாதா?” என்று கட்டுப்படுத்திய சிரிப்பில் உதட்டோரம் துடிக்க விசாரித்தான்.

மாட்டோடு! குங்ஃபூ? கராத்தே? அவள் எதற்காக இப்படி நிற்கிறாள் என்றே தெரியாமல் வந்து முட்டித் தள்ளிவிட்டு மாடு அது பாட்டில் போய்விடாதா?

கற்பனை செய்து பார்க்கையில் வாணிக்கே சிரிப்பு வரக் கலகலவென்று நகைத்தாள் அவள். அவனும் சேர்ந்து சிரிக்க, ஜோடிக் குரல்களின் சிரிப்பு அவளுக்கு சங்கீதமாக ஒலித்தது!

சிரித்து முடிந்த பிறகும் பேச்சு தொடர்ந்தது.

“நல்லவேளை! மாட்டைப் பார்த்ததும் மிரண்டு சாலையில் ஓட்டம் பிடிக்காமல் இருந்தாய். மாட்டின் வேகத்துக்கு ஓடுவது கடினம். அதனிடமிருந்து தப்புவதற்கு மரத்தைப் பயன்படுத்திக்கொண்ட விதம் நல்ல ஐடியா! “ என்று பாராட்டினான் அவன்.

பழக்கமற்ற அவனது பாராட்டு காதுகளில் விசித்திரமாக ஒலிக்க, சமாளித்துக்கொண்டு வாணி பதில் சொன்னாள். “நல்லவேளையாக அடி மரமும் பெரிதாக இருந்தது, எனக்கு மறைந்து நகர வசதியாக இருந்தது. நிறைய இடங்களில் சாலையை விரிவுபடுத்துவதாகச் சொல்லிப் பெரிய மரங்களை வெட்டி விடுகிறார்கள். என் நல்லகாலம் இங்கே அப்படி இல்லை!”

முகம் இறுக, “இங்கேயும் அந்த முயற்சி அவ்வப்போது நடப்பதுதான். இயன்றமட்டும் தடுத்துக் கொண்டிருக்கிறேன். நெடுஞ்சாலைப் பிரிவிலிருந்து எப்போது வந்து சத்தமில்லாமல் வெட்டிப் போட்டு விடுவார்களோ என்று அவ்வப்போது பயம்தான். “ என்றான் அவன்.

“காசை விட்டெறிந்தால் வாங்கிக்கொண்டு சும்மாப் போய்விட மாட்டார்களா?”

“அந்த அளவுக்கு இறங்க வேண்டாம் என்று எண்ணம். அதுதான் கண்காணிப்புக்கு வசதியாக . . அந்த ஆறு வீட்டினரும் சேர்ந்து எதிர்த்தால் மீறி வெட்டுவது கடினம். அங்கே வசிக்கும் எல்லோரும் எதிர்ப்பதாகப் பதிவு பண்ணிவிட்டுப் போய்விடுவார்கள்.” என்றான் அவன்.

ஓ . . அடுத்த ஐந்தும் பண்ணையைச் சேர்ந்தவை. அவர்கள் வீடு ஆறாவது. சாலைத் தொடக்கத்தில் வேறு இருக்கிறது!

முதலில் இருந்தே அவன் காட்டிய ஆத்திரம் ஒருவாறு புரிய ஓரக் கண்ணால் பார்த்து, “ஓட்டப் பந்தயத்தில் ஆமை முந்திவிட்டதாக்கும்!” என்றாள் அவள் சற்று இலகுவான குரலில்.

திரும்பி அவளைப் பார்த்துவிட்டு, “நிச்சயமாக ஆமை என்று சொல்லவே முடியாது! உவமை வேண்டுமானால் மயில் எனலாம்!” என்றான் அவனும் இலகுவாகவே.

பாராட்டுகள் வாணிக்குப் பழக்கமற்றவை அல்ல. எனினும், ஏனோ முகம் சிவந்து போயிற்று அவளுக்கு.

அவளது வீட்டருகே ஜீப்பை நிறுத்திவிட்டு, “நாளையில் இருந்து பண்ணைக்குள்ளேயே உன் நடைப் பயிற்சியைச் செய்.” என்றான் அவன்.

அவன் இயல்பாகச் சொன்னதுதான்.

ஆனால் ஜீப்பிலிருந்து இறங்கப் போனவள் கண்கள் பளிச்சிட, “அங்கே வந்தால் போலீசில் புகார் செய்வேன் என்று யாரோ சொன்னார்களே!” என்று கிண்டலாக நினைவூட்டினாள்.

லேசாகத் தோளைக் குலுக்கினான் புவனன். “என்ன செய்வது? எப்போது போய் என்ன ஆபத்தில் மாட்டிக் கொள்வாயோ என்று கவலையின்றி இருக்கலாமே!”

ஏதோ யோசித்தபடி வாணி மெல்ல இறங்கினாள்.

விடை கொடுக்குமுன் “பூபதி சார், நிறையப்பேர் உங்களை ராஜா என்று குறிப்பிடக் கேட்டுவிட்டேன். ஆனால் அவர்கள் பலகாலமாக இங்குள்ளவர்கள். ஆனால் எனக்கு நீங்கள் மகாராஜாவும் இல்லை. நான் உங்கள் பிரஜையும் இல்லை. என் நன்மை தீமைக்கு நானே பொறுப்பு! என்னைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். “ என்றாள் அமர்ந்த குரலில்.

அவன் ஒன்றும் பேசாமல் கேள்வியாய் நோக்கினான்.

லேசாக முகம் கன்றினாலும் அவள் விளக்கமளிக்கத் தயங்கவில்லை. “உயிர் காத்த உதவியைப் பெற்றுக்கொண்டு நன்றியில்லாமல் பேசுவது போல இருக்கிறதா? நான் சொல்வது . . இன்றைக்கு ஒரு ஆபத்தில் என்னைப் பார்த்தீர்கள், உதவினீர்கள் . இது மனித இயல்பு. முடிந்தால் நானும் செய்வதே! அன்றைக்கும் டார்ச் ஒளியைப் பார்த்துவிட்டு யார் என்னவென்று பார்க்க வந்திருப்பீர்கள். பார்த்ததும் உதவினீர்கள். ஆனால், எனக்காக யோசித்து நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம், சார். ஏனென்றால் எனக்கு என்ன தேவை என்று எனக்கு மட்டும்தான் நன்றாகத் தெரியும். என் மூளை சொல்கிறபடிதான் என்னால் நடக்கவும் முடியும்.” என்றாள் அவள் தெளிவாக.

காலையில் அவள் வழக்கமாக நடக்கிற எந்தத் திசையிலும்

காணோமே, கோயில்காளை சுற்றுகிற பக்கம் சென்றிருப்பாளோ என்று யோசித்து அங்கே வந்ததைப் பற்றிச் சொன்னால் இவளுக்கு எப்படி இருக்கும்?

நினைத்ததைச் சொல்லாமல், “ரொம்பவும் சுதந்திரவாதி போல!” என்றான் அவன்.

ஒப்புதலாகத் தலையாட்டி, “யாரையும் சார்ந்து வாழக் கூடாது என்பது என் அம்மாவின் கருத்து. அப்படி வாழ்ந்தால், நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, அவர்களது விருப்பத்தை மறுக்கத் தோன்றாது., வளைந்து கொடுப்பது பழக்கமாகிவிடும் என்பார்கள். நம்மை வழி நடத்திச் செல்லத்தானே நம் தலையில் கடவுள் மூளையை வைத்திருக்கிறார் என்பது அம்மாவின் கருத்து.” என்று விளக்கினாள் வாணி.

“மறுக்க முடியாத வாதம். அப்படியானால் நான் கிளம்புகிறேன்.” என்று ஜீப்பில் சாவியைத் திருப்பினான் அவன்.

உதவியை மறுத்து அவனை வருத்தப்படுத்தி விட்டாளோ?

ஜீப் சத்தத்துக்கு மேலாக, “பூபதி சார்!” என்று உரக்க அழைத்தாள் அவள்.

அவன் திரும்பிப் பார்க்கவும், “பண்ணைக்குள் நடக்க எப்போது வரலாம் என்று சொல்லாமல் கிளம்புகிறீர்களே!” என்று குருவியாய்த் தலையை சரித்து வினவினாள்.

சட்டென முறுவலித்து “எப்போது வேண்டுமானாலும். தடுக்க வேண்டாம் என்று செக்யூரிட்டிகளிடம் சொல்லி வைக்கிறேன்.” என்றுவிட்டுச் சென்றான் அவன்.

அப்படி! அவனது கோபம் மாறிவிட்டது!

மனம் லேசாகிவிட, உற்சாகத்தோடு வீட்டினுள் சென்றாள் அவள்.

# அத்தியாயம் - 8

மறுநாளில் இருந்து வாணியின் வாழ்வில் ஒரு புது அத்தியாயம் தொடங்கியது எனலாம்.

அந்தப் பகுதியே தாவரங்கள் அடர்ந்து ஓரளவு பசுமையாக இருந்தாலும் பண்ணைக்குள் எங்கே திரும்பினாலும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. பல்வேறு செடிகொடிகளின் பாத்திகளுக்கிடையே நடக்க, வண்டிகள் செல்லப் பாதைகளும் இருந்தன.

களையெடுக்க, உரம் மருந்து வைக்க என்று நிறையப் பேர் அப்போதே பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ரசனையோடு இங்குமங்கும் பார்த்தபடி வாணி சென்றுகொண்டிருக்கையில் திடுமென எங்கிருந்தோ வடிவு வந்து சேர்ந்தாள். “அம்மா, அந்தப் பக்கமா வாங்கம்மா. காய்ங்க பறிச்சு வைத்திருப்பாங்க. ஒங்களுக்கு வேண்டிய காய் எடுத்துக்கிடலாம்.” என்று அழைத்துச் சென்றாள்.

குவியல் குவியலாகக் கத்தரி வெண்டை மிளகாய் அவரை என்று காய்கள், பலவகைக் கிழங்குகள், கீரை வகைகளைப் பார்த்ததும் வாணியின் கண்கள் வியப்பினால் மலர்ந்தன.

“இதெல்லாம் மார்க்கெட்டுக்கு அனுப்பவில்லையா? இங்கேயே வைத்திருக்கிறார்களே!” என்று வடிவுடம் விசாரித்தாள்.

“மார்க்கெட்டுக்கு வெடிக்காலையிலேயே போயிரும்மா. இது நம்மூருக்காரகளுக்கு. சொன்னேனே, எடைக்குப் பத்து ரூபான்னு. என்ன வேணுமோ எடுங்கம்மா.” என்றாள் வடிவு.

அங்கே எடுத்து வைத்துக் கொண்டிருந்த சிலரைப் போல வாணியும் தனக்கு வேண்டியதை எடுத்து வைத்தாள்.

எடை போட்டுப் பையில் போட்டுக் கொடுத்தார்கள். பாலிதீன் பையல்ல. ஒரு பையே அடக்க விலை இரண்டு ரூபாய் இருக்கும். அதற்காக ஒருரூபாய் கணக்கில் சேர்த்தது சும்மா பெயருக்காகத்தான் வாணிக்குத் தோன்றியது.

ஒருவேளை பையையும் சும்மாக் கொடுத்தால் வீணாக்கி விடுவார்கள் என்று அந்த புவனபூபதியின் மூளை யோசித்துத் திட்டமிட்டிருக்கலாம்!

“வச்சிருங்கம்மா. நான் வேலைக்கி வரபோது கொண்டாரேன்.”

என்றாள் வடிவு.

“இல்லை வடிவு. நீ, உன்னதை வேறு தூக்கி வர வேண்டியிருக்கும். நானே கையோடு எடுத்துப் போய்விடுவேன்.” என்றாள் வாணி.

“அதுக்கில்லம்மா. நாந்தான் வரப் போறேனே, நீங்க வேறே எதுக்கு  தூக் . . “ என்று வடிவு சொல்லிக் கொண்டிருக்கும்போதே, “விட்டுவிடு வடிவு. அந்தம்மாவுக்கு அவர்கள் வேலையை அவர்களே செய்தால்தான் நிம்மதி.” என்று, பின்னிருந்து குரல் கேட்டது.

அவன்தான்., புவனபூபதி!

அன்று நடக்கக் கிளம்பும்போதே, அவனை அங்கே சந்திக்கக் கூடுமோ என்ற எதிர்பார்ப்பு வாணிக்கு இருந்தது. ஒரு விதத்தில் இது பிடித்தும், இன்னொரு வகையில் பிடிக்காமலும் உணர்ந்திருந்தாள் அவள்.

அன்னியர்களிடம் அதிகப் பழக்கம் கூடாது என்பது தாயின் போதனை. ஆனால், இவன் யாரோ ஒருவன் என்று சொல்ல முடியாது. ஆனால் . . .

மெல்லத் திரும்பி, “ஹாய் சார்!” என்றாள் வாணி.

பதிலாய்த் தலையசைத்துவிட்டு, “இங்கே வர முடியாத சில பேர் வீடுகளுக்கு, வடிவு  இப்படிக் காய் கொண்டு போய்க் கொடுப்பாள். பதிலாக ஏதோ பெற்றுக் கொள்வாள். நீயும் அது போலச் செய்யலாமே.” என்றான் அவன்.

வடிவு ஆர்வமாகப் பார்க்கவும் வாணியும் ஒப்பினாள்.

அன்று வேலைக்கு வந்தபோது வடிவு சொன்னாள். “காயைக் கொடுத்தாக்க எனக்கு ஒரு ரூபாக் கொடுப்பாங்க. சீட்டுப் போடுதேம்மா. புள்ளைய நல்ல படிப்புப் படிக்க வைக்கப் பணம் வேணுமாமே. இப்பவே சேர்க்கிறேம்மா.” என்று விளக்கம் சொன்னாள்.

வாணியின் மனம் எங்கே சென்றது. அவளுடைய தாயார் கூட மகள்களுக்காக இது போலெல்லாம் யோசித்துதான் அதற்கேற்றவாறு வாழ்ந்திருக்கிறாள். ஆனால் அன்னையின் ஆலோசனை மகள்களுக்காக. இந்தப் புவனன் மற்றவர்களுக்காக யோசிக்கிறானே!

இப்படிச் சிலபேர் இருப்பதால்தான் பொதுவான நல்ல விஷயங்களும் நடக்கின்றனவோ?

ஆனால் இப்படிப்பட்டவன் முதலில் அவளிடம் ஏன் அவ்வளவு கடுமையாக நடந்துகொண்டான்?

காரணமே இல்லாத கடுமை!

ஆனால் நல்லவைகளும் செய்திருக்கிறான்!

புவனபூபதியைப் பற்றி எந்த ஓர் அபிப்பிராயமும் உறுதியாகக் கொள்ள முடியாத நிலையிலேயே வாணியின் மனம் ஊசலாடிகக் கொண்டிருந்தது.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகவும் கூடவே பாதுகாப்பாகவும் இருக்கவே அன்றிலிருந்து அவனது பண்ணைக்குள்ளேயே நடப்பது வாணிக்குப் பழக்கமாயிற்று. திரும்பும்போது காய்களை எடுத்து வைத்தால் வடிவு கொண்டுவந்து தந்துவிடுவாள்.

சத்தான காய்கறிகளும் சுத்தமான காற்றுமாக சகோதரிகள் உற்சாகமாக உணர்ந்தனர்.

ஸ்கூட்டி வந்து சேர்ந்துவிட போக்குவரத்தும் எளிதாயிற்று. இடையூறற்று வாணியின் வேலையும் நடந்தது.

எண்ணி வந்த விதமாகவே எல்லாம் நடக்கலாயிற்று.

எனினும் காலை நடப்பதற்காகக் கிளம்பும்போது மட்டும் வாணியின் மனம் லேசாகப் படபடக்கும்.

இன்று புவனபூபதியைச் சந்திக்க நேருமா என்ற கேள்வியுடனேயே வீட்டை விட்டுக் கிளம்புவாள்.

தினமும் இல்லை என்றாலும் அவ்வப்போது புவனனும் அவளோடு சேர்ந்து நடப்பதுண்டு.

இடையில் காண நேரும் பலரை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான். ஒவ்வொருவரும் கவனிக்கும் பொறுப்புகளை அறிகையில், இப்படி ஒரு பண்ணையை உருவாக்கிப் பராமரிப்பது எவ்வளவு பெரிய பணி என்று அவளுக்கு ஓரளவு புரிந்தது.

அத பற்றி அவனிடம் சொன்னபோது, “எல்லாப் பணிகளுமே அப்படித்தான். ஆனால் அவரவர் பொறுப்புகளைச் சரியாகச் செய்யும்போது ஒன்றிலிருந்து ஒன்றாக மொத்தப் பணியுமே சிறப்பாக நிறைவேறிவிடும்.” என்றான் புவனன்.

வேறு ஏதாவது பேச்சும் நடக்கும்.

ஒருதரம் அவளும் தங்கையும் இங்கே வந்தது பற்றிப் புவனன் பேசினான்.

“பெரும் கூட்டமே வந்தார்களாமே! இந்தப் பக்கத்து அமைதியே கெட்டுவிடப் போகிறது என்று எல்லோரும் பயந்துவிட்டார்கள், தெரியுமா?” என்றான் அவன்.

“யார்யார்? அப்படிப் பயந்தவர்களைப் பற்றிக் கேட்டேன். பக்கத்து வீடுகளில்தான் யாருமே இல்லையே, மூட்டை கட்டி வந்து உங்களிடம் சொல்லும் அளவுக்கு யார் பயந்தார்களாம்?” என்று பதிலுக்குக் கேட்டாள் வாணி.

அதற்கு நேரடியாகப் பதில் தராமல், “உங்கள் சத்தம் வெகு தூரம் வரை கேட்டதாமே.” என்றான் அவன்.

“ஆனால் உங்களுக்குக் கேட்கவில்லை போல?”

“என்னதான் ஸ்பீக்கர் போட்டுக் கத்தினாலும், டெல்லி வரை கேட்பது கடினமில்லை?”

“ஆக, நீங்கள் டெல்லி சென்றிருந்தது பறை சாற்றப் பட்டுவிட்டது. ஆனால் யார் சொன்னார்கள் என்று இன்னமும் கூறவில்லையே!” என்று மீண்டும் கிண்டினாள் வாணி.

விரியத் தொடங்கிய உதடுகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு, லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன். “சத்தம் ஒருவர் காதில் மட்டும் விழவில்லையே. சும்மாவே இது அமைதியாக பிரதேசம். அதுவும் இரவில் சின்ன ஒலி கூட வெகுதூரம் கேட்கும்.” என்றான் புவனபூபதி.

அவனது பேச்சில் ஒரு வார்த்தையைப் பிடித்து, “ச் ச் சின்ன்ன ஒலிதானே? “ என்றாள் அவள்.

அவள் பேசாதது போலப் பாவித்து “சின்ன ஓசையே அப்படியென்றால் பலர் சேர்ந்து பாட்டும் ஆட்டமுமாகக் கூத்தடித்துக் கும்மாளம் போட்டால் ஊரின் அந்தக் கோடி வரை கேளாதிருக்குமா?” என்று  வினவினான் அவன்.

கும்மாளமா? கூத்தடித்தார்களா? இருக்கட்டுமே! என் வீட்டில் நான் என்ன செய்தாலும் அதை நீ என்ன கேட்பது என்றால் ரொம்பக் கடுமையாகத் தோன்றுமா?

சுள்ளென்று எதையும் சொல்லி விடக் கூடாது என்று வாயை இறுக மூடி, வாணி தன்னை அடக்கிக் கொள்ள  முயன்றாள்.

சிறு அமைதியின் பின், புவனனே பேசினான். “தினமும் இதே குதியாட்டமாக இருக்குமோ என்று எல்லோரும் அஞ்சிவிட்டார்களாம்.”

வாணி வாயைத் திறந்தாள். “இங்கே எல்லோருமே கிழ . . .வந்து

வயது ரொம்ப அதிகம் ஆனவர்களா?” என்று நாகரீகமாக மாற்றிக் கேட்டாள்.

“ஊர் என்று இருந்தால் கிழடுகட்டைகள் மட்டுமின்றி எல்லா வயதினரும் இருப்பார்கள்.” என்று, அவள் சொல்லாமல் மாற்றிப் பேசியதைச் சொல்லிவிட்டதே போலப் பாவித்துப் பதில் சொன்னான் அவன்.

முகம் அறியாத பெரியவர்களைக் கிழடுகள் என்பது நாகரீகம் அல்லவே!

முகக் கன்றலை அடக்கப் பெருவிரலை அழுந்த ஊன்ற வேண்டியிருந்தது அவளுக்கு.

முயற்சி செய்து தன்னை அடக்கி, “சென்னையில் குடியிருப்பில் கூடவே வளர்ந்த குடும்ப நண்பர்கள். புதிதாகக் குடியேறும்போது பொருட்களை அடுக்கிக் கொடுக்க வந்தார்கள். பெற்றோரே அனுப்பி வந்தவர்கள். முழு மூச்சாகச் செய்த வேலை! வேலை முடிந்ததும் வயதுக்கேற்றபடி ஆட்டபாட்டம் என்று சற்று உல்லாசமாகப் பொழுது போக்குவதில் என்ன தப்பு?  “ என்று அவனிடம் எடுத்துச் சொல்லிக் கேட்டாள் அவள்.

“சென்னையிலிருந்து இவ்வளவு தூரம் வந்து உதவுகிறவர்கள் உங்களை அங்கேயே பிடித்து வைக்காதது வியப்பாக இல்லை?”

“இல்லை!” என்றாள் அவள் சுள்ளென்று. “வரலட்சுமியுடைய பிள்ளைகள் சரியாகத்தான் செய்வார்கள்., நீங்களும் உடன் சென்று பயன்படுகிற மாதிரி பொருட்களை அடுக்கிக் கொடுத்துவிட்டு வாருங்கள் என்று அவர்களுடைய பெற்றோரே சொல்லி அனுப்பும்போது அதில் வியப்பென்ன? வரலட்சுமி என் தாயாரின் பெயர்.” என்று அவள் உரைத்த பிறகு அது போன்ற கேள்விகள் நின்றன.

“சென்னையில் எத்தனையோ வாய்ப்புகள்! அதை விட்டு இங்கே வருவானேன்?” என்றான் ஒருதினம்.

அதை உனக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று முகத்தில் அடித்தாற்போலச் சொல்ல வாணியின் வாய் துடித்தது.

ஆனால் உதவி செய்திருக்கிறானே! பெரிதாக இரண்டு தரம். நட்ட நடு இரவில் ஒரு தரம். அடுத்து மாட்டிடம் இருந்து உயிர் காத்திருக்கிறான்.

அத்தோடு, தங்கை சொல்வது போல, இவன்  இங்கே முக்கியமான

மனிதன். ஒரேயடியாக எதிர்ப்பதும் சரியில்லை.

எனவே உடனே பதில் கொடுக்காமல் பேசாமல் நடந்தாள்.

சில வினாடி அவகாசம் கொடுத்துவிட்டு அவனே தொடர்ந்தான். “என்ன? இவன் என்ன கேட்பது என்று இருக்கிறதோ? பஞ்சாயத்துத் தலைவன் என்கிற முறையில் பொதுவாக ஊர் மக்களின் சுக துக்கங்களைக் கேட்டுக் குறை தீர்க்க முயற்சிப்பது பழக்கமாகி விட்டது. பிரச்சினைகளின் அடிப்படை தெரிவதற்காக விசாரிப்பதும்தான். மற்றபடி நோண்டி மூக்கை நுழைப்பதற்காக அல்ல. விருப்பம் இல்லாவிட்டால் சொல்லத் தேவையும் இல்லை.” என்றான் இயல்பாகவே.

கொஞ்சம் ஒரு மாதிரியாகிவிட, “என் வேலைக்கு அமைதியும் தனிமையும் தேவை. என்றாள் அவள் சுருக்கமாக.

அவன் லேசாகத் திரும்பிப் பார்த்துச் சிரித்து “இப்போதைக்கு இதை ஒத்துக் கொள்கிறேன்” என்றான் இலகுவான குரலில்.

என்னவோ அவனது சிரிப்பில் அவளுக்கும் மனம் அமைதியாயிற்று.

இரண்டொரு சந்திப்புகளில் ஒதுக்கம் அகன்று அவளாகவே தன் வேலையைப் பற்றிக் கூறினாள்.

புவனபூபதியும் வாணியும் தினமும் சந்தித்தார்கள் என்று சொல்ல முடியாது. நாலு நாட்கள் இந்தப் பகுதியிலேயே சுற்றுகிறவன் திடுமெனக் காணாமல் போய்விடுவான்.

என்னடா? இவன் ஏன் வரவிலலை? உடம்பு கிடம்பு சரியில்லையோ என்று வாணி அடிக்கடி யோசிப்பாள். வடிவிடம் கேட்கலாமா என்று நினைப்பாள்.

ஆனால் , வாணி இப்படி விசாரித்தாள் என்று வடிவு அவனிடம் ஏதாவது பேச்சுவாக்கில் சொல்லிவிடக் கூடாதே!

அத்தோடு, அவளுக்கு அவன் யாரோ ஒருவன்., பொறுப்புகள் நிறைய உடையவன்., தினமும் வாணிக்குத் தரிசனம் கொடுத்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்?

ஒருவாறு புவனனுக்காகப் பார்வை சுழலாமல் அவள் சாதாரணமாக நடக்கத் தொடங்கும் நேரம் திடுமென அவன் குரல் காதில் கேட்டு மகிழ்ச்சியோடு அவளைத் திரும்பிப் பார்க்க வைக்கும்.

“என்ன, பழைய கதைகளில் வருமே அந்தர்த்தானம் என்று,

அதுபோலத் திடீர் திடீரென்று காணாமல் போய் விடுகிறீர்கள்?” என்று அவனையே ஒரு தரம் வாணி கேட்டாள்.

புன்னகை செய்து அவன் சொன்னான். “ஆர்கானிக் பண்ணை நடத்துவது சாதாரணமில்லை வாணி. எங்கே என்ன தப்பு நேர்ந்துவிடுமோ என்று கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டும். அந்தப் பக்கம் இன்னும் பெரிய இடம். அதனால் அங்கே முடித்துவிட்டு வர நாட்கள் அதிகம் ஆகும்” என்றான்.

அப்படி ஒரு தரம் அவன் ஒரு வாரம் கழித்துத் திரும்பி வந்து கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தபோதுதான், வாணி தன் பணியைப் பற்றிய விவரம் அவனிடம் கூறினாள்.

அவனுக்கு ஆச்சரியம்! “அடேயப்பா! ஒரு தொழிலையே கற்பனையில் உருவாக்கி விடுகிறாயே!” என்று வியந்தான்.

சிறு கூச்சத்தில் லேசாகக் கன்னம் சிவக்க, “அப்படி ஒரேயடியாகக் கற்பனையில் உருவாக்குவதில்லை, பூபதி சார். தொழிலைத் தொடங்குகிறவர்கள், தொழில் பற்றிச் சொல்லி, எதிர்பார்ப்பு இன்னின்ன மாதிரி என்று எல்லாம் நமக்குத் தெரிவித்து விடுவார்கள். அதற்கு உருவம் கொடுப்பது மட்டுமே என் பொறுப்பு.” என்றாள் அவள்.

“ஆனாலும் சிறப்பானதுதான்.” என்றான் அவன் பிடிவாதமாக.

அவள் தன்னடக்கமாக ஏதோ சொல்ல வாயெடுக்கவும், “நான் என்ன சொன்னாலும் மறுத்தாக வேண்டுமா? இது உனக்குப் பாராட்டும்மா! தாராளமாக ஏற்றுக் கொள்ளலாம்.” என்று எடுத்துச் சொன்னான் அவன்.

கண்ணில் சிரிப்பைக் காணவும், “அதுதானே கவலையே! ஆமாம் என்று ஒத்துக் கொண்டால் உடனே கர்வி என்று பட்டம் சூட்டி விட மாட்டீர்களா?” என்று அவள் சோகம் காட்ட இருவருக்குமே சிரிப்பு வந்தது.

முன்னொரு தரம் அவனது சிரிப்பு தந்த இதமான அமைதி நினைவு வர, ஓரக் கண்ணால் அவன் முகத்தைப் பார்த்த வாணி சற்றுத் திகைத்தாள்.

அவனது மனம் இங்கே இல்லையோ?

ஆனால் புவனன் ஆயிரம் வேலை பார்க்கிறவன். எந்த வேலை நினைவு வந்ததோ?

ஒருநாள் புவனபூபதியுடைய உறவினன் ஒருவனை வாணி

சந்தித்தாள்.

கொஞ்சம் புவனன் சாயல்தான். ஆனால் அங்கங்கே அடித்துப் பிடித்து நெளித்து வைத்தது போல இருந்தான் மனிதன்.

“என் சொந்தக்காரர். அண்ணன் முறை. என் தாத்தாவும், அண்ணனுடைய தாத்தாவும் உடன் பிறந்தவர்கள். அண்ணன் என் பணிகளில் கூடவே நின்று செய்கிறவர். சுந்தர ராஜா என்பது அண்ணனின் பெயர். ஆனால் எல்லோருக்குமே இவர் அண்ணன்தான். அண்ணா, இவர்கள் அந்த மூலை வீட்டை வாங்கிக் குடி வந்திருப்பவர்கள். பெயர் வாணி. ஏதாவது உதவி கேட்டால் செய்து கொடுங்கள். உனக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அண்ணனிடம் தாராளமாகச் சொல்லலாம்.” என்று அறிமுகம் செய்து வைத்தான் பூபதி.

தம்பியின் அறிமுகம் என்பதாலோ என்னவோ, “என்னம்மா, வீடு வசதியாக இருக்கிறதா? காற்று வெளிச்சம் நன்றாக வருகிறதா? என்ன வேண்டும் சொல்லு. உடனே செய்து தருகிறேன்.” என்றெல்லாம் ரொம்பக் கரிசனமாகக் கூறினான் அந்த சுந்தர ராஜா.

வீட்டை வசதி பாராமல் வாங்கியிருக்க மாட்டார்கள். அவன் விசாரித்த அந்தக் காற்றும், வெளிச்சமும் இயற்கையின் வரம். அதில் இந்த ஆள் செய்து தர என்ன இருக்கிறது?

மனிதன் கொஞ்சம் அலட்டல் கேஸ் போல என்று உள்ளூர நினைத்தபோதும் அதைக் காட்டிக் கொள்ளாமல், “இப்போதைக்குத் தேவை எதுவும் இல்லை, சுந்தரம் சார். ஆனால் கேட்டதற்கு நன்றி!” என்றாள் அவள்.

அவள் சொல்லி முடிக்குமுன் “சுந்தரராஜா” என்று இரு குரல்கள் ஒலித்தன.

அவளது விழிகள் வியப்பினால் விரியும்போதே, “அண்ணனுக்கு முழுப் பெயரையும் சொன்னால்தான் பிடிக்கும்.” என்றான் புவனபூபதி.

“எங்கள் குடும்பப் பெயரே அந்த ராஜாவில்தான் முடியும். அது போல உயந்த பரம்பரை. இவன்தான் வெளிநாட்டுப் படிப்பு மோகத்தில் தலைமுறைப் பெருமையை விட்டுவிட்டான்.” என்றான் மற்றவன்.

எல்லோரும் புவனனை ராசையா என்றது வாணிக்கு இப்போது புரிந்தது. ஆனால் இப்போது எல்லோரும் இந்நாட்டு மன்னர்களே என்பது இந்த சுந்தரராஜாவுக்குத் தெரியவில்லை போல! சுதந்திரம் கிடைத்து இத்தனை ஆண்டுகள் ஆன பிறகும் ராஜாவாவது? அரச பரம்பரையாவது?

உள்ளூரப் புவனபூபதி மேல் மதிப்புக் கூடியது அவளுக்கு. காலத்துக்கு ஏற்ப மாறியிருக்கிறானே!

பானுமதி கல்லூரிக்குப் போய்வரத் தொடங்கினாள். மேல்படிப்பு என்பதால் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் வருகை சமயத்து வசதிப்படி பயிலும் நேரம் முன்னே பின்னே இருந்தது. நல்லவேளையாக ஸ்கூட்டி வந்துவிட்டது, போகவர அவளுக்கு வசதியாக இருந்தது.

“ஏதேனும் உதவி செய்யலாம் என்று வந்தேன்.” என்று சொல்லிக்கொண்டு சுந்தரராஜா ஒருநாள் காலையில் வீட்டுக்கு வந்தான்.

தங்கையை அறிமுகப்படுத்திவிட்டு, “என்ன உதவி?” என்று சற்று வியப்புடன் வாணி கேட்கவும் ஒரு கணம் விழித்தான் அவன்.

உடனேயே, “அது . . தம்பி சொல்லிக் கொண்டிருந்தான். பாவம், இரண்டு பெண்களும் தனியாக இருக்கிறார்கள். எப்போதாவது அவகாசம் கிடைத்தால் போய்ப் பார்த்து ஏதாவது செய்ய வேண்டும் என்றான். அதுதான் வந்தேன். . .” என்று இழுத்தான்.

அவன் பொய் சொல்லுகிறான் என்று வாணி நினைத்தாள்.

இரு பெண்களுமாகத் தனியே இருப்பதால் ஆண்களின் வரவை அவர்கள் ஊக்குவிப்பது கிடையாது என்று புவனபூபதிக்குத் தெரியும். அதை மதித்து அவன் வீடு தேடி வருவதும் இல்லை. பெரும்பாலும் காலை நடையின்போது சந்திப்பதுதான்.

அப்படி இருக்கப் “போய்ப் பார்த்து உதவுமாறு” அவன் சொல்லியிருக்க வழியில்லை.

தேவையற்று ஏன் இந்தப் பொய்?

ஆனால் புவனபூபதியுடைய உறவினனிடம் முகத்தில் அடிப்பது போல எதையும் சொல்லப் பிடிக்காமல், “ரொம்ப நன்றி சார். இப்போதைக்கு எந்த உதவியும் தேவையில்லை. அவசியம் ஏற்பட்டால் கேட்கிறோம். தப்பாக எண்ண வேண்டாம். நாங்கள் கிளம்பிக் கொண்டிருக்கிறோம். . . “ என்று புன்னகையுடனேயே இழுத்தாள் வாணி.

“ஆமாம் சார். கல்லூரிக்குத் தாமதம் ஆகிவிடும்.” என்றாள் பானுமதியும் சேர்ந்து.

வேறு வழியின்றி சுந்தரராஜா கிளம்புகையில், தன் காய்கறி பட்டுவாடாவை முடித்துக்கொண்டு வடிவு வந்து சேர்ந்தாள்.

வேலைக்கு வந்தாள் என்று அறிந்ததும், “என்ன இவ்வளவு தாமதமாக வேலைக்கு வருகிறாய். பாவம், கல்லூரிக்கு நேரமாகிறது சின்னவள் தவிக்கிறாள்! இரண்டு பெண்கள்தானே, கேட்பதற்கு ஆளில்லை என்று நினைத்தாயா? தொலைத்துக் கட்டி விடுவேன்! “ என்று எகிறிக் குதித்தான்.

தாங்கள்தான் இந்த நேரத்துக்கு வடிவை வரச் சொல்லியிருப்பதாக வாணி கூறியதை அவன் காதிலேயே வாங்கிக் கொள்வதாக இல்லை. கடைசியாக அவனுக்கு மேல் உரக்கக் கிறீச்சிட்டு பானு அலறித்தான் அந்த சுந்தரனை நிறுத்த வேண்டியிருந்தது.

எதற்காக இந்த டிராமா?

கடைசியாக விஷயம் வெளியே வந்தது.

“சின்னப் பெண்கள் நீங்கள். இப்படித் தன்னந்தனியே காட்டுக்குள் வசிப்பது போல இந்தக் கிராமத்தில் வந்து கஷ்டப் படுவானேன்? பேசாமல் பட்டணத்துக்கே திரும்பிப் போய் விடுங்கள்” என்று புத்திமதி ஒன்று கேளாமலே இலவசமாகக் கிடைத்தது.

வாணியை ஏதோ உறுத்தியது. இவனுடைய ரா . .ஜ பரம்பரைத் தம்பி முதலில் சொன்னதும் இதைத்தானே? இப்போது இன்னொருவன் மூலமாய்ச் சொல்லி அனுப்புகிறானா?

என்னவோ வாணியின் மனம் அதை ஒப்ப மறுத்தது.

முதலில் புவனனும் அவர்களைத் திரும்பிப் போகச் சொன்னது மெய்யே. ஆனால் அது, இங்குள்ள அமைதியைக் கெடுத்து விடுவார்களோ என்று அஞ்சிச் சொன்னது. அப்புறம். . . பெண்கள் இருவரும் அப்படிப் பட்டவர்கள் இல்லை என்று தெரிந்தபின் சுமுகமாகத்தானே பழகுகிறான்?

இந்த சுந்தரராஜா சும்மாவே ஓர் அலட்டல் கேஸ்! அவ்வளவே! அவனைப் பற்றி எண்ணிப் பார்க்கக் கூடத் தேவை கிடையாது!

அவன் சென்ற பிறகு, “இந்த ஆளை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதுக்கா.” என்றாள் பானுமதி யோசனையோடு. “எங்கே என்றுதான் நினைவு வரவில்லை.”

“யோசிக்கவே வேண்டாம். புவனன் சாரின் சாயல் இருப்பதால் பார்த்தது போலத் தோன்றுகிறது. அவ்வளவே. அதை விடு. இன்று உனக்குத் திரும்பி வருவதற்கு ஸ்கூட்டி வேண்டுமா? எனக்கு பாங்க் வேலை கொஞ்சம் இருக்கிறது. உனக்குத் தேவை என்றால், என் வேலை முடிந்ததும் சாவியைத் தந்துவிட்டு வேறு எதிலாவது வருவேன். நீ

திரும்பி வரும்போது கொஞ்சம் பழங்கள் வாங்கி வந்துவிடு.” என்றாள் வாணி.

“இல்லைக்கா. நீயே பழம் வாங்கிவிடு. பாங்க் வாசலில் மலிவாகக் கிடைக்கும் என்பாயே. நம் வழக்கமான ஆட்டோக்காரரைக் கூப்பிட்டு நான் அதில் திரும்பி விடுகிறேன்.” என்றாள் தங்கை.

வழக்கமாகப் பேச்சினூடே ஏதாவது கலகலக்கும் வடிவு சத்தமின்றி வேலை பார்க்கவும், சகோதரிகள் அவளைக் கூப்பிட்டுக் காரணம் கேட்டனர்.

“உடம்புக்கு ஒன்றுமில்லையே, வடிவு?” என்று வாணி ஆதரவாக விசாரித்தாள்.

“அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்கம்மா. சொம்மா இப்பிடிக் கத்தினாரா? மனசுக்கு வருத்தமா இருந்துது.” என்றாள் அவள்.

“போகிறார் விடு. உன்னை இந்த நேரம்தான் வரச் சொல்லி இருக்கிறோம் என்று அவருக்குத் தெரியாதில்லையா? அதுதான் அதட்டிவிட்டார். இப்போதுதான் விவரம் சொல்லிவிட்டோமே., இனிமேல் திட்ட மாட்டார்.” என்றாள் பானுமதி கனிவாக.

சமாதானம் அடையாமல் “திட்டுவாரும்மா. யாரையானும் மெரட்டினாத்தான் மதிப்புன்னு அவருக்கு நெனைப்பு. இவுரு நம்ம ராசையா மாதிரிக் கெடையாதும்மா. “ என்றாள் வடிவு.

தலை சரித்து நோக்கி, “உன் ராசையா கூட எடுத்த எடுப்பில் எங்களைத் திட்டத்தானே செய்தார்?” என்றாள் வாணி கிண்டலாக.

“அது . . அது நீங்க கெட்ட ஆளுங்களோன்னு பயந்து சொன்னது. இந்த இடத்தை வாங்கணுமின்னும் நினைச்சிருந்தாக. டக்குனு நீங்க வாங்கிட்ட கோவம்! ஆனா இப்பல்லாம் நல்லாத்தானே பேசுகிராக?” என்று அவள் எதிர்பார்த்தபடியே புவனனுக்கு வக்காலத்து வாங்கினாள் வடிவு.

சகோதரிகள் கேலியாக நகைக்கவும், “போங்கம்மா!” என்று தானும் கூடச் சேர்ந்து சிரித்தாள் அவள். ஆனாலும் விடாமல், “ஆனாக்கம்மா, நம்ம ராசையா கொணத்துக்காக, அவக பெரியம்மா . .அதான், சுந்தரத்தையா அம்மா கூடயும் ராசையாவத்தான் உசத்திப் பேசுவாங்க, தெரியுமா?” என்றாள் வீராப்பாக.

“அடடடா! எங்களுக்கு அது தெரியாதே, வடிவு!” என்று சகோதரிகள் இருவரும் ஒன்று போலக் கூறி வேடிக்கையாகக் கைகளை விரித்தார்கள்.

மூவரும் சற்று நேரம் சேர்ந்து சிரித்துவிட்டு, அவரவர் வேலையைப் பார்க்கப் போனார்கள்.

பாங்க் வேலை வாணிக்குத் திருப்திகரமாக முடிந்தது. முந்தைய பணிக்கான பணம் முழுவதுமாக அவள் கணக்கில் வரவாகியிருந்தது. இனி அடுத்த வேலை தொடங்க வேண்டும்.

தேடிச் செல்லும் தேவையின்றி, அடுத்த வேலைக்காகவும் சில நிறுவனங்களில் அவளிடம் கேட்டிருந்தார்கள். வீடியோ காலில் பேசியதில் அவற்றில் ஒன்று அவளுக்குப் பிடித்துமிருந்தது. ஆனால் அதற்குப் பின் புலமாகப் பெரிய மாளிகை . .கிட்டத்தட்ட அரண்மனை போலத் தேவைப்பட்டது.

கூகுளில் தேடி நாலைந்து கண்டுபிடித்தாள்தான். ஆனால் நேரில் பார்க்க முடிந்தால், இன்னும் சிறப்பாகச் செய்யலாம் என்றதுநூறு சதவீதம் தேடும் அவளது மூளை.

தஞ்சை திருச்சிப் பிரதேசங்களில் மாளிகைகளுக்குக் குறைவில்லை. ஆனால் அங்கெல்லாம் யாரோ ஒருத்தியான அவளை உள்ளே செல்ல அனுமதிப்பார்களா?

இன்றைய கால கட்டத்தில் அது சந்தேகமில்லையா? எந்தப் புற்றில் எந்தப் பாம்போ என்று யோசிக்க மாட்டார்களா?

வாணி உள்ளூர அதே யோசனையாக இருந்தது முகத்தில் தெரிந்ததோ?

“இந்த அழகான தலைக்குள் இருந்து குடைவது என்ன?” என்று புவன பூபதி அவளிடம் புன்னகையோடு கேட்டான்.

# அத்தியாயம் - 9

தீவிரமாக யோசிப்பது! இந்த வார்த்தைகளை வரலட்சுமி வேறு விதமாகக் கூறுவாள்.

“இந்த அழகான மண்டைக்குள் அதிகமாக ஒன்றும் கிடையாது என்று எனக்குத் தெரியும். ஆனால் இருப்பதையும் ஏதோ குழப்புகிற மாதிரி இருக்கிறதே! என்னடா விஷயம்?” என்று கேட்பாள்.

தன்னை மீறிச் சிரிப்பு வந்துவிட, அன்னையின் தோளில் சாய்ந்துகொண்டு வாணி விஷயம் என்னவென்று சொல்லுவாள். தாயும் ஏதாவது வழி சொல்வாள்.

ஆனால் அந்த சலுகை இனி யாரிடம் பெறக் கூடும்?

தன்னியல்பாய் வாணியின் பார்வை புவனனின் தோளில் பதிய, சட்டென விதிர் விதித்துப் போனாள் அவள்.

சே! என்ன இது? தங்கை பானுவின் மனம் தளர்ந்தது எப்படி என்று வாணிக்கு அந்தக் கணத்தில் புரிந்தது.

“ஹலோ!” என்று அவளது முகத்தின் முன்னே சொடக்குப் போட்டான் புவனன்.

அவள் திகைத்து நோக்கவும், “என்ன ஒரே யோசனை என்று ஒரு சாதாரணக் கேள்வி கேட்டேன். என்னவோ பிரம்ம ரகசியத்தைக் கேட்ட மாதிரிப் பிரமித்துப் போனாய்?” என்று கேட்டான் அவன்.

ஒன்றுமே இல்லை என்று ஒரேயடியாக இனி மறுக்க முடியாது. எனவே வேகமாக யோசித்து, “அம்மா! எதையாவது ரொம்ப யோசித்தால் என் அம்மா இப்படித்தான் தலைக்குள் என்ன குழப்புகிறது என்று கேட்பார்கள். நாங்களும் என்ன என்று சொல்வோம் . . .” என்று முடிக்கும்போது வாணியின் பேச்சு நின்று போக, அவள் எங்கோ பார்த்தாள்.

இதற்கு மேல் அன்னை வந்து விடை தரவும் வழியில்லை., இவனிடமோ சொல்லக்கூட முடியாது.

முகம் கனிய, புவனனின் கை உயர்ந்து அவளது தோளில் அழுந்தப் படிந்தது.

அவள் திகைத்து நோக்கவும், மேலே செல்லுமாறு வழி நடத்தியவாறு, “அன்பான உறவினரின் மறைவை அடுத்து இத்தகைய

அலைகள் அவ்வப்போது எழுவது இயல்புதான் வாணி. ஆனால் யதார்த்தவாதியான நீ அறியாததா? வா. இன்று உலகிலேயே மிகவும் சத்தான பழமரங்களைப் பார்த்து வரலாம். " என்றான் அவன்.

உலகிலேயே சத்தான பழம் இங்கே விளைகிறதா? என்ன அது என்று வாணியின் யோசனை ஓடியது. புவனன் விரும்பியபடிதான்.

பல்வேறு வேலைகளுக்காகப் பண்ணைக்குள் இங்கும் அங்கும் விரைவாகவும் எளிதாகவும் போய்வர சிறு வாகனங்கள் அங்கங்கே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் அதில் ஒன்றில் ஏறிக்கொண்டு போனார்கள்.

செல்லும்போதே, அங்கங்கே பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் அவனைப் பார்த்து முகம் மலர்வதும் வணக்கம் தெரிவிப்பதும் வாணிக்கு இப்போது பழக்கப்பட்டுப் போயிருந்தது. "ஆக மண்டைக்குள் ஏதோ குடைவது உறுதியாகிவிட்டது. என்னவென்று என்னிடம் சொல்லலாம்தானே? அல்லது, அதைக் கேட்பதே உன் சுதந்திரத்தில் குறுக்கிடுவது ஆகிவிடுமா?" என்று கேலி போலக் கேட்டான் அவன்.

வாணிக்கே உள்ளூர வியப்பாக இருந்தது. அது போல அவளுக்குத் தோன்றவே இல்லையே! தன் வேலையைத் தானே செய்யும் பழக்கம் தவிர, இவனிடம் கேட்கக் கூடாது என்று . . ஊகூம்., அவள் ஒருபோதும் நினைக்கவில்லை!

"பின்னே குடைச்சல் என்னவென்று சொல்லலாமே!" என்று விடாமல் வினவினான் புவனபூபதி.

விஷயம் என்னவென்று வாணி தெரிவித்ததுமோ, விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கிவிட்டான் புவனன்.

இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? என்னதான் அவன் சிரிப்பது நன்றாக இருந்தாலும் எதற்குச் சிரிக்கிறான் என்று தெரியாமல் எவ்வளவு நேரம் பார்ப்பது?

"என்னவென்று சொல்லிவிட்டுச் சிரித்தால் நானும் கலந்துகொள்வேனே!" என்றாள் மிடுக்காக.

"ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை. அதாவது பெரிதாக ஒன்றுமில்லை! அதுதான் விஷயம். நான் ஒரு பக்கம், அதி புத்திசாலியான வீர தீர வாணிக்கே தீர்க்க முடியாத பிரச்சினை போல இருக்கிறதே என்று கவலையில் கேட்டால், வெறும் சுண்டைக்காய் சமாசாரமாக இருக்கிறது! அதுதான் சிரிப்பு வந்துவிட்டது!" என்றான் அவன் அப்போதும் புன்னகையுடனேயே.

“இன்னமும் எனக்கு விஷயம் புரியவில்லை!” என்றாள் அவள் பழைய குரலிலேயே!

“எப்படித் தெரியும்? நான்தான் இன்னமும் சொல்லவே இல்லையே. கேள் பெண்ணே, கேள். இரண்டு நாட்களாக இங்கே சிறு சுருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது ஒரு பிரச்சினையே இல்லை. என்னோடு நீ வருவதானால் பக்கத்திலேயே . .இந்த வண்டியில் போனால் கூடப் பத்தே நிமிஷங்களில் போய்ப் பார்க்கக் கூடியதாய் ஒரு மாளிகை இருக்கிறது. “ என்று அவளது புருவ மத்தியில் சுருக்கம் இருந்த இடத்தை இயல்பாக ஒரு விரலால் தொட்டுக் காட்டிச் சொன்னான் அவன்.

பக்கத்திலேயே உட்கார்ந்து போகிறாள்., நெற்றியில் விரல் படுவது என்ன பெரிய வேறுபாடு? நண்பர்களின் அருகே அமர்வது கூட இப்போது சாதாரணம்தானே?

அவனது விரல் பட்ட இடம் குறுகுறுத்ததை ஆச்சரியமாக அவள் யோசிக்கும்போதே, அவன் தொடர்ந்தான். “அல்லது மேடத்தை ராஜ மரியாதைகளுடன்தான் வரவேற்றாக வேண்டுமானால், பிறகொரு நாள் பார்க்கலாம்.”

“இல்லையில்லை. இன்றே . .” என்று உற்சாகத்துடன் தொடங்கிய அவளது குரல் சட்டென மெலிந்தது. “புவனன் சார், மாளிகைக்கெல்லாம் போகிற மாதிரி நான் உடை அணியவில்லையே! குளிக்கக் கூட இல்லை . .”

“ஆனால் அதை அங்கே யாரிடமும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையே!”

“சொல்ல வேண்டாம். தானாகவே தெரியும்!” என்றாள் அவள் சிறு கடுப்புடன்.

“எப்படியோ? “ என்று திரும்பி அவளை ஏற இறங்கப் பார்த்தான் அவன். “என்னைப் பொறுத்தவரையில், அன்றலர்ந்த மலர் போல நீ பளிச்சென்று அழகாகத்தான் இருக்கிறாய். கூந்தல் பரட்டையாகப் பறக்கவில்லை. முகத்தில் எண்ணை வழியவில்லை. உடையில் அழுக்கோ கிழிசலோ இல்லை. வேறென்ன தேவை?”

அழகி என்கிறானே! லேசான படபடப்பை அடக்கிக்கொண்டு, “அதில்லை சார். புது இடத்துக்குப் போகிற மாதிரி சிறு ஒப்பனை கூடப் பண்ணவில்லை. அணிந்திருப்பவை பல முறை சலவை மிஷினில் போட்டு எடுத்த. . . பபழையவை . . “ என்று இழுத்தாள்.

அவனோடு ஓர் இடத்துக்குப் போவதானால், அவனுக்குப் பெருமை தரும் விதமாக அவள் தோற்றமளிக்க வேண்டாமா? அதுவும் மாளிகைக்கு? இதை இவனுக்கு எப்படிப் புரிய வைப்பது?

அவள் யோசிக்கையில் புவனபூபதி வேறு சொன்னான். "உடையிலோ தோற்றத்திலோ எனக்குக் குறை தெரியாதபோது, மற்றவர்கள் மட்டும் தப்பாக எப்படி நினைப்பார்கள்? எனக்கென்னமோ உனக்கு என்னோடு வர விருப்பமில்லையோ என்றே தோன்றுகிறது. முதலில் ஓர் அவசரத்தில் ஒப்பிவிட்டு இப்போது பின் வாங்க முயற்சிக்கிறாய் போல . . ."

இவனோடு செல்ல விருப்பமில்லையா? விருப்பமில்லாமலா . . .

சட்டென யோசனையை நிறுத்திக்கொண்டு "போகலாம் வாருங்கள்." என்றாள் வாணி.

வண்டியை ஓட்டி வந்தவனின் தோளில் கை வைத்து "இடம் தெரிகிறதல்லவா? போ." என்றான் புவனபூபதி.

வாகனம் ஒரு புறமாகத் திரும்பிச் செல்லவும், "உங்களோடு வர விருப்பம் இல்லாமல் சொல்வதாக எண்ண வேண்டாம். ஆனால் உலகத்திலேயே சத்தான பழத்தை இன்று பார்க்க முடியாது போல இருக்கிறதே!" என்றாள் வாணி.

"நிச்சயமாகப் பார்க்கலாம். அந்த மாளிகையில் அந்தப் பழம் கட்டாயமாக இருக்கும்." என்றான் புவனன்.

இரண்டு திருப்பங்களில் வண்டி செல்லுகையில் மொபைலில் ஏதோ வேலை செய்தான் அவன்.

அடுத்து வந்த திருப்பத்தில் நின்ற ஜீப் வாணிக்குப் பழக்கமானதே.

வண்டி ஓட்டியவனுக்குக் கையாட்டிவிட்டு வாணியை ஏற்றிக்கொண்டு புவனன் ஜீப்பை ஓட்டினால், கண்மூடித் திறக்கும் நேரம் என்பார்களே, அது போல வெகு விரைவில் ஒரு பெரிய மாளிகையின் முன் ஜீப் சென்று நின்றது.

மூன்றடுக்கு மாளிகை! ஆனால் வெளியே தெரியாமல் கட்டடத்துக்குப் போட்டியாக உயர வளர்ந்த மரங்கள் மறைத்தன போலும்! இங்கே இப்படி அரண்மனை மாதிரி ஒரு மாளிகை இருக்கக் கூடும் என்று வாணி நினைத்ததே இல்லை.

ஆனால் இந்தத் திசையில் அவள் செல்ல நேர்ந்ததும் இல்லை.

பெரிய சுற்று மதில் கேட் திறந்து ஜீப் உள்ளே செல்லும்போதே

வாணிக்கு உடல் சிலிர்த்தது. விழிகளைத் தட்டி விழிக்கக் கூட இல்லாமல் சுற்றிலும் பார்த்துக்கொண்டே சென்றாள்.

காவல் அரணாக நின்ற மரங்களை அடுத்து, மாளிகையின் முன்புறம் நன்கு பராமரிக்கப்படும் பெரிய தோட்டம் இருந்தது. நட்டநடுவில் பெரிய நீரூற்று. அதைச் சுற்றிலும் வண்ணத் தாமரைகளுடன் செய்குளம்!

தாமரைப் பூக்களை ரசித்துப் பார்க்கும்போதே, பெரிய போர்டிகோவின் முன் ஜீப் நின்றுவிட்டது.

அவள் கற்பனை செய்தபடி முன்புற வராந்தா முழுமைக்குமாக நீளப் படிகள்!

யாரோ ஓடிவந்து ஜீப் சாவியை வாங்கிப் போனான்.

தோட்டத்தில் அங்கங்கே நின்றவர்கள், வீட்டு வாயிலில் நின்றவர்கள் . . எல்லோரும் வரவேற்பாய் வணங்கிய விதத்தில் வாணி திகைத்தாள்.

“புவனன், இது உங்கள் வீ . . மாளிகையா?” என்று வியப்புடன் வினவினாள்.

ஒப்புதலாகத் தலையசைத்து, “மாளிகை கூட வீடாக இருப்பதுதான் சிறப்பு வாணி.” என்றான் அவன். “இங்கே வருமாறு முன்பே அழைத்திருப்பேன். ஆனால், நீ உன் ஏதாவது கொள்கையில் வர மறுத்து விடக் கூடாதே என்று எண்ணித் தயங்கினேன்.”

அதுதான் அவளாகக் கேட்டதும் அவனுக்கு அப்படிச் சிரிப்பு வந்திருக்கிறது!

மாளிகையின் உள்ளே செல்கையில் அங்கிருந்த பணியாள், “அம்மா சாமியறை பக்கத்து ரூமிலே இருக்கிறதாச் சொல்லச் சொன்னாங்க.” என்றான்.

அம்மா! புவனனுக்குத் திருமணம் ஆகியிருக்கலாம் என்று அவளுக்குத் தோன்றியதே இல்லையே! இப்படிப் பழைய துணியைப் போட்டுக்கொண்டு வந்து நிற்கிறாள் என்று நிச்சயமாக நினைக்கப் போகிறாள்!

சூரியனை மேகம் மறைத்திருக்குமோ, என்னவோ? லேசாக வெளிச்சம் மங்கித் தெரிய, பேச்சின்றி அவனைப் பின் தொடர்ந்தாள் வாணி.

“இந்தப் பக்கம்.” என்று கை காட்டியவன், “முதலில் அம்மாவைப்

பார்த்துவிட்டு அப்புறமாக மாளிகையைச் சுற்றிப் பார்க்கலாம்." என்று அழைத்துப் போனான்.

அம்மா!

மேகம் விலகிவிட்டதோ? மறுபடி வெளிச்சமாக இருக்கிறதே என்று நினைத்தாள் அவள்.

ஒருவேளை மனைவியை மற்றவர்களிடம் "அம்மா" என்று குறிப்பிடுவார்களோ? ஆனால் . .

மனதை வேறு பக்கம் திருப்பும் முயற்சியாக, "உள்ளே நன்றாக வெளிச்சம் வருகிற மாதிரிக் கட்டியிருக்கிறீர்கள்." என்றாள்.

"தாத்தாவும் அப்பாவுமாக எடுத்துக் கட்டிய பகுதி. காற்றும் வெளிச்சமும் நன்றாக வருவதுதான் வாஸ்து என்பது அவர்களது அபிப்பிராயம்! " என்றான் அவன்.

பெரிய பெரிய கூடங்கள்! ஒவ்வோர் அறைக்கும் எவ்வளவு தூரம் என்று எண்ணியவாறு ஓட்டமும் நடையுமாக மூச்சு வாங்க அவனோடு நடந்தாள் வாணி.

கீழ்க்கண்ணால் கவனித்துவிட்டு "சாரி!" என்று வேகத்தைக் குறைத்தான் புவனன். "நெய்யும் பாதாமுமாக உண்பது செரிக்க வேண்டாமா? அறைக்கு அறை இப்படி நடப்பதிலாவது கொழுப்பு குறையட்டும் என்று நினைத்தார்கள் போல!" என்றான் சன்னச் சிரிப்புடன்.

"ஆரோக்கியம் காப்பதுதான் எல்லாவற்றிலும் முதன்மையாக இருந்திருக்கிறது!"

விரியத் திறந்திருந்த பெரிய கதவுகள். வாயிலையே ஆவலாகப் பார்த்தபடி உள்ளே அமர்ந்திருந்த பெண்மணி நிச்சயமாகத் தாயார்தான்!

அவர்களைப் பார்த்ததுமே ஆவலாகக் கைகளை நீட்டி, "வாம்மா, வா!" என்று அன்பாக வரவேற்றாள்.

"என் பெரியம்மா. அம்மாவும் இவர்கள்தான். நான் அறிந்த தாயார் இவர்கள் மட்டுமே. "

வடிவு சொன்னாளே, பெற்ற பிள்ளையை விட "ராசையா"தான் உயர்வு என்று! தாயும் மகனும் பார்த்துக்கொண்ட விதமும் அப்படித்தான் இருந்தது. நெடுநாள் பிரிந்திருந்தது போலப் பார்வையும் அன்னையின் விழிகளில் நீர்ப் படலமும்!

அருகில் சென்றவளின் கைகளைப் பற்றித் தன்னருகே அமர

வைத்தாள் அந்தப் பெண்மணி.

பற்றியிருந்த கையை வருடி, "நான் எதிர்பார்த்த மாதிரியே அழகாக இருக்கிறாய்!" என்றாள் மகிழ்ச்சியோடு.

"எதிர்பார்த்த மாதிரியா? எப்படி?" என்று ஆச்சரியமாகக் கேட்டாள் வாணி.

ஆனால் திடுமென மற்ற இருவரிடமும் தோன்றிய மாற்றம் வியப்பூட்ட தாயையும் மகனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அன்னை திகைத்தது போலவும், மகன் எச்சரிப்பது போலவும் . . .

கற்பனையோ என்பது போல, வினாடிக்குள் இருவர் முகங்களும் இயல்பாகத் தெரிய, "பண்ணையில் நடப்பதை எல்லாம் நான் அம்மாவிடம் சொல்வேன். உன்னைப் பற்றியும் . .. சொல்லியிருக்கக் கூடும். அதிலிருந்து இப்படி இருப்பாய் என்று அம்மா அவர்கள் மனதில் உருவகப்படுத்தி இருக்கலாம். " என்றான் புவனபூபதி.

"ஆமாம். அப்படித்தான், அப்படித்தான்." என்றாள் தாயாரும்.

ஆனால் அழகாக என்றாளே பெரியவள்! அவனே அப்படி வர்ணித்தானா? அவளிடமே அன்று ஒரு வகையில் அப்படித்தான் கூறினான். . .

மனம் குழம்பியது அவளுக்கு. ஆனால் ஒரு குழப்பம் கூட இனிமையாக இருக்கும் என்றால் அதுவும் ஆச்சரியமே!

காரியக்காரர் வந்து கூப்பிடவே "பேசிக்கொண்டிருங்கள்., இதோ வந்துவிடுகிறேன்" என்று புவனபூபதி எழுந்து போனான்.

வாணியின் கையை விடாமல் பிடித்தபடியே பெரியநாயகி பேசிக் கொண்டிருந்தாள்.

பழைய கதையெல்லாம் சொன்னாள்.

அவள் திருமணமாகி வரும்போது மாமனாரும் சின்ன மாமனாரும் சொத்துப் பிரிவினை செய்து பிரிந்து விட்டது., அப்புறம் ஏதோ காரணமாக சொத்துகளை இழந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்களைச் கொழுந்தனாரரன புவனபூபதியுடைய தந்தை பார்த்து இங்கே கூட்டி வந்தது., நாள் கழித்துப் பிறந்த புவனனைத் தூக்கிக் கையில் கொடுத்துவிட்டு இறந்து போனது., குழந்தையும் ஒட்டிக் கொண்டது எல்லாம் சொன்னாள்.

"அப்போதிலிருந்து இவனும் எனக்குப் பிள்ளைதானம்மா. சொல்லப் போனால், சுந்தரத்தை விடவும் என் பேச்சுக் கேட்கிறவன்

இவன்தான். காலா காலத்தில் இவனுக்குத் திருமணமாகிக் குலத்துக்கு ஒரு வாரிசைப் பார்த்துவிட்டேன் என்றால் நிம்மதியாக இருக்கும்." என்றாள் அவள்.

ஏதோ விசித்திரமாக இருந்தது வாணிக்கு. சுந்தரராஜா, புவனனை விட வயதில் மூத்தவராக இருக்க வேண்டும். வேறுபாடு நாலைந்து ஆண்டுகளேனும் இருக்கக் கூடும். தம்பியின் திருமணத்தையும் அதன் மூலமாய் வாரிசையும் தேடுகிறாளே இந்த வளர்ப்பு அன்னை!

"சுந்தரராஜாவைப் புவனன் அண்ணன் என்றாரே? . .சாரி. அவரும் இந்தக் குடும்பம்தானே, ஆன்ட்டி? " என்று கேட்டாள் அவள்.

தாயின் முகம் லேசாக வாடவும், "கேட்டது தப்பானால் மன்னித்துவிடுங்கள் ஆன்ட்டி. அதற்குப் பதில் சொல்ல அவசியம் இல்லை." என்றாள் அவசரமாக.

பற்றியிருந்த கையையே பார்த்திருந்த தாயின் முகம் மெல்ல அமைதியுற்றது. "உன்னிடம் சொல்வதற்கு என்னம்மா? பரம்பரை, வாரிசு என்றால் அதற்கு உரிய தகுதியும் இருக்க வேண்டும். சுந்தரத்தின் வழி வேறாகிவிட்டது. என் மாமியாரின் டிஎன்ஏ ஆக இருக்கலாம். ஒற்றுமையாக இருந்த குடும்பமே அவர்களால்தான் பிரிந்தது என்பார்கள். நானும் அனுபவித்திருக்கிறேன். என் கணவரும் அம்மாவின் பிம்பம். மகனும் பெருமளவு அப்படியே! கொழுந்தனார் மட்டும் எங்களைக் கண்டுபிடித்துக் கூட்டி வரவில்லை என்றால் என்ன கதி ஆகியிருப்பானோ? புவனன், அவன் அப்பா மாதிரிக் குணம். பெரிய மனது. கூடவே இருக்கிற இவனுக்கும் வந்துவிடாதா என்று பார்க்கிறேன். ஆனாலும் வாரிசு என்றால் சின்னவன்தான்." என்றவள் முறுவலித்து, "கொஞ்சம் "பாஹுபலி" சினிமா மாதிரித் தோன்றுகிறதா என்று இலகுவாகக் கேட்டாள்.

பதிலாகப் புன்னகை செய்த வாணியின் மனம் வேகமாக யோசித்தது.

வடிவு சொன்னதோடு ஒத்துப் போகிறது. ஆனால் சுந்தரராஜா வெறும் அலட்டல் கேஸ் என்று எண்ணினாளே! ஆனால் தினம் பார்க்கிற தாயின் கண்ணுக்கு வேறென்ன தெரிந்ததோ?

அவள் யோசித்துக் கொண்டிருந்தபோதே புவனன் திரும்பி வந்தான்.

கையில் ஒரு தட்டும் இருந்தது

"உலகிலேயே சிறந்த பழம் காட்டுகிறேன் என்றேனே!" என்று

தட்டை அவள் முன் வைத்தான்.

பார்த்தால், சிவப்புக் கொய்யா!

ஏமாற்றத்தோடு “வெறும் நாட்டுக் கொய்யா!” என்றாள் வாணி.

“பெரிதாகப் பத்திரிகை வாங்குகிறாயே, படிப்பதில்லையா? உலகிலேயே மிகவும் சத்தான பழம் இதுதான் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்களே. அதுவும் இவைகள் எந்த ரசாயன உரமோ பூச்சிக்கொல்லியோ பயன்படுத்தாமல் வளர்ப்பது! சாப்பிட்டுப் பார். அப்போது தெரியும்!”

“ஆமாம்மா. ரொம்பச் சத்தாம். ருசியாகவும் இருக்கும். தினமும் நான் கட்டாயம் சாப்பிட்டாக வேண்டும் என்பான். எனக்கும் பிடிக்குமா? இரண்டு மூன்று உண்டுவிடுவேன். “ என்றாள் பெரியநாயகி. “நீயும் சாப்பிடம்மா.”

தாயைப் பார்த்த புவனன் சட்டெனச் சிரித்தான். “அம்மா, அவள் கையை இப்படிப் பிடித்து வைத்துக்கொண்டு சாப்பிடு என்றால் எப்படி முடியும்? பரவாயில்லை விட்டுவிடுங்கள். அப்படி ஒன்றும் ஓடிப் போய்விட மாட்டாள்!”

சற்றே அசடு வழிய வாணியின் கையை விட்டுவிட்டு, “மெத்தென்று கைக்கு இதமாக இருந்ததா? விடவே தோன்றவில்லையடா!” என்றாள் அன்னை.

“அது க்ரீம் . . .” என்று ஏதோ சொல்லத் தொடங்கிய வாணி மறுபடியும் திகைத்தாள்.

தாயும் மகனும் பார்வையாலேயே மீண்டும் ஏதோ ரகசியம் பேசுகிறார்களா?

வாணியின் பேச்சு நிற்கவும், “என்ன சாப்பிட்டுப் பார்க்கிறாயா?” என்று கேட்டான் புவனன்.

என்னவோ உடனடியாக அவன் சொல்வதை ஏற்க மனமின்றி, “நான் உங்கள் மாளிகையைப் பார்க்க வந்தேன். முதலில் அதைச் செய்யலாமே.” என்றாள் அவள்.

மறுக்காமல் கூட்டிப் போனான் அவன்.

அழகான மாடிப் படிகள், வழவழப்பாக இழைக்கப் பட்டிருந்த கைப்பிடி, திருப்பங்கள்தோறும் ஒரே மாதிரிச் சட்டமிட்ட சித்திரங்கள் . .. வாணியின் கற்பனை சிறகடித்துப் பறந்தது. கையில் இருக்கும் வேலைக்கென்றே அமைக்கப் பட்ட மாதிரியான மாளிகை!

சந்தோஷப் புன்னகையோடு திரும்பினாள் அவள். “புவனன் சார், உங்கள் மாளிகையாலேயே என் வேலை மிக அருமையாக அமையப் போகிறது. உங்கள் பெரியவர்கள் அவ்வளவு பிரமாதமாகக் கட்டியிருக்கிறார்கள். உங்களையும் பாராட்ட வேண்டும். சிறப்பாகப் பராமரித்து வருகிறீர்கள்!” என்று மனதாரப் பாராட்டினாள்.

“இதை அம்மாவிடம் சொல்லு. ஏனென்றால் பராமரிப்பு வேலையெல்லாம் அவர்களது. சக்கர நாற்காலியில் இருந்தபடியே வீட்டுப் பொறுப்பு முழுதும் பார்ப்பார்கள்.” என்றான் அவன் பெருமையாக.

அமர்ந்திருந்த சோஃபாவை ஒட்டிக் கண்ணை உறுத்தாதபடிப் பின் புறத்தில் வைக்கப் பட்டிருந்த சக்கர நாற்காலியை வாணியும் கவனித்திருந்தாள். பெரியநாயகி அசையாமல் உட்கார்ந்தபடியே பேசியது நினைவு வர, “எப்படி நேர்ந்தது?” என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன். “பெரியப்பா கொஞ்சம் பொறுப்பற்ற காரோட்டி. அம்மாவின் கெட்டகாலம். அவர்களும் கூட இருந்தபோது அந்த விபத்து நேர்ந்தது. முதலில் இருந்த நிலையில், அம்மா பிழைத்ததே பெரிதாகத் தோன்றிவிட்டது.” என்றான் வருத்தத்துடன்.

“ஆனால் நடக்க முடியாததைப் பெரிதாகக் காட்டிக் கொள்ளவே மாட்டார்கள்.”

சின்னவர்களைப் பார்த்ததும், “அதற்குள் திரும்பி விட்டீர்களே! நன்றாகக் காட்டினானாம்மா?” என்று பெரியநாயகி அக்கறையுடன் விசாரித்தாள்.

“நன் . .றாகப் பார்ப்பதானால் மாதக் கணக்கில் ஆகும் ஆன்ட்டி. ரசிப்பதற்குக் கால எல்லையே கிடையாது. ஆனால் வேலை இருக்கிறதே! எனவே எனக்குத் தேவையானதை மட்டும் பார்த்துவிட்டுத் திரும்பிவிட்டேன். எல்லாம் பிரமாதமாய் இருக்கிறது. பராமரிப்பு உங்களதாமே! உங்கள் மகனுக்கு ஒரே பெருமை! காது ஓட்டையாகிவிடுமோ என்று பயந்து போனேன். அந்த அளவு டமாரம் அடித்துவிட்டார். “ என்று நகைத்தாள் வாணி.

முகம் மலரத் தன்னியல்பாக அருகில் நின்ற புவனனின் கையைப் பற்றிக் கன்னத்தில் பதித்துக்கொண்டாள் பெரியநாயகி. அவனுமே அன்பாக அருகில் அமர்ந்துகொள்ள, வாணிக்குப் பெற்றவளின் நினைவு வந்தது.

கூடவே தங்கையும்.

“பானு காத்திருப்பாள். நான் வீட்டிற்குப் போக வேண்டும், ஆன்ட்டி. புவனன் சார், நான் கிளம்புகிறேன்! இங்கிருந்து எப்படி, எந்த வழியே போவது?” என்று விசாரித்தாள்.

“வழியா? கூட்டி வந்தவன் கொண்டுபோய் விடுவானில்லையா? அப்போது பார்த்துக்கொள்.” என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்.

“அப்பா! உங்கள் பையனுக்கு ரொம்பக் கோபம் வருமா ஆன்ட்டி? இவருக்கு ரொம்ப வேலை இருக்குமே, நாமே போய்விடலாமே என்று ஓர் உதவியாகத்தான் நினைத்தேன். . ..”

“ஓகே, ஒத்துக் கொள்கிறேன். ஆனால் தேவையற்ற உதவி. போகலாம் கிளம்பு.” என்று எழுந்தான் அவன்.

“ஒரு நிமிஷம் பொறும்மா.” என்றவள் “ பூஜையறையில் ஒரு தட்டு வைத்திருக்கிறேன். எடுத்து வா புவன்.” என்று மகனை ஏவினாள்.

அவன் எடுத்து வந்து அன்னையிடம் தந்த தட்டைப் பார்த்த வாணி அதிர்ந்தாள்.

வெற்றிலை பாக்கு பழங்களுடன் ஒரு பட்டுச் சேலையும் இருந்தது.

“ஆன்ட்டி, என்ன இது? நான் சும்மா வீட்டை . .உங்கள் மாளிகையைப் பார்த்துப் போக வந்தேன். ப்ளீஸ் வேண்டாம் ஆன்ட்டி.” என்றாள் கலக்கத்துடன்.

“மறுக்காமல் வாங்கிக் கொள்ளம்மா.” என்றாள் பெரியநாயகி. “முன்னொரு காலத்தில் முதல் முறை வரும்போது ஒரு பவுனே வைத்துக் கொடுப்பர்களாம். வருகிறவர்களும் காலில் விழுந்து வாங்கிக் கொள்வார்களாம். கொழுந்தனார்தான் படிக்க வெளிநாடு போய்விட்டுத் திரும்பி வந்து நாமும் எல்லோரையும் போலத்தான். பெரிதாகக் காட்டிக்கொள்ளக் கூடாது என்று வேறு மாதிரி வாழத் தொடங்கினார். எல்லோருக்கும் படிப்பு, மருத்துவம் என்று வேறு மாதிரி உதவிகள். இவன் அதையே விரிவுபடுத்தி இருக்கிறான். அதனாலேயே இன்னும் இவனை ராஜா ராஜா என்று மரியாதையாகப் பேசுவார்கள். . . “

குறுக்கிட்டு, “அதையே தொடரலாமே, ஆன்ட்டி. இது எதற்கு? பழத்தை மட்டும் எடுத்துக் கொள்கிறேன்.” என்றாள் சின்னவள்.

“அப்படி இல்லை கண்ணு. கன்னிப் பெண்களுக்கு இப்படிச் சீர் கொடுத்தால் வீட்டில் நல்லது நடக்கும் என்று ஓர் ஐதீகம். நானும் அதற்காகவே ஏங்கிக் கிடக்கிறேன். மறுக்காதே செல்லம்!” என்று

கெஞ்சலாகக் கேட்டாள் பெரியநாயகி.

கண்ணு, செல்லம்! தாயின் நினைவு வர, அதற்கு மேல் வாணி மறுக்கவில்லை.

“ஆன்ட்டி, என் வேலைக்காக இந்த மாளிகையைப் பார்க்க இன்னும் ஓரிரு முறை கூட நான வர நேரலாம். அப்போது இது போல எதுவும் . . எதுவும் என்றால் எதுவுமே செய்யக் கூடாது. இந்த நிபந்தனையின் பேரில்தான் வாங்கிக் கொள்கிறேன் நினைவிருக்கட்டும்.” என்று கண்டிப்பான குரலில் கூறிவிட்டுத் தட்டை வாங்கிக் கொண்டாள்.

“நன்றாக இரும்மா!” என்று தழுதழுத்த குரலில் ஆசி கூறித் தட்டைக் கொடுத்தாள் பெரியநாயகி.

“மறந்துவிட்டதே, கொய்யாப் பழம்! அது ஒரு பெட்டி எடுத்துப் போய்க் கொடுத்துவிட்டு வாப்பா.”

“ஒரு பெட்டியா? அங்கே இருப்பது நானும் தங்கையும் இரண்டே பேர். ஆளுக்கு இரண்டாக நாலு பழங்கள் போதும், ஆன்ட்டி. கிளம்பட்டுமா? வருகிறேன் ஆன்ட்டி!” என்று வாணி விடை பெற்றபோது அறையின் வாயிற்புறம் அரவம் கேட்டது.

“எல்லாம் நீங்கள் கொடுக்கிற இடம் அம் . . . “ என்று ஏதோ குறை கூறிக்கொண்டு வந்த சுந்தரராஜா, அறையில் இருந்தோரைக் கண்டதும் திகைத்து நின்றான்.

எதிர்பாராத விருந்தாளியாக, அதுவும் அந்த நேரத்தில் அங்கே வாணியை, அதுவும் கையில் ஒரு சீர்த்தட்டுடன் பார்க்கவும் பிரமிப்பில் சிலையாகவே மாறிப் போனான்!

அவன் பேச்சிழந்து நிற்க, புவனன் சாதாரணமாகவே கூறினான். “அவளது வேலைக்காக வாணி நம் மாளிகையைப் பார்க்க வந்தாள் அண்ணா. பார்த்து முடித்துக் கிளம்பிக் கொண்டிருக்கிறாள். அவள் வீட்டுப் பக்கம் கொண்டு விட்டுவிட்டு வருகிறேன்.”

ஜீப்பில் ஏறியதுமே, “வீட்டுப் பக்கம் என்றுதான் சொன்னேன். வீட்டுக்கு என்று சொல்லவில்லை. கவனித்திருப்பாய் என்று நினைக்கிறேன்.” என்றான் சீண்டலாக.

“ம்ம். இந்தத் தட்டைத் தூக்கிக்கொண்டு வெளியே நடக்க முடியாது. வீட்டுக்கே கொண்டு விட்டுவிடுங்கள் என்று கேட்க வேண்டுமாக்கும்?”

“மனதில் இருப்பதைக் கேட்பதற்கு என்ன தடை?”

“கேட்காமலே செய்யக் கூடாதா?”

“செய்யலாம். ஆனால் புரிந்து கொள்ளாமல் உருட்டுக் கட்டையைத் தூக்கிக்கொண்டு அடிக்க வந்துவிட்டால்? என் மக்களிடம் என் மதிப்பு என்னாவது?”

“யாரோ தன்னை யாரும் தப்பாக நினைக்கவே மாட்டார்கள் என்றார்களே!”

“அதற்காகத்தான் அப்படிப்பட்ட நிலை வராமல் முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்வது!” என்று உரைத்தபடியே அவள் வீட்டு முன்னே ஜீப்பை நிறுத்தினான் புவனபூபதி.

மந்தகாசமாகப் பொங்கிச் சிரித்தபடியே ஜீப்பிலிருந்து இறங்கினாள் வாணி.

“ஒரு காஃபி?”

வானத்தை அண்ணாந்து பார்த்து “மழையைக் காணோமே!” என்று அதிசயித்தான் புவனன்.

அவள் சிரிக்கவும், “அதிருஷ்டம் இருந்தால் இன்னொரு தரம் ஆகட்டும். இப்போது காலை உணவுக்காக அம்மா எனக்காகக் காத்திருப்பார்கள். உன்னைச் சாப்பிடாமல் அனுப்பி விட்டேன் என்று டோஸ் கூடக் கிடைக்கலாம். வரட்டுமா?” என்று ஜீப்பைக் கிளப்பினான் அவன்.

தாயார் காத்திருப்பது, வாணியைப் பற்றிப் பேசவே என்று புவனன் அறிவான். அவனுமே அந்த ஆவலில்தான் வீடு நோக்கி விரைந்து சென்றான்.

நல்லவேளையாக சுந்தரராஜா கூட எங்கோ சென்றுவிட, இருவரும் விரும்பிய தனிமையும் கிடைத்தது.

இருவருமாக வெகு நேரம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தனர்.

# அத்தியாயம் - 10

“தள்ளிப் போடாமல் ஆக வேண்டிய வேலைகளை விரைந்து பார்!”

என்னவோ தனக்காகவே சொல்லப்பட்டது போல உணர்ந்தான் சுந்தரராஜா.

பெற்றவளே சொன்ன பிறகு தள்ளிப் போடலாமா? செயல்படவும் தொடங்கினான்!

முதல் வேலையாக வாணியைச் சந்தித்தான்.

ஆனால் அந்தம்மா பெரிய ராங்கிக்காரி ஆயிற்றே! வேலையிருக்கிறது போய்வருகிறாயா என்று வாய் கூசாமல், ராஜ குடும்பம் என்கிற மரியாதையே இல்லாமல் கேட்டுவிடுவாள்.

அவன் தொடர்ந்து கவனித்ததில் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமையன்று வாணி நகர்ப்புறம் செல்வது வழக்கமாக இருந்தது. தங்கைக்காரி படித்த கல்லூரியை வட்டமிட்டதில், பானுமதியைக் கல்லூரியில் விட்டுவிட்டு மூத்தவள் பாங்க் பக்கம் போவது தெரிந்தது. கடை கண்ணி போனார்கள். இளையவளுக்கு வகுப்பு இருக்கும் நேரத்தைப் பொறுத்து இருவரும் சினிமாவுக்குக் கூட ஆனந்தமாகப் போய் வந்தார்கள்.

இரண்டுமே திமிர் பிடித்ததுகள்தான். ஆனால் அதைப் பார்த்து ஒதுங்கிப் போனால் அவனுக்கு வேலை நடக்காது.

அடுத்த புதனன்று காலையில் அந்தப் பக்கமாக ஜீப்பில் போனவன், சகோதரிகளின் வீட்டுமுன் நிறுத்தி உள்ளே வந்தான். “பண்ணை வேலையாகத் திருச்சிக்குப் போகிறேன். ஏதாவது தேவை என்றால் சொல்லு. வாங்கி வந்து தருகிறேன்.” என்று கேட்டான்.

“இல்லை சார் நாங்களே பார்த்துக் கொள்ளுவோம்.” என்றாள் வாணி.

கோபத்தை அடக்கிக்கொண்டு, “என்னம்மா நீ? என் அம்மாவானால் நல்ல பெண்ணாகத் தெரிகிறது, பெரியவர்கள் இல்லாத வீடு முடிந்தவரை உதவி பண்ணு என்று விரட்டுகிறார்கள். நீ இப்படிச் சொல்கிறாயே!” என்று வருத்தம் காட்டிப் பேசினான்.

வாரிசாகத் தகுதி இல்லாவிட்டாலும், இப்படி உதவிகள் செய்தேனும் நல்லது பழகட்டும் என்று பெற்றவளாய்ப் பெரியநாயகி எண்ணுகிறார்களோ?

இருக்கலாம்.

அன்னையை மறுத்துச் சொல்ல விருப்பம் இல்லாவிட்டாலும் உதவியை ஏற்கவும் மனமற்று, சற்று நேரம் நின்று பேசி அவனை வாணி அனுப்பினாள்.

அதே போலத் தற்செயலாகச் சந்திப்பது போல திருச்சியில் பானுவைப் பார்த்தும் பேசினான்.

ஒரு வழியாகப் பார்த்தால் நின்று பேசும் அளவுக்குப் பழக்கம் வளர்ந்தது.

அதே சமயத்தில் பண்ணை வரவு செலவு தொடர்பாக புவனன் ஆடிட்டர்களோடு மணிக்கணக்காக உட்கார வேண்டியிருந்தது. சில அரசாங்க உத்திரவுகளுக்காகப் புவனன் வெளியூரும் போய் வந்தான்.

தம்பி இங்கே போனான்., அங்கே இருக்கிறான் என்று அந்தத் தகவல்களையும் ஊடே சுந்தரராஜா சொல்ல, அவைகளுக்காகவும் வாணி பெரியவனை வரவேற்றாள். ஆனால் இதைச் சொல்லாமல் இருந்திருக்கக் கூடாதா என்று எண்ணும்படியாகவும் அவன் சிலது கூறினான்.

அப்படி ஒரு சமயத்தில்தான், அவர்கள் வசிக்கும் வீட்டை வாங்கப் புவனன் விரும்பியது பற்றி சுந்தரம் கூறினான்.

அது பற்றிப் புவனனே ஒரு தரம் லேசாகச் சொல்லியிருந்ததால், அவளுக்கு அது பெரிய விஷயமாகப் படவில்லை. அவனது நோக்கம் நல்லதுதானே?

மொபைலில் கூப்பிட்டுப் புவனனுடன் சும்மாவேனும் பேசினால் என்ன என்று ஓரொரு சமயம் வாணிக்கு ரொம்பவும் உந்துதல் தோன்றும். ஆனால், அதிகப்படி உரிமை எடுப்பது போலத் தோன்றிவிடக் கூடாதே என்று தயங்குவாள். அதுவும், அவனது மாளிகையைப் பார்த்த பிறகு, தயக்கம் அதிகமாகவே இருந்தது. நிஜமாகவே பெரிய பின்புலம்! பவுன் வைத்துக் கொடுப்பார்களாமே!

இந்த நிலையில் ஒருநாள், “அம்மா, சிவப்புக் கொய்யாக் கன்னுங்க இருக்குது, கொஞ்சம் கொண்டு போய் இங்க நட்டு வையின்னு ராசையா சொன்னாங்க. எங்கல்லாம் வைக்கலாமின்னு இடம் பார்த்துச் சொல்லுங்கம்மா. “ என்றாள் வடிவு. “இந்த இடமின்னு சொல்லிட்டீங்கன்னா என் புருசன் வந்து கொத்திப் பாத்தி போட்டுக் கொடுத்திடுவாரு. “

“நீயே சொல்லேன் வடிவு. கொய்யாச் செடி என்ன சைஸ் வளரும்,

எவ்வளவு இடம் வேண்டும் என்று எங்களுக்குத் தெரியாதே.” என்றார்கள் சகோதரிகள்.

“செடியில்லம்மா. மரம் சின்ன மரமாயிருக்கும். சரிம்மா நான் அய்யா கிட்டயே சொல்லுறேன்.” என்றாள் அவள்.

மறுநாள் வந்து, ராசையாவே வந்து பார்த்துச் சொல்வாகளாம் என்றாள்.

உள்ளூர வாணிக்கு சந்தோஷம்.

புவனன் வருவதாகச் சொல்லியிருக்கிறானே! கட்டாயமாகக் காஃபி கொடுக்க வேண்டும்!

உருட்டுக் கட்டையால் போடுவாளாமா? வரட்டும் வரட்டும்!

உலகத்திலேயே சத்தான பழங்களை அவளும் தங்கையும் உண்ண வேண்டும் என்று செடிகளையே அனுப்புகிறானே!

அடுத்த ப்ராஜெக்டின் வேலையும் வேகமாக நடந்தது.

எல்லாமாக வாணியின் மனம் நிறைந்திருந்த அந்தச் சமயத்தில் அது நிகழ்ந்தது.

அன்று இரவு உணவருந்தி எல்லா வேலைகளும் முடிந்து சற்று நேரம் கேம் விளையாடிவிட்டு சகோதரிகள் இருவரும் படுத்து உறங்கலாயினர்.

சுமார் ஒரு மணி நேரம் ஆகியிருக்கும். நல்ல ஆழ்ந்த தூக்கம் இருவருக்குமே.

“ஞொய்” என்று ஏதோ சத்தம் கேட்டு வாணியின் தூக்கம் லேசாகக் கலைந்தது.

என்ன சத்தம்? மறுபடியும் தூங்க முடியாமல் சத்தம் தொடர்ந்து கேட்கவும், வாணி எழுந்து சுற்றிலும் உள்ள வெளி விளக்குகளைப் போட்டாள்.

வெளிச்சம் வந்ததுமே “ஞொய்” சத்தம் நின்று போயிற்று.

சத்தம் வந்த திசையில் ஜன்னல் வழியே பார்த்தால் ஒன்றும் தெரியவில்லை.

சாலையில் வழக்கம் போல ஓரிரு வண்டிகள் போவது தெரிந்தது. பைக் . . கார் . ..

நடந்தது என்னவாக இருக்கும் என்று யோசித்தவாறு தங்கையைப் பார்த்தால் அவள் அசையக் கூட இல்லை.

கோட்டான் மாதிரி ஏதாவது இரவுப் பறவையாக இருக்கும் என்று நினைத்துப் போய்ப் படுக்கையில் விழுந்து பெரியவளும் மீண்டும் தூங்கிப் போனாள்.

ஆனால் மறுநாள் காலை வேறு சொன்னது.

வீட்டைச் சுற்றிலும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த கிரில் அடைப்பில் ஒரு பட்டை வெட்டப்பட்டிருந்தது.

ஆக இரவில் கேட்ட சத்தம் எந்தப் பறவையுடையதும் அல்ல! டிரில்லர் மிஷின்! அதைக் கொண்டு யாரோ அந்தப் பாதுகாப்பு கிரில்லை வெட்டியிருக்கிறார்கள்! என்ன இது?!

இதனால் என்ன லாபம்? வெளி வேலி தாண்டி உள்ளே புகுந்து, இந்த கிரிலையும் ஆள் நுழைகிற அளவு வெட்டி விட்டாலுமே, அப்படி ஒன்றும் வீட்டிகுள் புகுந்து விட முடியாதே!

உறுதியாக தேக்கு மரக் கதவுகள், ஜன்னல் சட்டங்கள்! அவைகளை உடைப்பதும் எளிதல்ல. எல்லாம் பரிசோதித்துப் பார்த்துவிட்டுத்தானே இந்த வீட்டை வாணி வாங்கியதே!

எல்லாமே உடைத்தாலும், இவ்வளவு கஷ்டப்பட்டும் என்ன பயன்? பணம், நகை என்று எதையும் வீட்டில் வைத்திருப்பதில்லை!

இது வெறும் மிரட்டல். வக்கிர புத்தி. பெண்கள்தானே என்று பயமுறுத்திப் பார்க்கிறார்கள்! அல்லது . . . வேறு என்னவாக இருக்கக் கூடும்?

அன்னையின் வளர்ப்பில் இது போன்ற சிறு விஷயங்களை எல்லாம் வீட்டில் அவர்களே செய்துகொள்ளப் பயின்றிருந்தார்கள். தேவையான பொருட்களை எடுத்துவந்து அவர்களே வெல்ட் பண்ணி மீண்டும் ஒட்டினார்கள்.

அண்ணன் தம்பி இருவருமே வெவ்வேறு சமயங்களில் வந்தார்கள்.

சிசி காமிராப் பதிவை எடுத்து ஓடவிட்டுப் பார்த்த புவனனின் முகத்தில் இறுக்கம் தெரிந்தது.

“முகம் தெரியவில்லை.” என்றான் மரத்த குரலில். “காமிராப் பக்கம் முகத்தைத் திருப்பவே இல்லை. கிரில்லை வெட்டிய இடமும் கேமிராக் கோணத்தில் சரியாக விழ முடியாத இடம்.”

“நானும் பார்த்தேன். காமிராப் பதிவினால் ஒரு பயனுமில்லை.” என்றாள் வாணி.

“அப்படிச் சொல்ல முடியாது. ஆனால், நம்புவது கடினமாக

இருக்கிறது.” என்றான் புவனன்.

“எதை? சிசிகாமிரா வைத்தும் பலனில்லையே என்றா?”

“இம். மாறுபட்ட கோணங்களில் இன்னும் சிலது வைக்க வேண்டும். ஆனால் பயப்படத் தேவையில்லை. பண்ணைக்குள் பாதுகாப்புக்குத் தனி நிறுவனம் வேலை செய்கிறது. இங்கே . . போலீஸ் ரோந்து சுற்ற ஏற்பாடு செய்கிறேன். வீட்டின் அமைப்பால் பெரிய ஆபத்துக்கு வழியில்லை. இதைச் சொல்லத் தேவை இராது. என்றாலும் சொல்லாதிருக்க முடியவில்லை. எச்சரிக்கையோடு இருங்கள். எதற்கும் யாரையும் ரொம்ப நம்ப வேண்டாம்.” என்றுவிட்டுப் போனான் புவனன்.

புவனன் யாரைச் சொல்லுகிறான்? இங்கே அவர்களுக்கு யார் விரோதி? அப்படிப் பார்த்தால் அவன் மட்டும்தானே அவர்களோடு சண்டை போட்டவன்?

அப்படியானால் தனக்கு எதிராகவே எச்சரிக்கை செய்கிறானா என்று சிரிப்பு வந்தது அவளுக்கு.

சுந்தரராஜா பின்னர் வந்தான். மதியத்துக்குப் பிறகு, பானுமதி கல்லூரிக்குச் சென்றபின் அலறியடித்துக்கொண்டு, அலையக் குலைய ஓடி வந்தான். அப்போதுதான் அவனுக்கு விவரம் தெரிந்ததாம். காலையில் வந்த தம்பி அவனிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லையே!

அவன் சொல்லவிட்டால், மூத்த தலைக்கு விவரம் தெரியாமல் போய்விடுமா?

லேசாகப் புருவம் சுளித்திருந்தாலும், பெண்கள் இருவரும் பயந்து நடுங்கவில்லை என்பது அவனுக்கு உள்ளூர எரிச்சலாகவே இருந்தது. பெண்களுக்குரிய முதல் இலக்கணமான அச்சமே இதுகளுக்கு இல்லையே! பெண்கள்தானா?

ஆனாலும் மனதைக் காட்டிக் கொள்ளாமல் தேறுதலாகப் பேசினான்.

“இதற்காகப் பயப்பட வேண்டாம். இனிமேல் நானே இரவில் இரண்டு தரம் இங்கே வந்து சுற்றிப் பார்த்துவிட்டுப் போகிறேன். ஆனால் இந்த அளவுக்குப் போகக் கூடும் என்று நான் எண்ணவில்லையே! “ என்று வருந்தினான்.

சட்டென நிமிர்ந்து, “யார்?” என்று வாணி வினவினாள்.

“யா . .ரா . ? யாயாருமில்லையே! எஎன்ன சொன்னேன்.? நான் யாயாரையும் எஎதுவும் சொல்லவில்லையே!” என்று குளறினான்

சுந்தரம்.

“சொன்னீர்கள் யாரோ இந்த அளவு போகக் கூடும் என்று எண்ணவில்லையே என்றீர்கள்? யார் அது? உங்கக்கு யார் மேல் சந்தேகம்.?” என்று கூர்ப் பார்வையுடன் கேட்டாள் அவள்.

அவனுக்கு வெலவெலத்துப் போய்விட்டது. கை கால்கள் நடுங்க, “வாவாய் உ . .உ .. உளறித் தொலைத்துவிட்டது. இது வெளியே தெரிந்தால் என்னைத் தொலைத்து விடுவார்கள்!” என்று அஞ்சிக் கலங்கினான்.

யார்? யார் தொலைத்துக் கட்ட முடியும்? இவன் யாரைக் குறிப்பிடுகிறான்?

அலட்டல் கேஸ்தான்., அதிகப்படிப் பேச்சுதான். , பிறப்புக்குரிய சிறப்புகள் இல்லை என்று பெற்றவளாலேயே ஒதுக்கப்பட்டவனும்தான்.

ஆனால் இப்படி நடுங்குகிறானே!

“பரவாயில்லை சொல்லுங்கள் நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்.” என்று வாணி பலமுறை உறுதி அளித்த பிறகு, அப்போதும் தயக்கத்துடனேயே மெல்லச் சொன்னான் சுந்தரராஜா.

“இந்த வீட்டை அடிமாட்டு விலைக்கு வாங்க புவனன் முயற்சி செய்தான். அவன் ஊரில் இல்லாத நேரம் டக்கென்று வாங்கி, இருவரும் குடியே வந்துவிட்டீர்கள். அதை இன்னமும் அவனால் தாங்க முடியவில்லை. தோல்வி அறியாத ராஜ குடும்பத்து வாரிசு அல்லவா? அதுதான் . .. மிரட்டி ஓட வைக்க முயற்சி செய்கிறானோ என்று . . .உ உறுதியாகச் சொல்லவில்லை. ஆனால், இதனால் வேவேறு யா . .ருக்கு என்ன லாபம்? அத்தோடு . . .”

“அத்தோடு?”

“இந்த வீட்டு அமைப்பு வேறு யாருக்குத் தெரியும்? சிசி காமிராப் பதிவில் முகமே தெரியவில்லையாமே! இந்த காமிரா கூட பழைய உரிமையாளர்களுக்குப் பூபதிதான் வைத்துக் கொடுத்தான். இங்கே . . . அதுதானே உ உதைக்கிறது . . “

“சேச்சே இராது!” என்றாள் வாணி.

சொல்லும்போதே அவளுக்கு எதோ நினைவு வந்தது.

இரவில் விளக்கைப் போட்டுவிட்டுச் சுற்றிலும் பார்த்தபோது சாலையில் ஜீப் போன சத்தம்! புவனன் ஜீப் பயன்படுத்துகிறவன்.

அப்படியானால் கிரில்லை வெட்டியது அவனேதானா?

அவனோடு உறவு நன்றாகி விட்டதாக எண்ணினாளே! அப்படி எண்ணி கவனக் குறைவாக இருக்கட்டும் என்றுதான் நன்றாகப் பழகினானா என்றெல்லாம் மூளை யோசித்தது.

ஆனால் "ஜீப் வைத்திருப்பதால் மட்டுமே அவனை எப்படிக் குற்றம் சாட்ட முடியும் என்றும் அது கேட்டது!

அத்தோடு . . .ஊகூம். எப்படியும் புவனன் நல்லவன் என்று வாணியின் மனம் பிடிவாதமாகச் சொன்னது!

எல்லோரும் ராஜையா ராஜையா என்று உயிரை விடுகிறார்களே! சும்மாவா செய்வார்கள்?

ஆனால் மனம் ஒரு குரங்கு என்றும் சும்மாச் சொல்லி வைத்திருக்கவில்லை.

சுந்தரராஜா சொன்னது மீண்டும் மீண்டும் வாணிக்கு நினைவு வந்தது.

ஒரு வேளை . . .நூற்றுக்குப் பத்து சதவீதமாக அவளை விரட்டப் புவனன் செய்யும் முயற்சிகளில் இதுவும் ஒன்று என்றால் . . . அவன் இன்னும் என்னென்ன செய்யக் கூடும்?

சினிமாக்களில் வருகிற மாதிரிப் பாம்பை வீட்டினுள் விடுவானா? மாட்டவே மாட்டான்.

பாம்புக்கெல்லாம் நேராகப் போய் இன்னாரைத்தான் கடிக்க வேண்டும் என்று எப்படித் தெரிய முடியும்? சும்மா வெறும் கதை. நிச்சயமாக அப்படி எந்த அசட்டுத்தனமும் அவன் செய்யவே மாட்டான்!

ஏன்? இன்றைக்கு யாருமே செய்ய மாட்டார்கள் என்று வாணி மனதில் எண்ணும்போதே வடிவின் குரல் கேட்டது.

"அம்மாம்மா. இங்கே வந்து பாருங்க. நம்ம வேலியிலே பாம்பு சட்டை உரிச்சிருக்குது." என்று அழைத்தாள்.

ஏனோ வயிறு காலியாக இருப்பது போல வாணி உணர்ந்தாள்!

ஏற்றாற்போல அன்று நலம்விசாரிக்க வந்த சுந்தரமும் "பார்த்தாயா" என்று பாரட்வையாலேயே கேட்டான்.

புவனனிடம் இது பற்றிப் பேசியே ஆக வேண்டும்! பண்ணைக்குள் மறுநாள் காலையில் வாக் செல்லும்போது. அப்போது அவன் கிடைக்காவிட்டால் மாளிகையை இன்னொரு தரம் பார்க்க வேண்டும்

என்று கேட்டு, அப்போது!

காலையிலேயே வாணி புவனனைச் சந்திக்க முடிந்தது.

சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பதாக எண்ணி மனதை உறுதிப்படுத்திக்கொண்டு பாம்புச் சட்டை பற்றி அவனிடம் விவரித்தாள்.

“வழுவழுவென்று நீளமாக இருந்தது புவனன் சார். ஆனால் அது எப்படியோ போகட்டும். ஓர் இடத்தில் பாம்புச் சட்டை கிடந்தது என்றால், அங்கே பாம்பு இருக்கிறது என்றுதானே அர்த்தம்? ஆனால் இவ்வளவு நாள் இல்லாமல், எங்கள் இடத்துக்குப் பாம்பு எப்படி வரும்? யாயாராவது கொண்டு விட்டிருப்பார்களா?”

அப்பாடி கேட்டேவிட்டாள்!

ஆனால் புவனன்தான் பாம்பைப் பற்றிப் பெரிதாக எடுத்துக் கொள்ளவே இல்லை.

“வயல், தோட்டம் துரவு என்று இருக்கும் இடங்களில், எலியும், அதை விழுங்கப் பாம்பும் இருப்பது இயல்பு வாணி. பண்ணைப் பாதைகளில் இப்படி அடிக்கடி நடக்கும் இடத்துக்கு வராது. பொதுவாக முள்ளுச் செடிகளில் பாம்பு சட்டை உரிக்கும். உன் வெளி வேலி . . .இரும்பு  மெஷ்தானே? ஓர் இடத்தில் மாட்டிவிட்டுப் பழைய தேலை உரிப்பது பாம்புக்கு இலகுவாக இருந்திருக்கலாம். இது பற்றிப் பயப்படத்தேவையில்லை. நடக்கும்போது சற்று எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் அது போதும்.” என்றான் அவன் வெகு சாதாரணமாக.

மற்றபடி ஒன்றுமில்லையா? ஒன்றுமே இல்லையா?

மிரண்டு ஓடவும் சொல்லவில்லை. கடிபட்டுச் சாகட்டும் என்று எண்ணுகிறானோ என்றால் எச்சரிக்கையோடு நடக்கச் சொல்லுகிறானே!

எதிலும் சேர்க்க முடியாமல் அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

எப்படியும் சுந்தரராஜாவின் பார்வைக்குப் பதில் சொல்ல வேண்டுமே!

ஓரக்கண்ணை அவன் மேல் பதித்து, “எனக்கென்னவோ எல்லாவற்றையும்  ஏறக் கட்டிவிட்டு, மறுபடியும் சென்னைக்கே போய்விடலாமா என்றுகூட ஒரு தரம் தோன்றிவிட்டது.” என்றாள்.

ஆச்சரியமாக முகம் திருப்பி அவளைப் பார்த்தான் புவனன்.

“என்ன?”

“நீ கோழை என்று நான் எண்ணியதே இல்லை! உனக்குத் தேவையானால் வேலைக்கு இன்னும் ஓர் ஆளை அனுப்பட்டுமா? எப்போதும் கூடவே இருக்கிற மாதிரி ஆள்.” என்று கேட்டான்.

“என்ன மாதிரி ஆள்?”

“பாம்பைக் கண்டால் இங்கே அடித்துப் போடுவார்களே தவிர அஞ்சி ஓட மாட்டார்கள்!”

“அப்படியானால் போக வேண்டாம் என்கிறீர்களா?”

சுந்தரத்துக்காகவே அவளுக்குத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. எனவே விடாமல் கேட்டாள்.

“பின்னே? நீ வீராங்கனை என்று நினைத்தேனே! சின்னச் சின்னத் தொல்லைகளுக்குப் பயந்து ஓடுவார்களா? அப்புறம் எதைச் சாதிப்பது? அம்பானி மந்திரம் தெரியுமல்லவா? எங்கே தடை இருக்கிறதோ, அங்கே வாய்ப்பும் இருக்கும்!”என்றான் அவன்.

“இங்கே என்ன வாய்ப்பு?? என்று கேட்டாள் வாணி.

அவன் பேசாமலே நடந்தான்.

“என் வேலையை எங்கே இருந்தும் செய்ய முடியும்.” என்றால் அதற்கும் பதிலில்லை.

ஓடாமல் தங்கச் சொல்கிறானே என்று உள்ளூர மகிழ்ச்சியாகவே இருந்தது அவளுக்கு.

அந்த மகிழ்ச்சியில் பழைய மாதிரிக் கேலி பேசவும் முடிந்தது.

அதற்கு வசதியாக அவளுக்கு அனுப்ப இருக்கும் கொய்யாக் கன்றுகள் பற்றிப் புவனன் சொன்னான். “வடிவுடைய கணவன் சொக்கன் செடியை வைத்துப் பாத்தி கட்டித் தந்து விடுவான். முக்கியமாக விஷயம், விளம்பரங்களைப் பார்த்து விரைவில் நிறையக் காய்க்கும் என்று கண்ட உரத்தையோ, பூச்சி பிடிக்கிறது என்று ரசாயன மருந்தையோ போட்டுவிடாதே. பக்கத்தில்தானே என் பண்ணை? உரமோ மருந்தோ காற்றில் கலந்து என் பண்ணைக்குள் வந்துவிடக் கூடாது. மழை பெய்தால் நீரில் ஊறியும் கூட இங்கே வரை வந்துவிடலாம். அதனால் இதில் ரொம்ப எச்சரிக்கையாக இரு. அல்லது என் பெயர் கெட்டுவிடும். “ என்று வற்புறுத்திச் சொன்னான்.

அன்று வாணியின் நாக்கில் என்ன இருந்ததோ?

மனப்பாரம் நீங்கிய மகிழ்ச்சியில் கட்டவிழ்ந்த கன்று போல அவளது நாக்கு இஷ்டத்துக்கு ஓடியது. “ஓஹோ! அப்படியா விஷயம்?

நானும் இத்தனை காலமாக, ரொம்பவும் அநியாயமாக நம்மைப் பட்டணத்து சொகுசுசுந்தரி என்றாரே, இவரை எப்படிப் பழி வாங்குவது என்று யோசித்து யோசித்து ஒன்றும் கிடைக்காமல் அலுத்துப் போயிருந்தேன்! பார்த்துக்கொண்டே இருங்கள். எங்கள் இடத்தில் கெமிகல் உரத்தைப் போட்டுக் கொட்டி உங்கள் பண்ணைக்குள்ளும் வருகிற மாதிரிப் பண்ணி விடுகிறேன்! அப்புறம் உங்கள் பிழைப்பையே மூ . . " என்றவள் முடிக்கக் கூட இல்லை.

"ஏய்ய்!" என்று உறுமி அவளைப் பிடித்து நிறுத்தினான் அவன். "இன்னொரு தரம் எதற்காகவும் இப்படிப் பேசாதே. ஒரு வேளை நீ சொன்ன மாதிரி ஏதாவது செய்தால் நான் உன்னைக் கொன்றே விடுவேன்!" என்று பயங்கரமான குரலில் எச்சரித்தான்.

இதை எதிர்பார்த்திராத வாணி, அவன் பற்றியதில் சிவந்திருந்த கையை வருடியபடி அவள் திகைத்து நோக்க, அவன் பேச்சு சட்டென நின்றது.

பலமுறை கண்களை இறுக மூடித் திறந்து ஒருவாறு தன்னை சமாளித்த பிறகே அவன் மீண்டும் பேசினான். "ப்ளீஸ் வாணி. இந்தப் பண்ணை விஷயத்தில் வேடிக்கையாகக் கூட இப்படிப் பேச வேண்டாம். மக்களுக்குத் தூய உணவையே கொடுப்பது என்று என் தந்தை தொடங்கி வைத்தது. ரத்தத்திலேயே கலந்துவிட்ட கொள்கை. இதை இலகுவாக ஒருபோதும் எண்ண வேண்டாம்." என்றான் அவன் அப்போதும் இயல்புக்கு வராத குரலில்.

ஒரு பெருமூச்சுடன் அவளுக்குக் கைகாட்டிவிட்டு அவன் நடக்கத் தொடங்கிய பிறகே, வாணிக்கு மூச்சு நேராக வந்தது.

அவளுக்கு மட்டுமல்ல. அக்கம் பக்கம் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் கூட வேலையைத் தொடர்ந்தார்கள் என்பதைக் கண்டு அவளுக்குப் பிரமிப்பாக இருந்தது.

அவனுக்கு ரொம்பக் கோபம் வரும் என்று, அங்கு வந்த புதிதில் ஆட்டோ ஓட்டி சொன்னது நினைவு வந்தது.

இது புவனனின் கோபம் என்றால் இந்தக் கோப முகத்தை வாழ்நாள் முழுதும் பாரக்க நேரவே கூடாது என்று வாணி நினைத்தாள்.

ஆனால் அந்தக் கோபமுகத்தை வெகு விரைவிலேயே அவள் பார்க்கப் போகிறாள் என்றோ, அது அவளது உயிருக்கே உலை வைக்கப் போகிறது என்றோ அப்போது அவளுக்குத் தெரியாது!

# அத்தியாயம் - 11

ஊரை விட்டு ஓடாமல், வாணியை இங்கேயே தங்குமாறு புவனன் கூறினான் என்றால் சுந்தரராஜா அதை ஒத்துக் கொள்ளவில்லை.

முழு மூச்சாக மறுத்தான்!

“யோசி வாணி. போ என்று அவன் எப்படிச் சொல்லுவான்? குற்றம் ருசுவாகி விடுமே. நல்லவன் போலக் காட்டிக் கொள்கிறான். நீயே பார்! எத்தனை முறை ஊரை விட்டுப் போகிறான்? எங்கே என்று தெரியுமா? ஊருக்கு ஒருத்தி. நினைத்தால் பண்ணை வேலை என்று சொல்லிவிட்டு அங்கங்கே போய்விடுவான். பஞ்சாயத்துத் தலைவன் என்பதால் இங்கே உத்தமனாகக் காட்டிக் கொள்ள வேண்டுமே! “ என்றான் அவன்.

அவளுக்கு நம்ப முடியவில்லை. எனவே, “அவருக்கு வேலை அதிகம் இப்படி ஒரு பெரிய பண்ணையைக் கட்டிக் காத்து வளர்ப்பது என்றால் சும்மாவா?” என்று கேட்டாள்.

ஆனால், “அதுதான் நான் சொல்வதும்!” என்றான் சுந்தரம். “என் சித்தப்பா மகன்தானே? மூத்தவர் என் அப்பா. சின்னவரான சித்தப்பாவுக்கு இந்தப் பெரிய பண்ணை எப்படி வந்தது? அதை என்றேனும் யோசித்தாயா?” என்று அவன் கேட்டான்.

இது பற்றி அவனுடைய தாயே சொன்ன கதை ஒன்று உண்டு. ஆனால் அது எதிரில் இருக்கும் சுந்தரத்தையும், அவனுடைய தந்தையையும், தந்தையைப் பெற்ற பாட்டியையுமே குறைத்துக் காட்டுவது. முகத்துக்கு நேரே அதைச் சொல்ல மனமற்று வாணி பேசாதிருந்தாள்.

சுந்தரனே தொடர்ந்தான். “மனதோடு வைத்துக்கொள் வாணி. இதை நான் சொன்னேன் என்று தெரிந்தால் என் உயிருக்கே ஆபத்து வந்துவிடும். ஆனால் நீங்கள் சின்னப் பெண்கள்! கள்ளம் கபடு அறியாதவர்கள். மோசமான ஒருவனிடம் ஏமாந்து விடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் இந்த விவரம் சொல்கிறேன். இந்தப் பண்ணையில் பாதிச் சொத்து என் தாத்தாவுடையது. சித்தப்பா என் அப்பாவை ஏமாற்றி வாங்கி முழுசாக முழுங்கி விட்டார். வெளியே விட்டால் தகராறு செய்வேன் என்று, என்னைக் கொஞ்சம் கௌரவமான பணியாளாக நடத்துகிறார்கள். ரா .ஜ வம்சம். பழைய காலம் என்றால் பட்டத்துக்கு உரிய மூத்தவன் நான். இங்கே போ, அங்கே போ என்று ஏவும்போது எனக்கு எப்படி இருக்கிறது தெரியுமா? பிழைப்பைப் பற்றிக் கூட நான் அஞ்சவில்லை. என் உயிரைப் பற்றியுமே. ஆனால் என் தாயார் . . நடக்க

முடியாதவர்கள். அவர்களுக்காகப் பொறுத்துப் போக வேண்டியிருக்கிறது. அரண்மனையிலும் அங்கங்கே சிசி காமரா! முகத்தில் கூட மனதைக் காட்டிக்கொள்ள முடியாத நிலை! எனவே, அவர்களுமே அவன் புகழைத்தான் பாட வேண்டியிருக்கிறது. நானும் தலையாட்டுகிறேன். இல்லாவிட்டால் நடக்க முடியாத அவர்களை, வருமானமே இல்லாத நான் எப்படிப் பராமரிப்பது?" என்று நீளமாக எடுத்துச் சொன்னான்.

எல்லாம் கேட்டுவிட்டு வெகு நேரம் வாணி எதுவுமே பேசாதிருந்தாள்.

தன் பேச்சு சரியானபடி வேலை செய்கிறது என்ற நினைப்போடு குறுக்கிடாமல் காத்திருந்தான் அவன்.

கவனம் வேறு பக்கம் கலையக் கூடாது என்பதற்காகவே அந்தக் குட்டிப் பாம்பு கல்லூரிக்குப் போன பிறகு வாணிக்குக் குழையடிக்க அவன் வருவதே.

இல்லாவிட்டால் குறுக்கே புகுந்து அவள் வேறு ஏதாவது சொல்ல இரண்டு பேரை சமாளிப்பது அவனுக்கு ரொம்பக் கஷ்டம்!

ஏற்கனவே அவனது முயற்சியில், வாணிக்கும் புவனனுக்கும் சில உரசல்கள் நேர்ந்தும் இருப்பதால், அதை எளிதாக ஊதி விட்டுவிடலாம் என்றும் சுந்தரம் நினைத்தான்.

ஆனால் வெகு நேரம் யோசித்த பிறகும், "என்னவோ, புவனபூபதி பற்றித் தப்பாக என்னால் நினைக்கவே முடியவில்லை, சுந்தரம் சார்." என்றாள் அந்த ராட்சசி.

இவ்வளவு தூரம் ஒருவன் , அதுவும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவன், இந்தச் சனியன் பிடித்த சுதந்திரம் வரவில்லை என்றால் பட்டத்து ராஜாவாக இருந்திருப்பான்., அப்படிப்பட்டவன் நாள்க் கணக்கில் கரடியாகக் கத்துகிறான். இந்த நாய்க்கு நம்ப முடியவில்லையாம்.

இப்போது ஏதாவது செய்தே ஆக வேண்டும்!

இதற்கு மேல் எப்படிக் காய் நகர்த்துவது என்று தேடியவனுக்கு வசதியாக அன்று ஒரு வழி கிடைத்தது.

வாணியிடம் புவனன் கோபமாகப் பேசியது அவன் காதுக்கு விரைவாகவே எட்டியது. ஊர் வம்பு பேசும் சிலரிடம் அதற்காகவே அவன் பழக்கம் வைத்திருந்தான்.

அந்த வழியில் வாணி, புவனனின் பேச்சும் தெரிய வந்தபோது அது அவனுக்குச் சர்க்கரைப் பொங்கலாக இனித்தது.

கொய்யாக் கன்றுகள் வந்து, சொக்கன் வந்து அவைகளை நட்டு வைத்துவிட்டும் போனான். வெளியே மஞ்சளும், உள்ளே இளம் சிவப்பு நிறமுமாக அந்தப் பழங்கள் அழகாக இருந்ததோடு சுவையும் நிறையத்தான். எனவே அந்தச் செடிகள் வளர்ந்து காய்ப்பதற்கு எவ்வளவு நாளாகும் என்று வடிவிடம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

“செடியை வைக்குமுன்னே எப்ப பழம் கிடைக்குமின்னு கேட்கிறீங்களேம்மா!” என்று சிரித்தாள் அவள்.

இதை அவள் புவனனிடம் சொல்லியிருக்க வேண்டும்.

பண்ணைக்குள் நடக்க வந்த அவளிடம் அவனுமே இது பற்றிப் பேசினான். “இந்தப் பழத்தின் சுவை பிடித்துப் போகும் என்று சொன்னேனே. ஆனால் அன்றன்று பறிக்கும்போதுதான் அவ்வளவு ருசி. அதற்காகத் தினமும் பூ விட்டிருக்கிறதா, காய் பிடித்து விட்டதா என்று தேடிக் கொண்டிராதேம்மா. கொஞ்ச நாள் ஆகும்.” என்றான் புன்னகையோடு.

“தாவரங்கள் பற்றி அதிகம் தெரியாதுதான் ஆனாலும் செடியை வைத்த உடனேயே காய்க்காது என்று எனக்கும் தெரியும் பண்ணை முதலாளி சார்!” என்று அவளும் இலகுவாகப் பதில் கொடுக்க இருவரும் நகைத்துக் கொண்டனர்.

ஆனால் இணைந்து நகைத்த சுகம் அன்று மட்டிலுமே இருந்தது.

மறுநாள் காலையிலேயே வெறி பிடித்த மாதிரி புவனபூபதியின் உறுமல் குரல் கேட்கவும் காஃபி போட்டுக் கொண்டிருந்த வாணி விழுந்தடித்துக்கொண்டு வெளியே ஓடிப் போய்ப் பார்த்தாள்.

அவளைக் கண்டதும் அவனது குரல் இன்னமும் உயர்ந்தது. “உனக்கு என்ன தைரியம் இருக்க வேண்டும்? நான் அவ்வளவு சொன்ன பிறகும் செயற்கை உரத்தை வாங்கிச் செடிகளுக்குப் போட்டிருக்கிறாய்! ஐயோ! பழி வாங்குவது பற்றி நீ சொன்னதை வேடிக்கைப் பேச்சு என்று எண்ணினேனே! கடைசியில் நீ விஷப் பாம்பாக அல்லவா இருந்திருக்கிறாய்! கரம் வைத்துப் பழி வாங்கும் கருநாகம்! “ என்று கொலை வெறியோடு கத்தினான் புவனன்.

காரணம் புரியாமல் சற்று நேரம் திகைத்தவளுக்கு, தனக்குப் பேச இடமே கொடுக்காமல் புவன் கத்தியது ஆத்திரமூட்டியது. “நிறுத்துங்கள். என் வீட்டு முன்னே வந்து காட்டுக் கத்தலாக எதற்காக இப்படி

அலறுகிறீர்கள்? எதுவானாலும் காரணத்தைச் சொல்லிவிட்டுக் கத்துங்கள்.” என்றாள் அவளும் குரலை உயர்த்தி.

“ஒன்றுமே தெரியாதவள் போலக் காரணமா கேட்கிறாய்? என் காரணம் அதோ இருக்கிறது பார்! எத்தனை முறை சொன்னேன், செயற்கை உரமே பயன்படுத்தக் கூடாது என்று. அது என் பண்ணைக்குப் பாதிப்பாகும் என்று அவ்வளவு சொன்ன பிறகும் அந்த விஷத்தை வாங்கிச் செடிகளுக்குப் பயன்படுத்தி இருக்கிறாய் என்றால், நீயே விஷம் என்றுதானே அர்த்தம். பார்த்துக்கொண்டே இரு. உன்னை இங்கிருந்து ஓட ஓட விரட்டாமல் நான் ஓயவே மாட்டேன்! காதகி! கிராதகி!”

“ஐயோ, என் அக்காவை அப்படிச் சொல்லாதீர்கள்.” என்று சத்தத்தைக் கேட்டு விழித்து வந்த பானு அழுகுரலாகக் கூறினாள்.

“அவள் செய்திருக்கும் வேலைக்கு அவளைக் கொல்லாமல் விடுகிறேனே! அதுவே அதிசயம். அவள் விஷம். விஷம் விஷமேதான்!” என்றான் புவனன் வஞ்சினத்தோடு!

மறுபடியும் “நிறுத்துங்கள் !” என்றாள் வாணி. அவன் காட்டிய உர மூட்டையை அருகில் போய்ப் பார்த்தவள், “இதை நான் வாங்கவும் இல்லை. பயன்படுத்தவும் இல்லை. இது எப்படி இங்கே வந்தது என்று எனக்குத் தெரியாது.” என்றாள் கோபமாக.

“இதை வாயில் விரலைக் கொடுத்தால் கடிக்கத் தெரியாத கேணயன் எவனாவது இருப்பான் பார்! அவனிடம் போய்ச் சொல்லு. உன் வீட்டில் கிடக்கிற உர மூட்டை எப்படி வந்தது என்று உனக்குத் தெரியாது என்றால் எந்த மடையன் நம்புவான்? அதுவும் நான் அவ்வளவு சொல்லியும் பாதிக்குமேல் எடுத்துச் செடிகளுக்குப் போட்டும் இருக்கிறாய்! இதற்காக உன்னைச் சிறைக்கே அனுப்புகிறேன், பார். உன்னை இங்கிருந்து ஓடஓட விரட்டாமல் நான் ஓயமாட்டேன். ஓட மட்டுமல்ல. ஓட முடியாமல் விழுந்து சாகிறவரை விடப் போவதில்லை! “

“மெய்யாகவே இந்த உர மூட்டை இங்கே எப்படி வந்தது என்று எனக்குத் தெரியாது, தெரியாது, தெரியாது! உண்மையைச் சொல்லிவிட்டேன். இதற்கு மேல் இங்கிருந்து கத்தினால், எனக்கும் சட்டம் தெரியும் நானும் சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன். அப்புறம் எனக்கு முன்னே நீங்கள் காவல் நிலையத்தில் கம்பி எண்ண வேண்டியிருக்கும். மரியாதையாக இங்கிருந்து உடனே போய்விடுங்கள். “ என்றாள் வாணி.

எரித்து விடுவான் போலப் பார்த்துவிட்டு, “இதற்காக உன்னைக்

கொல்வது கூடப் பாவம் இல்லையடி!” என்று சுந்தரராஜாவுக்கு வேண்டிய வார்த்தைகளைத் துப்பினான் புவனன்.

“செய்யுங்கள். ஒருவர் வீட்டு முன்னால் நின்று இப்படி அலறுவதற்கு அது மேல்!” என்றாள அவள் பதிலுக்கு.

“அக்கா, உள்ளே வாக்கா!” என்று தமக்கையைப் பிடித்து உள்ளே இழுத்துப் போனாள் பானுமதி.

“சே! இருந்திருந்து உன்னைப் போய் நம்பினேனே!” என்று வெறுப்புடன் கூறித் திரும்பிப் போனான் புவனபூபதி.

அந்த இடத்தில் குழுமிய கூட்டத்தில் ஒருவனாகத் தனக்கு வேண்டிய ஒருவனை நிற்கச் செய்து, அவ்வளவையும் அவனது மொபைலில் கேட்டுக் கொண்டிருந்த சுந்தரராஜா திருப்தியோடு புன்னகை செய்தான்.

இனி வாணிக்கு என்ன ஆனாலும் புவனன் மீதுதான் பழி விழும்! கை, கால், உயிர் எதை எடுத்தாலும்! ஆனால் அவனே மாட்டிக் கொள்ளாமல் செய்ய வேண்டும்! அவ்வளவே!

சரியாக நேரம் என்று சுந்தரராஜா செயல்படலானான்.

அன்றைக்கு வாணியை மாளிகையில் பார்த்ததுமே சுந்தரத்துக்கு ஏதோ மனதில் ஊசியாய்க் குத்தி உறுத்தியது.

பொதுவாகவே வாணி புவனனோடு சாதாரணமாகப் பேசிப் பழகுவது அவனுக்குப் பிடிக்காது. ஏன், எந்தப் பெண் என்றாலுமே அப்படித்தான். புவனன் பாட்டில் அந்தப் பெண்ணை மணந்து பிள்ளை குட்டி என்று வாரிசுகள் ஏற்பட்டுவிட்டால் அவனுக்கல்லவா ஆபத்து? தம்பி கட்டைப் பிரம்மச்சாரியாகச் செத்தால்தானே சொத்து அவனதாகும்?

என்ன காரணமோ, சுந்தரராஜாவுக்கும் மணமாகாமலே இருந்தது. ராஜ வம்சத்தைச் சேர்ந்த அவனுக்குப் பெண் தர யாருக்கேனும் கசக்குமா? தாயும் புவனனும் சேர்ந்து தடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவன் எண்ணம்.

தனக்கு எப்படியோ, தம்பி பக்கம் எந்தப் பெண்ணும் போய்விடாமல் கண்காணிப்பது அவனது தலையாய பணியாக இருந்து வந்தது!

அதற்காகவே அவனிடம் சந்தேகமே கொள்ளாத தம்பியிடம் முதலிலேயே வாணி பற்றித் தப்பான அபிப்பிராயம் ஏற்படும் விதமாகப்

போட்டுக் கொடுத்தான். அவன் ஆசைப்பட்ட விதமாகத் தம்பி வெறுப்பைக் காட்டவும் செய்தான்.

ஆனால் அதையும் மீறி, அந்த மாய்மாலக்காரி எப்படியோ புவனனை நெருங்கலானாள்.

இப்போதோ அரண்மனை வரை வந்துவிட்டாள்!

அது மட்டுமா? கையில் பட்டுச் சேலையுடன் சீர்த்தட்டு வேறு!

அண்ணனைப் பார்த்த புவனன் எப்போதும்போலப் பேசினாலும் தாயின் முகத்தில் திரை விழுந்திருந்தது.

தாய்க்கு ஒளித்தொரு சூல் இல்லை. மகனின் சில பல தப்புகள் பற்றித் தெரிந்ததில் இருந்து பெரியநாயகி பெற்ற மகனிடம் மனம் திறந்து பேசியது கிடையாது. இப்போது இந்த வாணியைப் பற்றியும் பேசுவாள் என்று மகன் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் தெரிந்து கொள்ளாமல் விடுவது தப்பாகி விடக் கூடும் என்று தோன்றவே வெளியே போவது போலப் போக்குக் காட்டி, மறைந்திருந்து கவனித்தான். பார்த்தால், அது அரண்மனைக்கு வாரிசு கொண்டு வரும் முயற்சியாக இருந்தது! அதுவும் புவனன் மூலமாக!

வாணியை விட்டுவிட்டு விரைந்து திரும்பி வந்த புவனனைப் பார்த்ததுமே, “பெண் அருமையாக இருக்கிறாளடா!” என்றாள் பெரியநாயகி. “உன் தேர்வு என்றதும் ரொம்ப எதிர்பார்ததேன். அதில் இம்மியளவு கூடக் குறைவில்லை. என்ன ஒரு தெளிவு! என்ன ஒரு தைரியம்! அழகும் இருக்கிறது. இந்த மாளிகைக்கு ராணியாகப் பொருத்தமான பெண்! இனித் தாமதம் செய்யாமல் சட்டுப்புட்டென்று பேசித் திருமணத்தை முடித்துவிடும்மா.” என்று ஆர்வமாகக் கூறினாள்.

மகிழ்ச்சியோடு புவனபூபதி சிரித்தான்.

சந்தோஷம் பொங்குகிறதாக்கும் என்று பெரியவன் கொதிக்கும்போதே, சின்னவன் பேசினான்.

“அவசரப்படாதீர்கள் அம்மா. இப்போதைக்கு அவளுக்குத் திருமணம் பற்றிய எண்ணமே கிடையாது. தங்கைதான் எல்லாம். அவளுக்காகத்தான் இப்படி ஓர் அமைதியான இடம் தேடி வந்தாளோ என்று கூட எனக்குச் சந்தேகம். கூடவே அவளது வளர்ப்பு, சமீபத்தில் நடந்த தாயின் இழப்பு . . . எல்லாமாக இறுக்கிய இறுக்கம் அகன்று இயல்பாகப் பழகவே அவளுக்கு இவ்வளவு நாளாகி இருக்கிறது. அவசரப்பட்டால் ஒரேயடியாக நத்தையாகச் சுருட்டிக் கொள்ளக் கூடும். பொறுமையாக இருங்கள். இன்றே இரண்டு தரம் போட்டு

உடைத்துவிட இருந்தீர்கள். பட்டுச் சேலை வேறு! “

“பின்னே என்னடா? மணம் என்றால் இவளோடுதான் என்றுவிட்டாய்! நான் எப்படிச் சும்மா இருப்பது? “

“ஆனால் பரவாயில்லை. கன்னிச் சீர் அது இதென்று எப்படியோ சமாளித்தும் விட்டீர்களே! அது போதும். ஆனால் வாணி புத்திசாலிம்மா. கவனத்தோடு இருங்கள்.” என்று புன்னகையோடு எச்சரித்தான் புவனபூபதி!

“நான் கவனத்தோடு இருப்பது இருக்கட்டும். நீ கவனம் கவனம் என்று ரொம்பத் தள்ளிப் போடாமல் ஆக வேண்டிய வேலைகளை விரைந்து பார்!” என்றாள் அன்னை!

ஆக வேண்டிய வேலைகளை விரைந்து பார்!

அதைத்தான் வேத வாக்காக எடுத்து சுந்தரம் செயல்படத் தொடங்கினான்.

சிசி கண்ணில் மாட்டிக் கொள்ளாமல் கிரில்லை வெட்டி பரபரப்பைக் கிளப்பினான். புவனனைப் பற்றிக் கதை கட்டினான்.

இத்தனைக்கும் மேலே, கடவுள் அவன் பக்கம் இருப்பதால்தானே, கொய்யாச் செடியும் உரப் பேச்சும் வந்திருக்கிறது. பலர் கேட்கக் குரல் உயர்த்திக் கத்தி, பயங்கரமாகச் சண்டை போட்டிருக்கிறார்கள். முத்தாய்ப்பாக புவனன் கொலை பற்றிப் பேசியும் விட்டான்.

இனி . . . கடைசி வேலைதான் பாக்கி. அது கொலையாகிப் போனாலும் கவலையில்லை.

அவனுக்கு இருந்த அவசரத்தில் சுந்தரம் அன்றே வேலையைத் தொடங்கிவிட்டான்.

அதன் பயனாக அன்றிரவு வாணியின் வீடு தீப்பிடித்து எரிந்தது.

புகையின் நெடியை முதலில் உணர்ந்தவள் வாணியே. புவனனின் பேச்சினால் அன்று அவளது உள்ளம் பெரிதும் காயப்பட்டிருந்தது.

அவனது மாளிகைக்குச் சென்று பெரியநாயகியைப் பார்த்துப் பேசியதில் இருந்து அவளுக்குச் சிறகு முளைத்து வானத்தில் அல்லவா பறந்து கொண்டிருந்தாள்!

கடைசியில் . . .புவனன் என்னவெல்லாம் பேசிவிட்டான்! உர மூட்டை அவள் இடத்தில் கிடந்தால், அவள்தான் வாங்கியிருக்க வேண்டுமா?

யாராவது அவனுடைய விரோதிகள் கூட இதைச் செய்திருக்கலாமே!

மாற்று நிலை எதையும் யோசிக்கவே இல்லாமல் அவளைக் குற்றம் சாட்டி விட்டானே!

அதே சமயம், அவள் அவனுக்காக எவ்வளவு யோசித்தாள்! அவனிடம் ஜீப் இருந்தால் அவன் மேல் குற்றம் சுமத்தலாமா என்று தனக்குள்ளேயே வாதாடி , அவனைக் குற்றமற்றவனாக்கி முடித்தாளே!

அவனானால் . . .

அவன் கத்திவிட்டுப் போனதும் வாணிக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. சுருட்டிக்கொண்டு படுத்துவிடலாமா என்று ஒரே சோர்வு.

ஆனால் அந்தச் சோர்வுக்கு இடம் கொடுத்தால் எழுந்துகொள்ளவே முடியாது என்று உணர்ந்து, பிடிவாதமாக வேலையில் கவனத்தைச் செலுத்தினாள்.

பெரிதாக மனதை உறுத்தியது, அந்த ரசாயன உர மூட்டை!

இதை யார் கொணர்ந்து போட்டிருப்பார்கள்? முதலில் கெடுதல் நேராமல் இதை அழிப்பது எப்படி? அப்புறம் அந்தக் கொய்யாச் செடிகள்! இந்த உரம் பட்டிருப்பதால் அவைகளையும் அழிக்க வேண்டுமா? எல்லாவற்றையும் பாதிப்பின்றி எப்படி அழிப்பது?

அவள் கவலையுடன் அமர்ந்திருந்த போது,  வடிவு வந்து சேர்ந்தாள்.

““அய்யோ, என்னம்மா நீங்க, எதுக்கு இவ்வளோ சோகம்? ராசையா கோவத்துக்கா? நல்லவுங்க கோவம் நெலைக்காதும்மா. ஆனா, இந்தச் சனியன யார் கொண்டாந்து போட்டாங்களோ அவங்க கை கட்டாயமா வெளங்காமப் போயிடும், பாருங்க!” என்று சாபமிட்டாள்.

விலுக்கென நிமிர்ந்து, “உனக்கு உண்மை புரிகிறது இல்லையா வடிவு, இந்த உரம் நான் வாங்கியது இல்லை என்று உனக்கு நிச்சயமாகத் தெரிகிறதுதானே?” என்று கேட்டாள் வாணி.

“தெரியாம என்னம்மா? ராசையா பண்ணயப் பத்தித் தெரிஞ்ச பிறகு, இந்தக் கண்ணராவியை யார் தொடுவாக? ஏதோ கோவத்திலே ராசையா பேசிட்டா, அது நெசமாயிருமா? ஆனா மொதல்ல இந்த உரத்தை ஒரு கண்ணாடிப் பையிலே போட்டுக் காத்துப் போகாமக் கட்டி வச்சிரலாம். உரம் பட்ட மண்ணையெல்லாம் வெடிகாலையிலேயே

நானும் என் புருஷனும் எடுத்துக் கட்டி வச்சிட்டோம்மா. அதாலே செடிக தப்பிச்சுது.”

ஏதோ முரணாகத் தோன்றியது வாணிக்கு. ஆனால் எதை யோசிக்கவும் அலுப்பாக இருந்தது அவளுக்கு.

அன்றாட வீட்டு வேலைகளில் ஈடுபட மனது மறுக்கவே, தன் ப்ராஜெக்டை எடுத்துக்கொண்டு அமர்ந்தாள். ஆனால் அதற்கோ சும்மாவே அதிகப்படியாக மூளை வேலை செய்ய வேண்டும்.

மூளையை அதில் செலுத்திவிட்டால் மற்றது மறந்து போகும் என்றுதான் அவள் வேலையை எடுத்தது. ஆனால் மூளை ஒன்றும் தோன்றாது மந்தமாக இருந்தது.

புதிய யோசனைகள் எதுவும் தோன்றாது போகவே, இலகுவான வேலையாக அதுவரை செய்திருந்ததை சிடியில் பதிவு செய்து எடுத்து வைத்தாள்.

புவனனின் மாளிகையில் அவளது மனம் கவர்ந்த சில தோற்றங்களை வரைந்து வைத்திருந்தாள். அவைகளையும் பிரின்ட் எடுத்து அடுக்கினாள்.

அப்போது அவன் பேசியது, பழகியது என்று அதிலேயே நின்று சண்டித்தனம் செய்த மனதைப் பிடிவாதமாக விரட்டி, ஏதோ வேலை செய்யச் செய்ய வேலை சற்று இலகுவாயிற்று. அப்படியே பொழுதும் போயிற்று.

அக்காவுக்காகவோ என்னவோ, பானுவும் அன்று சீக்கிரமாகத் திரும்பி வந்துவிட்டாள். மனமும் உடலும் அலுத்துக் களைத்திருந்ததால் இருவருமே வழக்கத்துக்கு முன்பாகவே படுத்துவிட்டனர்.

தொண்டை கமறுவது போல உணர்ந்து விழித்த வாணிக்குப் புகை நெடி மூக்கைத் தாக்கியது.

தீ! சட்டென எழுந்தவளுக்கு மறுபடி உடல் தொய்ந்தது.

கொல்லுவேன் என்றானே! அதை விட இப்படிச் சாவது மேல் அல்லவா? அல்லது இதுவும் அவனது வேலைதானோ? இருக்கட்டுமே!

யோசிக்கும்போதே பானுவும் லேசாக இருமினாள்.

அவள் சாவது பெரிதல்ல. ஆனால் பானு?

உடனே எழுந்து பானுவை உலுக்கி எழுப்பினாள்.

தீப்பிடித்திருப்பதைச் சொல்லி, “கிணற்றுக்குப் பக்கத்து

வேண்டாத பொருள் போடும் அறையில் தீ தெரிகிறது. பதட்டப்படாமல் முக்கியமான பொருட்களைத் தோட்டத்தில் தூரக் கொண்டுபோய் வைத்துவிட வேண்டும். வா செய்யலாம். வேகம் தேவை!" என்று தாயின் படத்தை எடுத்துக் கொண்டு போய் வெளியே தோட்டத்தில் தள்ளி வைத்துவிட்டு வந்தாள் அவள்.

அடுத்து லாப்டாப் மற்றும் தொழில் தொடர்பானவற்றை எடுத்துக்கொண்டு வெளியே போய் வைத்தாள். தங்கையும் மூத்தவளைப் பின் தொடர்ந்தாள்.

இப்படிச் சில தரம் பொருட்களை எடுத்து வைக்கும்போதே, தீயின் ஒளியைப் பார்த்துவிட்டு அதை அணைக்கப் பலர் ஓடி வரலாயினர்.

அப்படி விரைந்து வந்தவர்களில் புவனபூபதியும் ஒருவன். ஜீப்பில் அவன் வர, கூடவே லாரிகளில் தண்ணீர் பேரல்கள், வாளிகள் என்று தீயணைக்கத் தேவையானவைகளும் ஆட்களும் வந்தார்கள்.

ஜீப்பைப் பார்த்துவிட்டு, "பானு, சிலது சிடியில் போட்டு பீரோ மேலே வைத்தேன். நீ அதை எடுத்து வந்தாயா?" என்று கேட்டாள்.

"ஐயோ இல்லையேக்கா . ." என்று பானுமதி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வாணி மறுபடியும் வீட்டுக்குள் பாய்ந்துவிட்டாள்.

அதற்குள்ளாக அறைகளுக்குள்ளும் தீ ஜ்வாலை தெரியலாயிற்று.

"ஐயோ அக்கா, அக்கா போகாதேக்கா!" என்று தமக்கையைத் தொடர்ந்து சின்னவளும் உள்ளே ஒட முயன்றாள்.

சட்டென அவளைப் பிடித்த புவனன், அவளை வடிவிடம் ஒப்படைத்து, "இவளை விட்டுவிடாமல் பிடித்துக்கொள்." என்றுவிட்டு புகை மண்டலமாகிவிட்ட வீட்டினுள் சென்றான்.

ஐயோ ஐயோ வேண்டாம் ராசையா என்று பலரும் கத்திக் கதற, மயக்கமாகி விட்டிருந்த வாணியைத் தூக்கிக்கொண்டு புவனன் தீயிலிருந்து வெளிப்பட்டான்.

அப்போதும் எரிந்து கொண்டிருந்த அவனது சட்டைக் கையை யாரோ சாக்கால் அடித்து அணைத்தார்கள்.

ஊரே திரண்டு வந்து அதி வேகமாக வேலை செய்யவே தீயும் விரைவில் அணைந்து போயிற்று.

காவலுக்குச் சிலபேரை நிறுத்திவிட்டு, ஒரு மருத்துவக் குழுவை

அங்கே வரவழைத்து தேவைப்பட்ட உதவிகள் செய்யுமாறு புவனபூபதி ஏற்பாடு செய்தான்.

இன்னும் குடிக்க டீ, பசியடங்க பிஸ்கட்டுகளும் வந்தன.

வாணிக்கு மயக்கம் தெளிந்திருந்தது.

“என்னவெல்லாம் கவனித்துச் செய்கிறார், பாரக்கா.” என்றாள் பானு.

காதே கேளாதது போலக் கண் மூடிச் சாய்ந்திருந்தாள் வாணி.

எத்தனை பேருக்கு எவ்வளவு பார்த்துச் செய்து என்ன? அவளைச் சொல்லாலே சுட்டானே! கொல்லுவேன் என்றானே!

சகோதரிகளை புவனன் மாளிகைக்கு அழைத்துச் சென்றான்.

குடும்ப மருத்துவரோடு வந்தான்.

பானுவை மருத்துவர் பரிசோதித்த வேளையில் தனியே கிடைத்த வினாடியில் “எதற்காக இந்த நாடகம். போகட்டும் என்று சாக விட்டுவிடுவதுதானே? “ என்று வாணி சீறினாள்.

வலியோடு கண் மூடித் திறந்தான் அவன். “என்னைப் பார்த்ததும் நீ தீயினுள் புகுந்ததைப் பார்த்தேன். தனியே சாக விடக் கூடாது என்றுதான் நானும் உன் பின்னே துணைக்கு வந்தேன்.” என்றான் தெளிவாக.

“ஐயோ..!” என்று தன்னையறியாமல் அவன் கையைப் பற்றினாள் அவள்.

பற்றிய கையை அவனும் விடவில்லை.

இருவருக்கும் சேர்த்தே வைத்தியம் பார்த்தார் மருத்துவர்.

முதலில் வைத்தியம் முடித்த பானுவுக்குப் படுக்க ஏற்பாடு செய்துவிட்டு பெரியநாயகி மகனையும் வாணியையும் நாடிச் சென்றாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே, வாணியின் முகம் கடுப்பாகத்தான் இருந்தது.

ஆயினும் சக்கர நாற்காலியைத் தள்ளிக்கொண்டு பெரியவள் வருவதைப் பார்த்ததும் அருகில் விரைந்து, அதைத் தானே தள்ளி வந்தாள்.

“ஏனம்மா? உனக்கே அங்கங்கே காயம், புகையில் மயக்கம் என்றார்களே! ஓய்வாக உட்காரேன்!” என்று பிரியமாகப் பேசினாள் பெரியநாயகி.

“என் பாதிப்பெல்லாம் லேசானதுதான் ஆன்ட்டி. ஆனால் நீங்கள் இந்த நேரத்தில் தூங்காமல் அலைவதில் உடம்பு கெட்டுவிடாதா? போய்ப் படுங்கள்.” என்றாள் வாணி.

“ஆமாம் அம்மா. எல்லாம் காலையில் பார்த்துக் கொள்ளலாம். இப்போது படுத்துத் தூங்கப் போங்கள்.” என்றான் புவனனும்.

“படுக்கலாம் ஆனால் மனதில் இருப்பதை இறக்கி வைக்காமல் தூங்க முடியாதே!” என்றாள் பெரியவள். “வாருங்கள் இரண்டு பேரும் எனக்கு எதிரே இந்த சோஃபாவில் சேர்ந்து உட்காருங்கள். “

புவனன் உட்கார்ந்துவிடவே, வாணியும் மெதுவே சென்று அமர்ந்தாள்.

“பாரம்மா, இதில் எந்தத் தப்பும் புவனனது இல்லை. . .” என்று தொடங்கினாள் பெரியநாயகி. “சந்தேகமாக இருந்தால் இந்த செல்ஃபோனில் பதிவாகி இருப்பதைப் பெரிதாக்கி நன்றாகப் பாருங்கள்.” என்று ஒரு மொபைலைக் கொடுத்தாள்.

பாதியளவு உரம் உள்ள மூட்டையை எடுத்து யாரோ அவள் இடத்துக்குள் போடுவதும், பிறகு பல்ப் மாதிரி எதையோ வாணியின் வீட்டுக்குள் வீசுவதும் . . .

“பெட்ரோல் குண்டு போலத் தோன்றுகிறது. .” என்றபடி புவனன் பெரிதாக்கிக் காட்ட, வாணி அதிர்ந்தாள்.

ஆனால், புவனனுக்கும் அதிர்ச்சிதான்!

“அண்ணனா? அண்ணனேதானா?” என்றான் வருத்தமும் திகைப்புமாக.

“அண்ணனாக நீ நினைத்தாய். ஆனால் அவன் அரக்கனாக இருந்துவிட்டானே.!” என்றாள் பெரியநாயகி வேதனைக் குரலில்.

“சில காலமாகவே எனக்கு அவன் மேல் சந்தேகம் இருந்தது, புவன் கண்ணா. இந்த வீட்டில் எனக்கு ஒரு பிடி தராமல் நீ எதையும் சாப்பிட நான் விட்டதில்லையே, ஏன் என்று நினைத்துப் பார்த்திருக்கிறாயா? உனக்கு வெளியே மற்றவர்களின் பாதுகாப்பு இருந்தது. அதனால் மாளிகையில் நான் பாதுகாத்தேன்.

“மணப்பதானால் இவளைத்தான் என்றாயே, அன்று வெளியே அசைவு தெரிந்தது. அன்றிலிருந்து வடிவிடம் கவனிக்கச் சொல்லியிருந்தேன். கெமிகல் உரத்தைப் பார்த்ததுமே வடிவு உஷாராகி அதை அகற்றி வேறு மண் போட்டு விட்டாள். உர மூட்டையுமே

பாதியளவுதான் கொண்டு வந்திருக்கிறான். முழு மூட்டையைத் தூக்க அந்த உடம்பு வணங்காதில்லையா? வடிவும் அவள் புருஷனும் சேர்ந்து வேலை செய்தார்கள். பெட்ரோல் குண்டு வாங்க விசாரித்ததாகச் சொக்கன் வந்து கொன்னான். ஆனால் இந்த அளவு அவசரம் . . கூடவே இரு சின்னப் பெண்களைச் சாகடிக்கிற அளவுக்குப் போவான் என்று நானுமே எண்ணவில்லை. இதற்கு மேல் . . . போதும்மா. அவனைப் போலீசில் ஒப்படைத்துவிடு. " என்று முடித்தாள் தாய்.

அவள் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்து, "வேண்டாம்மா. அண்ணனுக்குத் திருந்த வாய்ப்புக் கொடுப்போம்." என்றான் பெறாத மகன்.

"விஷப் பாம்பை வீட்டுக்குள் விட்டு வைக்கமுடியாதுப்பா. அவன் வெறி பிடித்தவன். இன்றைக்கு உனக்கு ஒன்று என்றால் நான் செத்தே போவேன். தெரியுமல்லவா? அதனால் விரட்டிவிடு." என்றாள் தாய் பிடிவாதமாக.

அப்போதும், "இல்லைம்மா. அது நம் குடும்பத்துக்கே கேவலமாகிவிடும். ஊரெல்லாம் பேசுவார்கள். இந்த மொபைல் காட்சிகளை வைத்துக்கொண்டு அண்ணனிடம் நடந்ததை எழுதி வாங்கிவிட்டால் அவர் பல் பிடுங்கிய பாம்பு மாதிரி. அதற்கு மேல் எந்தத் தப்புச் செய்யவும் துணிவிராது. போன முறை நான் டெல்லி போனபோது வடக்கே இமயமலை அடிவாரத்தில் ஒரு பண்ணை வாங்கினேன். அதைக் கொடுத்து அண்ணனை அங்கேயே இருக்கச் சொல்லி விடலாம். சொத்து உங்கள் பேரில் இருக்கும். விற்கவோ, அதன் பேரில் கடன் வாங்கவோ முடியாது. ஆனால் நடத்த சுதந்திரம், முழு லாபம் எல்லாம் கொடுப்போம். மெல்ல மாறி விடுவார். உங்களுக்கு ஒரு வடக்கத்தி மருமகள் கூடக் கிடைக்கலாம்! " என்று புன்னகையோடு கூறிய மகனின் கன்னத்தில் தட்டிக் கொடுத்துவிட்டுப் பெரியநாயகி ஓய்வெடுக்கக் கிளம்ப, இருவருமாக அவளைக் கூட்டிப்போய்ப் படுக்க வைத்துவிட்டுத் திரும்பி வந்தார்கள்.

இவர்களுமே தூங்க வேண்டியவர்கள்தான். ஆனால் பேச வேண்டிய மிக முக்கியமான விஷயங்கள் இருக்கவே, தூக்கம் இரண்டாம் இடத்துக்குப் போய்விட்டது.

சோஃபாவில் உட்கார்ந்துகொண்டு அவன் கையை நீட்ட, அவளும் அவன் அருகே சென்று அமர்ந்தாள்.

"அம்மா சொன்னதைக் கேட்டாய்தானே?
"மணப்பதானால் இவளைத்தான்" என்ற பகுதி! அதனால்

இன்னும் கொஞ்சம் பக்கத்தில் . .ஒட்டியே உட்காரலாமில்லையா?”

சிறு முறுவலுடன் அவன் கேட்க, அவளும் நெருங்கி அவனோடு ஒட்டி அமர்ந்து அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

“ஆனால் எனக்கு எல்லா விவரமும் சொல்ல வேண்டும்!” என்று நிபந்தனையும் வைத்தாள்.

அவளது தோளைச் சற்று அழுத்தி,” கட்டாயம்!” என்றான் அவன்.

“வந்து . .அண்ணனேதானா என்றீர்களே, ஆன்ட்டி மாதிரி உங்களுக்கும் சந்தேகம் இருந்ததா?” என்று வினவி, அண்ணாந்து அவன் முகத்தைப் பார்த்தாள் வாணி.

“அம்மா அளவு இல்லை. ஓரளவு குழப்பமான சந்தேகம் இருந்தது. ஆனால் அது தொடங்கியது உன்னால்தான். உன்னைப்பற்றித் தவறாக எண்ணும்படியாக விவரங்களை அண்ணன் தந்ததால் வந்தது.

“முதலிலேயே இந்த வீட்டை வாங்கும் விருப்பம் எனக்கு இருந்தது உண்மையே. ஆனால் அந்த வயதான தம்பதியர் மகிழ்ச்சியோடு இருக்கவும், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்தேன்.

“விற்பனை, ஏற்றுமதி பற்றிய வேலைகளுக்காக அவ்வப்போது டெல்லி சென்று வேலையை முடித்துக்கொண்டு வருவேன். மானில அரசின் தரிசு நிலங்களின் 99 ஆண்டுக் குத்தகை, மற்ற விவசாயிகளோடு கூட்டுறவுறை என்று பெரிய இடத்தை நிர்வகிப்பதால். அடிக்கடி இது பற்றி கணக்குக் கொடுக்க, அனுமதி பெற என்று மத்திய மானில அதிகாரிகளைப் போய்ப் பார்க்க நேரும்.

“அப்போதும் டெல்லியில் அரசாங்க அனுமதி ஒன்றிற்காக நிறைய நாள் காத்திருக்க நேர்ந்தது.

“ அந்தச் சமயத்தில் நீயும் உன் தங்கையுமாய் இந்த வீட்டைவாங்கிக் குடியும் வந்துவிட்டீர்கள். வயதான தம்பதி விற்கிறார்கள் என்பதைக் கவனிக்கவில்லை என்று அண்ணன் மேல் எனக்குக் கோபம்தான். ஆனால் விற்றேவிட்ட பிறகு என்ன செய்வது?

“வாங்கியவர்கள் யார் எப்படி என்று கவனிக்கச் சொன்னேன்.

“அண்ணன் செய்த முதல் தவறு, அப்போது உங்களைப் பற்றித் தப்புத் தப்பாகத் என்னிடம் சொன்னது. அதை நம்பியே முதலில் கண்டபடி பேசிவிட்டேன். அடுத்து மிஸ்டர் பாபு வந்தபோது, அவர் இங்கேயே தங்கிவிட்டதாகச் சொல்லியிருந்தார். திரும்பிப்

போய்விட்டதை மறைத்திருந்தார். அதனால்தான் அன்று பிடிவாதமாக வீட்டினுள் வந்தேன்.

"உன் தாயாரின் மாலையிட்ட படம் . .. அன்றிலிருந்தே எனக்குள் மாற்றம்தான். வேகமான மாற்றம். உன்னைப் பற்றி ரொம்ப நல்லவிதமாக! அதாவது வாழ்க்கையே உன்னோடுதான் என்கிற அளவுக்கு. நீயோ கண்டுகொள்வதாகவே இல்லை!" என்றான் குறையோடு.

ஏதோ நினைவில் வாணியின் முகம் மலர்ந்தது. "உங்களிடம் கற்ற பாடமாயிருக்கும்! நீங்கள் என்ன மனதில் இருந்ததை நெற்றியிலா ஒட்டி வைத்திருந்தீர்கள்?" என்று கிண்டலாகக் கேட்டாள் அவள். "உங்கள் அம்மாவிடம் மட்டும் ரக . . சியமாகச் சொல்லி சுந்தரம் சார் காதுக்கும் போக விட்டீர்கள்! நான் பா . . வம், இப்படி இருக்குமோ, அப்படி இருக்குமோ என்று குழம்பி, கலந்து பேசவும் பெரியவர்கள் இல்லாமல் ஒரு குட்டித் தங்கையை வைத்துக்கொண்டு அல்லாடியது உங்களுக்கு என்ன தெரியும்?"

"ஓ!" என்று ஆர்வமாகப் பார்த்தான் அவன்.

இந்தத் தேவதையை இழந்துவிட இருந்தானே!

முகம் மாற, "உன்னிடம் சாயும்போதே, அண்ணன் மேல் எதிர்மறையாகவும் மனம் மாறியது.  . . அது பற்றி உன்னையும் எச்சரித்தேனே! நீதான் அதை ஏற்கவே இல்லை." என்று முடித்தபோது அவன் குரலில் சிறு கோபம் இருந்தது.

புரியாதவள் போல, "என்னவென்று எச்சரித்தீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"அதுதான் யாரையும் ரொம்ப நம்ப வேண்டாம் என்றேனே. . ."

ஓரக் கண்ணால் புவனனைப் பார்த்தாள். அவள்.

மலரத் தொடங்கிய புன்னகைக்கு நேர் மாறாக, "என்ன?என்ன பார்வை?" என்று அதட்டினான் அவன்.

"சொன்னதைச் செய்தால் கோபப்படுகிறீர்களே! அதுதான் பார்த்தேன்!"

"சொன்னதையா செய்தாய்?"

"ஆ . .மாம் புவனன். நீங்கள் என்ன சொன்னீர்கள்? யாரையும் . . . யாரையுமே நம்ப வேண்டாம் என்றீர்கள்நூறு சதவீதமாகக் கடைப்பிடித்து உங்களையே நம்பவில்லையே!" என்று சிரித்தாள்

வாணி.

“ஐயோ அப்பா! பயங்கரமான புத்திசாலி! தாங்கவில்லை! ஆனால் மூளைதான் கொஞ்சமும் இல்லை! “

“நிச்சயமாய் இதையும் ஒத்துக் கொள்ள வேண்டியதுதான்! இல்லாவிட்டால் உங்களைப் போய் மனதில் வைத்திருப்பேனா?”

“நிஜம்தானா?”

“என்னது?”

“சொன்னது!”

“சொன்னதா? அது என்னதுப்பா? எனக்கு ஒன்றும் கேட்கவில்லையே!” என்று நகைத்தாள் அவள்.

“கேட்கும் கேட்கும். உன் காதைப் பிடித்து வலிக்கத் திருகினால் நன்றாகக் கேட்கும். எப்படித் திருகப் போகிறேன் தெரியுமா?” என்று கேட்டு அவளது காதோரம் குனிந்தவன் கன்னத்தில் மென்மையாக முத்தமிட அவளும் வாகாகத் திரும்பிக் கொடுத்தாள்!

கிராமஃபோனும் ரிக்கார்டும்(பிளேட்) பெரும் உடைமை. பிளெஷர்(காருக்குப் பெயர்.) வில்வண்டி, காங்கேயம் காளைகள்., ஒன்று போல ஜோடிக் காளைகள். போட்டி போட்டுக் கொண்டு, நல்ல ஜோடிக் காளைகளை வாங்குவது. ரேக்ளா வண்டிடூ ஒருவர் மட்டும் விரைந்து செல்ல.

சக்கடா வண்டிடூ உரம் அடிக்க., மூட்டை ஏற்றி வர. மசிப்புட்டியும் பேனாக்கட்டையும் டூஇவனிடம் அரிதாக ஃபவுண்டன் பென்.- தோசையும் இட்டிலியும் பணக்கார வீட்டு ஸ்பெஷல் பலகாரங்கள். பழையதும், சுட்ட கருவாடும், சோறு, ஈயச் சொம்பு ரசம், புளித் துவையல்., கட்டு சோறு., பித்தளைப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுவது. வேலையாட்களுக்கு ஈயச் சொம்பில் தண்ணீர் கொடுப்பது. வீட்டுக்கு வந்தால், வெற்றிலைச் செல்லத்தை முன்னே எடுத்து வைப்பது. வெற்றிலை சிவக்க, கத்தைக் காம்பு சேர்ப்பது. - கஃப் வைத்த ரவிக்கை. தந்தத்தில், கஃப் லின்க்கும் ஜீப்பா பட்டனும்(பொத்தான்)

தண்ணீருக்கு, வீட்டுக்கு வீடு கிணறு. துலாவில், பனை ஓலையால் ஆன தோண்டி கட்டி, நீர் இறைப்பார்கள். அதி காலையில், கிணற்று நீர் வெதுவெதுப்பாக இருக்கும்!

நங்கை உந்தன் ஜோதி முகம் . . . 17வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் குமுதம் சிநேகிதிக்கு என் வாழ்த்துக்கள். போட்டிகள் மிகுந்த இந்தக் கால கட்டத்தில் தனக்கென ஒரு சிறப்பை ஏற்படுத்திக்கொண்டு நிமிர்ந்த நன்னடை போடுகிறாள் குமுதம் சினேகிதி. பத்திரிகையின் முக்கியச் சிறப்பாக எனக்குத் தோன்றுவது, தன் காலில் நிமிர்ந்து நடக்கப் பெண்களுக்கான பல்வேறு வழிமுறைகளைக் காட்டுவது! சிறந்த பணி. காலம் காலமாகத் தொடர என் வாழ்த்துக்கள்!

அப்புறம், பல ஆண்டுகளுக்குப் பிறகு நான் எழுதும் இந்தத் தொடர்கதை. அனேகமாக இதுவே என் கடைசித் தொடராகவும் இருக்கக் கூடும் என்பது என் ஊகம், கருத்து.

இதைத் தொடராக வெளியிடுமுன் ரொம்பவும் யோசித்தேன். சுதந்திரப் போராட்ட காலத்தின் போது நடப்பதாக இருக்கும் கதை இது. ஓரளவு அன்றையப் பேச்சு வழக்குகள், நடைமுறைகளைப் பின்பற்றி எழுதியிருக்கிறேன். அன்றைய நடப்புகள் இன்றைய உலகிற்கு எந்த அளவு பொருந்தக் கூடும்?

ஆனால் சினேகிதி ஆசிரியை லோகநாயகியின் நம்பிக்கையில் தொடர் நாவல் தொடங்கிவிட்டது.

தொடர் எப்படி இருக்கிறது என்பதை வாசகர்கள்தான் சொல்ல வேண்டும். ஏனெனில் எப்போதுமே, எந்த ஒரு கதையை எழுதினாலும், இந்தக் கதை நிச்சயமாக வெற்றி பெறும் என்று என்னால் உறுதியோடு நினைக்க முடிந்ததே கிடையாது. என்னுடைய சில கொள்கைகள், சிறு வயதில் இருந்து என்னுள் நிலை பெற்றிருக்கும் கோட்பாடுகளுக்கு உட்பட்டே எழுதுகிறேன். இது எல்லோருக்கும் பிடிக்கும் என்று எப்படிச் சொல்வது?

இந்த நாவலும் அப்படித்தான்.

பொதுவாக வாழும், வாழ்ந்த மனிதர்களைப் பற்றிக் கதைகளில் நான் எழுதுவது இல்லை. இதில் ஒரு சிறு விதி மீறல் இருக்கிறது. என் மரியாதைக்கு உரிய ஒருவரே இதன் கதாநாயகன்.

இந்த நாவலைத் தொடங்குமுன் ஒரு சிறு முன்னுரை எழுதவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் சில பல காரணங்களால் அப்போது என்னால் அது இயலாது போயிற்று. ஆனால் அதன் காரணமாகவே கட்டாயமாகத் தொடர் முடிந்ததும், ஒரு பின்னுரையை எழுத எண்ணியிருக்கிறேன். அதைக் கட்டாயமாகப் படியுங்கள். ஓர் ஆச்சரியகரமான தகவல் அதில் இருக்கிறது.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக, சில சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் பரிச்சயம் எனக்கு ஏற்பட்டது. அவர்கள் மூலமாகப் பல சுவாரசியமாக தகவல்கள் எனக்குக் கிடைத்தன. அவைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் முயற்சியே இந்த நாவல் எனலாம்.

மற்றபடி . . எப்போதும் போலக் குமுதம் சினேகிதிக்கு உங்கள் பேராதரவு பெருகிக்கொண்டே இருக்கும் என்பது என் உறுதியான நம்பிக்கை!

எனக்கும் இருக்க வேண்டும் என்பது என் ஆவல்!